சிவமயம்.

பாண்டிநாட்டிலுள்ள

வில்வாரணியம் என்னும்

# திருவேடகப்புராணம்

மூலமும்

வசனமும்

இவை

தஞ்சாவூர், பிர்ம்மஸ்ரீ,

சதாவதானம்,

## சுப்பிரமணிய ஐயரவர்கள்

இயற்றியவை.

தேவகோட்டை, ஜெமீன்தார்,

ஸ்ரீமான்,

அள. அரு. ராம. அருணாசலஞ் செட்டியாரவர்கள்,

ஸ்ரீமான்,

மூப். மூ. முத்தையா செட்டியாரவர்கள்,

வேண்டுகோளால்

பிரசுரிக்கப்பெற்றன.

தஞ்சை

ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம் பிரஸ்.

1926.

மறைமலையடி
MARAIM
LIB
MADR
சென்

உ

# செய்யுள் சோதனைபத்திரம்.

| பக்கம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 6 | கசஞ் | சஞ்ச. |
| 10 | 21 | கூவிளம் | கூவிளம். |
| ,, | 32 | வேளாண்மாக்கன் | வேளாண்மாக்கள். |
| 19 | 36 | பலசவித்துத் | பலசெவித்துத். |
| 26 | 31 | தோயலுக் | கோயிலுக். |
| 30 | 24 | யென்னின் | யென்னிகர். |
| 40 | 63 | கானதுட் | கானத்துட். |
| 50 | 28 | பெருளா | பொருளா. |
| 63 | 13 | யுலியூரை. | புலியூரை. |
| 67 | 39 | பதிவணக்கி | பதிவணங்கி. |
| 70 | 67 | வளளலாஞ் | வள்ளலாஞ். |
| 71 | 75 | புரங்கோலங் | புரக்கோலங். |
| 80 | 56 | தூற்றுணிவைப் | நூற்றுணிவைப். |
| 88 | 7 | திணைவளக் | திணைவளக். |

## வசனம்.

| பக்கம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 91 | 20 | முகலிய | முதலிய. |
| 102 | 33 | கன்னிகாதானஞ் | கன்னிகாதானஞ். |
| ,, | 34 | விண்ணர் | விண்ணவர். |
| 104 | 12 | தேவகோகம் | தேவலோகம். |
| ,, | 15 | தருமமண்றென | தருமமன்றென |
| ,, | 16 | தலைவியே | தலைவியே. |
| 109 | 19 | அஃதென்னையெளின் | அஃதென்னையெனின். |
| 115 | 6 | யாக்கிளியாகிய | யாக்கினியாகிய. |
| 116 | 28 | யவடந்தனன் | யடைந்தனன். |
| 118 | 17 | திருஞாளசம்பந்தர் | திருஞானசம்பந்தர். |
| 119 | 10 | மெள்றனர் | மென்றனர். |
| ,, | 18 | வேயுறுதோளிபங்கள் | வேயுறுதோளிபங் கன் |
| ,, | 31 | மதுைாக்குள் | மதுரைக்குள். |
| ,, | 19 | அவள் | அவன். |

உ

சிவமயம்.

# சிதம்பரம், ஸ்ரீ மீனாக்ஷி தமிழ்க் காலேஜ்,

பிரின்ஸிபால்

மகாமகோபாத்தியாய

பிரம்மஸ்ரீ,

## வே. சாமிநாத ஐயரவர்கள்

இயற்றிய

## சிறப்புக்கவி.

விருத்தம்.

பூமிவி ளானப் பேர்த்தலத் திறைக்குப் புதுப்பணி பற்பல புரியுந்
தேமலி யருணா சலவணி கேசன் சிந்தையி லின்பமீக் கூரத்
தாமலி திருவே டகப்புரா ணத்தைத் தூத்தமிழ்க் கவிதையாற் சொற்றான்
நாமலி தஞ்சை விப்பிர மணியாஞ் சுப்பிர மணியனா வலனே.

உ

சிவமயம்.

திருவேடகம்,

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# தேவாரப் பதிகங்கள்.

திருச்சிற்றம்பலம்.

பண்—கோல்லி.

வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய றிருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவ
ரின்னிசை பாடலா ரேடகத் தொருவனே. (1)

கொடிநெடு மாளிகைக் கோபுரங் குளிர்மதி
வடிவுற வமைதர மருவிய வேடகத
தடிகளை யடிபணிந் தாற்றுமி னன்பினா
லிடிபடும் வினைகள்போ யில்லைய தாகுமே. (2)

குண்டலந் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூ ரேடகங்
கண்டுகை தொழுதலுங் கவலைநோ யகலுமே. (3)

ஏலமார் தருகுழ லேழையோ டெழில்பெறுங்
கோலமார் தருவிடைக் குழகனா ருறைவிடஞ்
சாலமா தவிகளுஞ் சந்தனஞ் சம்பகஞ்
சீலமா ரேடகஞ் சேர்தலாஞ் செல்வமே (4)

வரியணி நயனிநன் மலைமகண் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோ டாணலி யாகிய
வெரியவ னுறைவிட மேடகக் கோயிலே (5)

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய வேடகத்
தையனை யடிபணிந் தாற்றுமின் னடர்தரு
வெய்யவன் பிணிகெட வீசெளி தாகுமே. (6 7).

தடவரை யெடுத்தவன் றருக்கிறத் தோளடர்
படவிர லூன்றியே பரிந்தவர்க் கருள்செய்தான்
மடவர லெருக்கொடு வன்னியு மத்தமு
மிடமுடைச் சடையின னேடகத் திறைவனே. (8)

பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தனி
றன்னுளார் வைகையின் கரைதனிற் சமைவுற
வன்னமா மயனுமா லடிமுடி தேடியு
மின்னவா றெனவொணு னேடகத தொருவனே. (9)

குண்டிகைக் கையினர் குணமிலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்
வண்டிரைக் கும்மலர்க் கொன்றையும் வன்னியு
மிண்டைசேர்க் குஞ்சடை யேடகத் தெந்தையே. (10)

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீ
ரேடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவலலார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்.

---

## தீயிலிட்ட பதிகம்.

### திருநள்ளாறு.

பண்—பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

போகமார்தத பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்தத பைங்கணவெள் ளேறறண்ணல் பரமேட்டி
யாகமார்தத தோலுடையன் கோவண வாடையின்மே
னாகமார்த்த நமபெருமான் மேயது நள்ளாறே. (க)

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடைய
னண்புநலலார் மல்குகாழி ஞானசம் பந்தனல்ல
பண்புநள்ளா றேததுபாடல பத்துமிவை வல்லா
ருண்புநீங்கி வானவரோ டுலகிலுறை வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## அப்பொழுது திருவாய்மலர்ந்தருளிய பதிகம்.

பண்—சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
னளிரிள வளரொளி மருவுநள் ளாறர்த நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே (க)

சிற்றிடை யரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரு
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## வையையிலெதிர்த்துச்சென்ற பதிகம்.

பண்—கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
வாழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. (க)

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
வெல்லார்க ளும்பரவு மீசனை யேத்துபாடல்
புல்லார்க ளும்மதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்
வல்லாகள் வானோருல காளவும் வல்லரன்றே. (உ)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவேடகத்தைப்பற்றிய தேவாரவைப்புக் குறிப்புக்கள்.

---

### திருவதிகைவீரட்டம் காப்புத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமுஞ்
சிக்காலி வல்லந் திருவேட்டியு
முண்ணீரோ ரேடகமு மூறலம்ப
ருறையூர் நறை யூரரணை நல்லூர்
விண்ணோர் விடையான் விளமர்வெண்ணி
மீயச்சூர் வீழி மிழலைமிக்க
கண்ணார் நுதலார் கரபுரமுங்
காபாலி யாரவர்தங் காப்புக்களே.

அற்றன்றி யந்தண் மதுரைத்தொகை யாக்கினானுந்
தெற்றென்ற தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்புநோக்கிப்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே.

---

பொது, திருப்பாசுரம்.

**க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்.**

திருச்சிற்றம்பலம்.

உறையூரிற் சித்தீச்சர நள்ளாறு
 காரையூர் நாகேச்சுர நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை
 தோணிபுரந் துருத்தி சோமீச்சர
உறையூர்கட லொற்றியூ ரூற்றத்தூ
 ரோமாம் புலியூரோ ரேடகத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூருங்
 கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் முப்பத்தெட்டாவதாகிய கழுவேற்றிய திருவிளையாடலில் 52 முதல் 72 வரையும் உள்ள செய்யுட்களால் திருவேடகத்தின் வரலாறுகளிற் சில புலப்படும்.

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலில், நகரச்சிறப்பில், 2-ம் செய்யுளிலும், 63-வது சமணரைக் கழுவேற்றிய திருவிளையாடலில் 64-வது செய்யுள் முதலியவற்றில் திருவேடகத்தின் பெருமையும், அத்தலத்தில் வழிபட்டோரின்னாரென்பதும், கூறப்பெற்றுள்ளன. பின்னுள்ள செய்யுட்களாலும் திருவேடகத்தின் பெருமை விளங்கும்.

**சேதுபுராணம், திருநாட்டுச்சிறப்பு ஐந்தாவது செய்யுள்.**

பாடகக்கா லுமைமங்கைப் பாலரு விதழ்ப்பவளப் பாலனோடு
கோடகப்பொய்யமண்வாது குறித்தபொழுதெதிரேற்றவகொண்டபாடற்
சூடகக்கைம் மடமாதர் துணைவரொடுங்குடைந்தாடுந் துறைநீர்வையை
யேடகப்பொற் சிவபுரியுமியம்புதமிழ்த் திருநாட்டினிடத்ததாகும்

---

**திருக்காளத்திப்புராணம், பரத்துவாசதரிசனமுரைத்த அத்தியாயம் 60-வது.**

சிகரியை யரவஞ் சிறல விதுவுஞ்
 செழுமறை வனத்துழிநாம்பொன்
முகரியந்துறைவற் றெழுமெனை முன்னாண்
 முயன்றதுபூசையென் றுணர்ந்தோ
வகல்சிறைக் கலுழன் றானும்வா னரனை
 யடுகல வேடகந் தனினும்
பகவனைப் பணிந்தாங் கிங்கிது பரமற்
 பணிந்தென் றுணர்ந்தனபகுவோ.

---

## திருப்பெருந்துறைப் புராணம்.

### கைமிசமுனிவர் பூசித்தபடலம்.

மாலமையப் பாசுரந்தங் கியவாய்மற் றதுகாண்மின்
கிலமெனும் பெயர்பூண்டு கிளர்தான மிதுகாண்மின்
சாலவிருத் தேசுரப்பேர் தரித்தார்கண் ணுதுகாண்மின்
கோலமிகுத் தரமுகற்சார் கோசமங்கை யதுகாண்மின்.

---

உ

இந்நூலாசிரியர், தஞ்சைச் சதாவதானம்

## சுப்பிரமணிய ஐயரவர்கள்

### இயற்றிய நூல்கள்.

இராமாயண வெண்பா.
காளையார்கோவிற் புராணம்.
கோட்டூர்ப் புராணம்.
இலுப்பைக்குடிப் புராணம்.
மூற்றூர்ப் புராணம்.
உப்பூர்ப் புராணம்.
திருமருகற் புராணம்.
திருவேடகப் புராணம்.
கோவை முத்துவிநாயகர் இரட்டைமணிமாலை.
தேவைப் பிள்ளைத்தமிழ்.
மாணிக்கவாசகர் நான்மணிமாலை.
கோயிலூர்ப் பிள்ளைத்தமிழ்.
புதுவைப் படிக்காசுநாதர் இரட்டைமணிமாலை.
அட்டைசுவரியமாலை.
சிர்ங்கேரி மடாலய சாரதாபீட ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
தோத்திர நமசிவாயபஞ்சகம்.

இன்னும் பற்பல பிரபந்தங்களும் அநேக சித்திரக் கவிகளுமிருக்கின்றன.

---

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியரின் மாணாக்கர் சித்ரகவை பதிய பூஷணம்
பெங்களூர் மகா-ள-ஸ்ரீ B. N. கோபாலநாத ஐயரவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொன்பூத்த பொழில்வில்வ வனத்தேட கத்தலத்தின் புராணம் வேய்ந்தான்
மின்பூத்த பலயாப்பின் விருத்தமே தங்களன்றி வேறு கவித்
தென்பூத்த புலவரெடுத் துரைக்குமிலக் கணவிருத்தஞ் சேராவண்ணம்
மன்பூத்த தஞ்சைச் சதாவதா னச்சுப்ர மணிய வேளே.

---

உ

# படல அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பாயிரம் | 1 |
| 2. | நாட்டுப்படலம் | 8 |
| 3. | நகரப்படலம் | 14 |
| 4. | நைமிசப்படலம் | 22 |
| 5. | பிரமன் சிருட்டிபெறு படலம் | 27 |
| 6. | வியாசர் வரம்பெறுபடலம் | 32 |
| 7. | பராசரப்படலம் | 47 |
| 8. | குசகேதுப்படலம் | 55 |
| 9. | திருஞான சம்பந்தப்படலம் | 60 |
| 10. | ஏடெதிர்ந்த படலம் | 73 |
| 11. | பிரமதீர்த்தப் படலம் | 83 |
| 12. | தலவிசேடப் படலம் | 85 |
| 13. | முனிவர் பூசனைப்படலம் | 88 |


ஆக படலம் 13-க்கு பாட்டு 649.

உ

சிவமயம்.

வில்வாரணியம் என்னும்,

# திருவேடகப் புராணம்.

## பாயிரம்.

### விநாயகர்.

பொன்பூத்த சடைமவுலிப் பூதநாயகனுந்தண் பூதரத்துத்
தென்பூத்த பைங்கொடியைத் திருமணஞ்செய் காலையிடர்சேராவண்ண
முன்பூத்த பூசனையை யாற்றக்கொண் டெவ்வெவர்க்கு முன்னோனாகி
மன்பூத்த வில்வவனத் தேடகவிநாயகனை வணங்கிவாழ்வாம். (க)

### திருவேடகநாதர்.

மாமேவு மார்பினனு மலர்மேவுசார்பினனும் வளங்கொள்கற்பக்
காமேவு புரந்தரனு மாதியவிண் ணவரெவருங் காலந்தோறு
மீமேவு திருமுன்னர்த் தொழுதுடல நெருங்கிநிற்ப வேட்டநல்கும்
பூமேவு வில்வவனத் தேடகநாதன்பொற்றாள் போற்றிபோற்றி. (உ)

### ஏலவார்குழலம்மை.

(வேறு)

பாலதா யுறைபரன்றன் பங்கினிடப் பால்கொண்டு
ஞாலமே லைந்தொழிலு நடத்தாற்ற லைக்கொள்ள
மாலதா யவன்மேனி வலப்பால்கொண் டேடகம்வாழ்
ஏலவார் குழலம்மை யிணையடித்தா மரைபோற்றி. (ங)

### பொன்னம்பலவாணர்.

(வேறு)

சம்ப ராரிவே தாபதிச் செல்வமு
மம்பொன் னுள்தவ னுள்பதிச் செல்வமு
நம்ப னுடக நாடித் தரிசிப்பான்
செம்பொ னம்பலஞ் சேர்வாரீ கைப்பொருள். (ச)

### வெள்ளியம்பலவாணர்.*

வள்ளியம்பல வாய்க்கறங் காலவாய்
கள்ளியம்பல ருந்திரு நன்மணத்
துள்ளியம்பல ருண்ணக்கூத் தாடிய
வெள்ளியம்பல வித்தனைப் போற்றுவோம். (ரு)

### சிவகாமியம்மை.

(வேறு)

கஞ்சமே லவன்கைக்கஞ்சக் கஞ்சவொத் தியற்றக்கண்ணுங்
கஞ்சன்றண் ணுமைமுழக்கக் கதிர்மன்றி னெம்மானாடற்
கஞ்சமாம் விழியாற்கண்டு களித்திடப் பானின்றாள்காட்
கஞ்சமென் னிதயமாகுங் கஞ்சத்துண் மலருமன்றே (சு)

### தக்ஷிணாமூர்த்தி

ஈரிரு மறையினுள்ளே யிறுதியா யியம்பியுள்ள
ஈரிரு பொருளினுண்மை யினைக்கல்லா லடியில்மன்னி
ஈரிரு பவத்தின்றோற்ற மினியென்றுஞ் சாராவண்ணம்
ஈரிரு முனிவர்க்கோது மெந்தைதாள் சிந்தைவைப்பாம் (எ)

### வைரவர்.

அஞ்சிரு பிறப்பைக்கண்டு மன்னவ னேமகத்தின்
விஞ்சவி யேற்கத்தக்க மேலவ னெனும்விண்ணோர்க்குச்
சஞ்சிதப் பிறவியொன்றுஞ் சார்பிலான் சிவனேயென்ன
நெஞ்சுறத் தேற்றுஞ்சூல நேர்கைவைரவன்றாள்போற்றி (அ)

### வாதுவென்ற விநாயகர்.

(வேறு)

மாது வென்ற வலப்பாகன் சைவமே
மீது வென்றுசம் பந்தன்வி டேடுநீர்
மீது வென்றெதிர் மேவி வரச்சமண்
வாது வென்றகை மாவடி வாழ்த்துவாம். (கூ)

---

* வள்—ஒலிக்குறிப்பு. இயம்—வாச்சியம், கூத்தின் ஒலி.

## முருகக்கடவுள்.

ஏறுமாவிடை யேறு பராபரன்
நீறுசேர்தரு நெற்றி விழிக்கணே
சீறுதீப்பொறித் தேசினிற் றோன்றிய
ஆறுமாமுகத் தான்பதம் போற்றுவாம். (௰)

இதுவுமது.

## திருப்பரங்குன்றம்.

அரங்கிரி தருமணங் காடை நீட்டினான்
கரங்கிரி யெனுஞ்சிதக் களிற்றன்பூ வீட்டினான்
சிரங்கிரி யாவிதிச் செயலிற்றாழ் சேட்டினான்
பரங்கிரி யமர்குகன் பாதமுண் ணாட்டினாம். (௧௧)

இதுவுமது.

## திருச்செந்தில்.

நந்திலம் பதிகமா ஞாட்பிற் சூர்முதல்
வெந்திலம் பதிவற வீட்டி வேழமே
லந்திலம் பதியெனா வமர ரேத்திடச்
செந்திலம் பதிவரு சேயைப் போற்றுவாம் (௧௨)

இதுவுமது.

## திருவேரகம்.

வீரக மலையுரம் வேட்கு மாலய
னாரக மலைவிலா தேத்து நாதற்குப்
பூரக மலைதராப் பொருள் பகர்ந்தரு
ளேரக மலைமுரு கீசனை வாழ்த்துவாம். (௧௩)

* அரங்கு—சபை, அணங்கு—துரோபதை, நீட்டினான்—திருமால், கரம்—துதிக்கை, சிதம்—வெண்மை, களிற்றன்—இந்திரன், சிரம்—தலை, கிரியாவிதி—பூசாவிதி, தாழ்—வணங்குகின்ற, சேடு—பெருமை. நந்து இல்—அழிவில்லாத, அம்பு—பாணங்கள், ஞாட்பு யுத்தம். இல்லம்பதிவு—வீட்டில்வசிப்பு அந்தில் என்றது அசைஇடைச்சொல், சேயை—இளமையாகிய முருகக்கடவுளை. வீரகமலை—வீரலட்சுமி உரம்—மார்பு, நார்—அன்பு, மலைவிலாது—மயங்காமல், நாதற்கு—சிவபெருமானுக்கு, பூரகம் அலைதரா—இடைகலை நாடியிற்சரிக்காத, பொருள்—பிரணவப்பொருளை; முருகு ஈசன்—இளமையுடைய கடவுள், முருகீசன் எனக்கொள்க.

இதுவுமது.

## திருவாவினன்குடி.

உருவா வினன்குத வும்பிரான்பயந்
தருவா வினன்புரந் தரன்பணிந்திடு
மொருவா வினன்குதித் தோடு கோபுரத்
திருவா வினன்குடிச் சேயை யேத்துவாம். (௧௪)

இதுவுமது.

## குன்றுதோருடல்.

தரையனைத் தாடல்கொ டார காசுர
வரையனைத் தாடலை யறுத்து வீழ்த்தியே
விரையனைத் தாடலை வேய்ந்த வேற்கர
வரையனைத் தாடலெம் மானை வாழ்த்துவாம். (௧௫)

இதுவுமது.

## பழமுதிர்சோலை.

மாலைமா மலையுமிந் தியங்கண் மாய்க்குநூல்
சாலைமா மலையமா தவற்குச் சாற்றியே
வேலைமா மலையவொள் வேலிற் கூறுசெய்
சோலைமா மலையுமா சுதனைப் போற்றுவாம். (௧௬)

## திருநந்திதேவர்.

(வேறு)

காத்திரம் பிற்கொளாக் கதியினுக்கின்னரே
பாத்திர மென்றுளே பார்த்தரன் சன்னிதித்
தோத்திர மண்டபத் துள்ளுறச் சுட்டுநீள்
வேத்திரக் கைக்கண வேந்தனை யேத்துவாம். (௧௭)

---

* உரு ஆவி—வடிவையும் உயிரையும், பிரான்—பிரமன், பயந்தரு ஆவினன்—பாலைத்தரும் பசுவின் கூட்டங்களையுடைய திருமால், புரந்தரன்—இந்திரன், ஒருவா—நீங்கி, இனன்—சூரியன். தரை—பூமி, அனைத்து—அவ்வளவும், ஆடல்—புகழ்ச்சொல்லை, கொள்—கொண்ட, தாள்தலை—கால்களையும் தலையையும், நைத்து—தேய்த்து, ஆடலை—வெற்றியை, வரை அனைத்து—மலைகள்முழுதும் (குன்றுதோருடல்) ஆடல்—விளையாடலையுடைய, எம்மானை—எமது முருகக்கடளை. மால்—மயக்கஞ்செய்கின்ற, ஐமா—ஐந்துயானைகளை, மலையும்—ஒத்த. இந்தியம்—இந்திரியம், மாய்க்கும்—போக்குகின்ற, நூல்—ஞான நூலை, சாலை—தவச்சாலை, மா—பெரிய, வேலைமா கடலிற்றோன்றிய சூரனாகிய மாமரம், மலைய—போர்செய்ய, சோலைமாமலை—பெருமைபொருந்திய பழமுதிர்சோலை, உமாசுதனை—பார்வதிபுத்திரனாகிய முருகக்கடவுளை, போற்றுவாம்—துதிப்போம்.

### கலைமகள்.
(வேறு)

தாமரைக் கண்ணனென்னச் சாற்றிடு மொருவ னுந்தித்
தாமரைக் கண்ணுதித்தோன் தாலுவி லுறைந்துநான்கு
தாமரைக் கள்வார்ந்தென்னச் சதுர்மறை பெருக்கிவெள்ளைத்
தாமரைக் கண்வாழ்வாள்தாட் டாமரை சென்னிசேர்ப்பாம்()

### அகத்தியமுனிவர்.
(வேறு)

நதியுளேயுயர் சாநவி ஞான்றிழி யிமயத்
துதியு மாமணத் துதக்கிழிந் திட்டுநேர் நிறுத்தற்
கதிக மாதவ முனியிவ னென்றர னுப்பப்
பொதிய மேவிய குறுமுனி யடிசிரம் புனைவாம். (௧௯)

### திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.
(வேறு)

தமிழ்மறை தீட்டுமேடாந் தனிக்கதிர் வேலைவையை
யுமெதி ரேறவேவி யமண்மத வவுணக்கூட்டஞ்
சமழ்வுற வேரறுத்துச் சைவமாம் விண்ணைக்காத்துக்
குமரவேள் கூறுமென்னக் கூறுஞ்சம்பந்தர் காப்பாம். (௨௦)

### இதுவுமது.
(வேறு)

இந்திரன்றரத் தந்தநாள் குடையவெள் ளிபமேற்
கந்தனேறிய சீரெனக் களாநனி கறுத்தான்
றந்தளித்தருள் வெண்மணிச் சிவிகைதாய்த் தாளப்
பந்தர்மேவுசம் பந்தர்சம் பந்தர்தாள் பணிவாம். (௨௧)

### திருநாவுக்கரசு சுவாமிகள்.
(வேறு)

பூவுக்கரசெனப் போர்புரி மாநகர்ச்
சோவுக்கரசர்சீர் துச்சமென் றேயெனும்
பாவுக்கரசெனப் பாடுவோ ரும்புகழ்
நாவுக்கரசெனு நாவலர்ப் போற்றுவாம். (௨௨)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

(வேறு)

கோல்முட னேயன்னங் கூவின் னகழ்ந்துபறந்
தோலமெனக் காணா துழன்ற வடிமுடிக
ளேலமுறு மெய்ப்பரவை யில்வாய்ப் படிகாணச்
சீலமுயர் பாசுரங்கள் செப்பினா ரடிபோற்றி. (௨௩)

### மாணிக்கவாசக சுவாமிகள்.

(வேறு)

ஓதலூ ரறியார்தம்மைக் கின்னர ரெனப்பொய்பாடிக்
காதலூ ரலைந்துகால்கள் கன்றுவோர் போலாதோங்கும்
போதலூர் புகுதப்பெம்மான் பூங்கழ லடிகள் பாடும்
வாதலூ ரடிகள்கஞ்ச மலரடி பாடிவாழ்வாம். (௨௪)

### சண்டேசுரர்.

திகம்பர னுடுத்தவிழ்த்த சேரையும் புனைந்துபின்னித்
திகழ்ந்தெறி செம்மற்றூரு மின்சுவை கண்டுநீத்த
புகழ்ந்திடு மிச்சிற்சோறும் பொற்படாங் கற்பமாலை
தருஞ்சுவை யமுதாக்கொள்ளுஞ் சண்டேச னடியுட் கொள்வாம்

### அறுபத்துமூவர்.

(வேறு)

அத்துறக்கத்தி னைசையு மற்பமென்
றெய்த்துமெய்த்தநம் மீச னடிக்கன்பு
நத்தியீறிலா நந்தமே சாரறு
பத்துமூவர் பதாம்புயம் பற்றுவாம். (௨௬)

### வில்வ தலவிருக்ஷம்.

(வேறு)

பூமேவு நான்முகத்தான் போற்றுபுகழ்த் தோணிபுர
மாமேவு காழிநகர் வந்தருளுஞ் சம்பந்தர்
பாமேவு மேடெதிர்ந்துப் பாய்ந்துவரும்வையைப்பால்
மீமேவு மேடகத்து வில்வதரு வடிபணிவாம். (௨௭)

---

* காத்திரம்—உடல், சோ—மதில், உமா—உமாதேவி.

## பாயிரம்.

### வாழ்த்து.

(வேறு)

வாழ்க நான்மறை யவ்வழி மாமகம்
வாழ்க விண்முகில் வார்தரு தண்மழை
வாழ்க பார்நிறை மன்னுயி ரேடகம்
வாழ்க நற்சைவ மாண்பயிர் வாழ்கவே. (௨௮)

### நூற்பயன்.

(வேறு)

ஏவருந் துதிக்குமேற்றத் தேடக நாதன்காதை
மேவுறும் புராணந்தன்னை வேட்கையாற் படிப்போர்கேட்போர்
மாவரு மிம்பர்நீணாள் வைகியெண் போகந்துய்த்துத்
தேவரு மெதிர்கொண்டாடச் சிவபதஞ் சேர்ந்துவாழ்வார். ()

### அவையடக்கம்.

கல்லையு மலராக்கொண்டு கடுவினை யமுதாக்கொண்டோ
னல்லிசை யேடகச்சீர் நாட்டிடு மெனாதுபுன்மைச்
சொல்லையு மினியவென்னச் சுரந்தருள் பெய்துகொள்வான்
புல்லுபொய் யடிமையில்லாப் புலவர்க்கு மியல்பதாமே. (௩௰)

ஈடிலா தெதிர்த்துவந்த வேட்டினை முன்னமேகொண்
டேடக நாதனாம்பே ரெய்ந்தவ னவன்புராணம்
பாடியல் பிலேன்சொல்பாவைப் பரியோர்பாப் பொருளின்றேனும்
ஏடகத் தெழுதியுள்ள வியல்பினா லகமேற்பானால். (௩௧)

### சிறப்புப்பாயிரம்.

இஞ்சிசூழ் மாடமோங்கு மேடக நாதன்காதை
செஞ்சொலாற் றமிழிற்றந்தான் சீவற்ச கோத்திரத்தான்
தஞ்சைவா ணன்சதாவ தானிசுப் பிரமண்யச்சீர்
விஞ்சபி தானம்பெற்றோன் வேதநற் கலைகற்றோனே. (௩௨)

பாயிரம் முற்றிற்று.

# நாட்டுப்படலம்.

கடல்புடை யுடுக்குமிந்தக் காசினி யெல்லாம்பூத்த
வடமிக ருதாத்தேல வார்குழ லம்மையெந்தா
யிடமுறப் பெம்மான்வாழு மேடக மாதியாம்பல்
தடமலி தலங்கொள்பாண்டித் தமிழ்நாட்டி னணிசொல்லுற்றாம்.()

சங்கா னிடக்கணுகித் தண்கதிர் பரப்புந்தூய
திங்களின் வழியுதித்துத் தீவிட மகற்றுநிம்பத்
தொங்கல்பூண் டுலகங்காப்போன் றோற்றத்து ளொன்றுமீனத்
தங்கொடி யுயர்த்ததென்ன ராள்வது பாண்டிநாடு. (௨)

பூமிசை யுயிர்கள்பாவம் போக்கிவெண் டிரண்டு
காமிய மனைத்துநல்குங் கன்னியா குமரியோடு
தோமிலா நதிகடம்மிற் றாயதாங் தெளிந்தநீத்தத்
தாமிா பன்னிப்பல்கால் தவழ்வது பாண்டிநாடு. (௩)

உலகெலாம் தன்னவாக வுள்ளன வெனினும்பாரி
லிலகுசீ தனச்சீரேமே லெனத்திரு வுள்ளங்கொண்டே
சுலவுவெண் மதிமுடித்தோன் சுந்தர பாண்டியப்பேர்
நலமுறச் செங்கோலோச்சு நாடதாம் பாண்டிநாடு. (௪)

தந்தியின் வெண்கோடாதி தந்திடு முத்துஞ்சோறு
தந்திடு செந்நெலாதி தந்திடு முத்துமிப்பி
தந்தமுத் தைப்போற்பூணுந் தாத்தவன்றுதலாலே.
செந்தமிழ் நாடுமூன்றுட் சிறந்ததுபாண்டிநாடு. (௫)

எழின்மிகு வளங்கொண்மற்றை யேற்றமாநாடனைத்து
மிழிபிலா தாளுமன்னர்க் கிப்பெயரின்றென்றோத
வழிவழி யாகித்திங்கள் மரபினிற்றோன்றிவந்த
செழியர்தங் குலத்தோராளச் செழிப்பது பாண்டிநாடு. (௬)

வேறு.

அமரர் கூாளுர் போக்கிட வத்திமாச் செருத்த
குமா வேளின்வெண் சேவலங் கொடியெனப் படர்ந்து
பமர வாரிதி பருகியக் குமானூர்பரியா
யமர்மயூரமொத் தெழுந்ததா லம்பாத் தெழிலி. (௭)

* சேரநாட்டில் யானைக்கொம்பின் முத்து.

எழுந்தகார்மயில் சிறைவிரித் தென்னவான் படர்ந்து
கொழுங்கைவேலென மின்னியவ் வீரர்வெங் குரல்போ
லழுந்திடிக்குரன் முழக்கியெவ் வீரரு மன்பிற்
றொழுங்கைவீரவா குவின்சிலை துணையவில் வாங்கி. (௮)

முன்னெடுத்ததன் கொடும்படி வத்தின்மேன் முருகன்
புன்னுபல்கணை யெய்தெனக் கோடையாம் பகைமேல்
வென்றிடுந்தனை யொத்தகஃதும் வென்றிடப் பல்லம்
பன்னகேகயம் பெய்தெனப் பெய்ததப்புதமே. (௯)

பெய்த வம்புமா ரியிற்கொடுங் கோடைபோய்ப் பிலத்தி
லுய்த லுள்ளியுற் றொளிந்ததவ் வுயர்பிரதாபச்
செய்தி யெங்கணும் பரந்தெனச் செறிந்தன கோப
மெய்து மஃதலால் வெய்யிலின் கோபமற் றின்றே. (௧௦)

அம்புதம்பொழி பெயன்மழை வெள்ளநீ ரருந்திப்
பம்புவார்கமர் வாயெலா மூடினபரவி
யும்பர்தோய்முடிப் பொதியமா மலைமிசையுற்ற
கும்பயோனிசெந் தமிழெனக் குலவினவருவி. (௧௧)

பல்லவாமரு வித்திரண் மலைபடுபண்ட
மொல்லெனக்கொடு சாரலிலொன்றதாய் மருவிப்
புல்லுமன்னது புல்லினும் பலவினை போக்கு
நல்லதாம் பொருநைப்பெயர் நண்ணியூர்ந்தன்றே. (௧௨)

ஆனவந்நதி முல்லையா மணிநிலம் புகுந்து
தானநாயக னுள்மரு தத்திடைத் தவழ்ந்து
மீனுலாவுறு குழிக்கழி நெய்தலை மேவி
மானமார்கடல் நாயகன் றனைமணந் ததுவே. (௧௩)

வம்புலாங்கடம் பணிபிரான் மாணவக்கும்ப
சம்பவத்தவன் சம்பவ முறுபொருநைச்சீர்
செம்பொனூலுமே செப்புதற் காவதோசெழுமை
பம்புநாணில வளங்களுந் தெரிந்தவா பகர்வாம். (௧௪)

## குறிஞ்சி
(வேறு)

குறவர்தம் மாதைவேட்டுக் குவலயத் தவாவெறுத்த
துறவர்மெய்ப் படிவம்பூண்டு துன்னிமின் றுலாவுந்தான
மறமலி யிதுவேயின்பு மன்புமிக் களித்ததென்று
மிறைவனாய் முருகனெம்மா னென்றும்வாழ் வதுகுறிஞ்சி. (கரு)

நம்மினத் துள்ளேயொன்று நல்லூர்தி யாய்ச்செவ்வேளைச்
செம்மையிற் சுமந்துமாண்பிற் சிறந்துள தத்தேவுக்கே
யிம்மலை நிலமுரித்தா மெனத்தோகை விரித்தோகைத்தா
யம்மயிற் குழாங்கள்கூடி யாடுவ வெழிற்குறிஞ்சி (கசு)

வெஞ்சம ரசுரர்க்காற்றா விண்பதிக் கூர்தியாந்தெவ்
வஞ்சயி ராவதந்தா னப்பகை தொலைத்தவாறே
ரெஞ்சனேர் தேவசேனா பதிக்கியா மூர்தியென்னாக்
குஞ்சரக் குலங்கள்பல்ல குலாவுவ வெழிற்குறிஞ்சி (கஎ)

வட்டவெண் பளிங்குப்பாறை மத்தியிற் பாய்ந்த நாகந்
தட்டியு மதனுட்டோன்றுஞ் சாயையைத் தன்னினத்தொன்
றெட்டிமுன் பேபுகுந்த தென்றறைந் தத்தநோவப்
பட்டுமத் தொழிலோவாதப் பகைமைக்குத் தீர்வுமுண்டோ (கஅ)

மேடெலாஞ் சமப்படுத்தி வேலிகள் சுற்றும்வேழக்
கோடுக ளானெருங்கக் கோலியப் புலங்களுள்ளே
யிடில்புன் றானியத்த வித்துக்கள் வித்தியந்த
வேடுவர் மிகுந்துகாய்க்கு மேதகு பலன்கொள்வாரால் (ககூ)

## முல்லை.
(வேறு)

பன்னு தன்றிருத் தோளணி மணிப்பணி பல்ல
மன்னி யுள்ளன வென்னினு மணஞ்சிறிதேனுந்
துன்ன லின்றெனச் சூழ்ந்துதேன் றுழாய்கமழ் வனமீ
தென்ன மாதவ னென்றும்வீற் றிருப்பதா முல்லை (உய)

கொன்றை கூவிளங் கடம்புமந் தாரமே வன்னி
யென்ற பற்பல விருக்கத்துள் வில்வமே யேற்றந்
துன்று மவ்வனஞ் சூழ்தரு மேடகந் தன்பால்
நன்றமையந்ததா னனியுயர் வுள்ளதம் முல்லை (உக)

க்கண்றுடை பூண்களக் கோக்களின் காற்குளம் படிகன்
மண்டு பல்சிறு குழிகளிற் றேங்கிய மாநீ
ரண்டு மோர்துளி யண்ணிஞோர் மேற்படி லவர்தம்
பண்டை வெம்பவம் பாற்றிடு மாண்பது முல்லை (௨௨)

குஞ்சரக்குலங் குழூமிவாழ் வுறுவரைக் குறிஞ்சி
கஞ்சமல்குதேன் பெருக்குறு கழனிநீண் மருதம
மஞ்சுநெய்தலிம் முநநிலத் தசுந்தரும் வரைந்தே
யஞ்சுவெளவியத் தாற்சுரி யாக்குமம் முல்லை (௨௩)

மல்லலார்செழும் பூவைகளேநனி மலர்ந்து
புல்லுனீனிற மேனியணுகிய புத்தேள்
நல்லநாப்பினை யிந்நில நண்ணிப தென்னச்
சொல்லுநீர்மைய தாயெழில் துன்னுமம முல்லை. (௨௪)

## மருதம்.

(வேறு)

விண்ணுல கத்திலுள்ள விரிகதிர் மணியுங்கோவு
மொண்ணிதி யுங்காவுந்தா மொவ்வொன்றி ரண்டைந்தென்ன
வெண்ணிடப் படுமவ்வெல்லா மிங்குப்பற் பலவாமென்றுவ்
வெண்ணியிந திரன்றன்னுள்கை யேற்றதா மருதவேலி. (௨௫)

எக்காலும் வற்றுநீர்மை யெய்ந்துள பொருநையின்கால்
மிக்காரு மான்மியங்கண் மேவிய வையையின்கால்
தக்கார்கள் புகழுந்தூய்மை சார்கிரு தமாலையின்கால்
முக்காலு முழுக்காலாக முடுகிவந் ததுநீர்வெள்ளம். (௨௬)

பெருகிமேற் பொங்கிவந்த பெருவெள்ள மெங்குமேவி
வருதலும் விரைந்துநோக்கி மண்வெட்டொடு கரும்பொன்னுய
கருவிகைக் கொண்டுபோந்து கவின்மடை வாய்திறந்தே
மருவிய கழனியெல்லா நிரப்பினர் மள்ளர்மன்னே. (௨௭)

உழுதொழிற் கருவியெல்லா மொருங்குகொண் டுழவர்யாரும்
பழுதுறுப் பறையினுர்ப்பும் பம்பைதண் ணுமையினுர்ப்புங்
குழுமிய வுழத்திமார்வாய்க் குரவையி னுர்ப்புமுந்நீர்
முழுவொலி யோடெதிர்ப்ப வுழுதொழின் முயலலுற்றார். (௨௮)

தண்ணிய வயல்கடோறுந் தனித்தனி யிரட்டையேறு
திண்ணிய கலப்பைமேவிச் செறிநுகத் தடியிற்பூட்டிப்
பண்ணிய விடக்கைமேழி பற்றியே வலக்கைதன்னில்
முன்னுதிக் கோல்பிடித்து முயன்றுழு தனரம்மள்ளர். (௨௯)

வலமதா யேரைத்தூண்டி மன்னநேர் குறுக்கும்போக்கிப்
பலநெடுஞ் சால்கடோன்றப் பன்முறை யுழுதுசேறாய்
நலமுறச் செய்துபின்னர் நவின்றிடு மேடுபள்ளத்
தலமுறப் பரம்படித்துச் சமப்படுத்தினர் செய்யெல்லாம். (௩௦)

கதிருதிர் பலாலத்தாலே கட்டிய கோட்டையுள்ளில்
முதிர்தரு செந்நெல்வித்து முளைகளை யள்ளிமாக
பதிபெறுந் தந்தெய்வத்தைப் பணிந்துவாழ்த் திசைத்தாமோத
மதிகரித் தாலவால மனைத்திலும் விதைத்தார்மள்ளர். (௩௧)

மருவுதா யூட்டும்பாலூண் மடுத்துடல் வளருஞ்சேய்போற
பருவநே ருணர்ந்துமள்ளர் பாய்ச்சிடு நீரருந்தித்
திருவநீண் முளைகளெல்லாஞ் செழியவாய்த் தளிர்த்துப்பைம்பொ
னுருவெனப் பசுமைமேனி யுற்றுமேல் வளர்ந்தமன்றே (௩௨)

இளம்பயிர் நாற்றையெல்லா மிரும்புறம் கருங்கான்மள்ளர்
உளங்களிப் புவகைமேவி யுழத்தியர் தம்மோடுற்றுக்
களந்தரு குரவைபாடக் கைகளாற் பறித்துப்பற்பல்
வளந்தரு முடிகளாக்கி வரிந்துதம் முடிமேற்றாங்கி. (௩௩)

புலந்தரு கழனிதோறும் புகுந்துவெவ் வேறுப்பத்தங்கள்
குலந்தரு கடைச்சிமாதர் குரவைக ளார்ப்பும்பம்பை
வலந்தரு பறைகளார்ப்பு மலிவுற நிலத்திற்செவ்வி
நலந்தரு வண்ணநோக்கி நட்டன ரன்னார்மன்னோ (௩௪)

பள்ளர்தாம் பருவநோக்கிப் பாய்ச்சுறு நீரருந்தி
யெள்ளலில் பயிர்களெல்லா மெழுந்து மேலாய்வளர்ந்த
வொள்ளிய வவற்றிற்கூறு யுற்றெழு களைகடம்மைப்
பள்ளியர் குழாங்குழாமாய்ப் பரவியே களைதலுற்றார். (௩௫)

பங்கயங் குவளையாம்பல் பானல்சை வலங்கடங்க
டிங்களோர் முகங்கைகால்கள் திருக்குவாய் கூந்தலென்னு
மங்கநேர் பகையென்றன்று தவனியுள் ளுயிர்க்கூணல்குந்
துங்கமாம் பயிர்த்தெய்வென்னச் சூழ்ந்தவை களைந்தாரன்றே ()

களையெலாங் கட்டபின்னர்க் கழனிதோறும் பைங்கூழ்
வளமுறும் பயிர்களெல்லா மதியின்றண் கதிர்கள்பாய
விளைதருங் கருவுட்பற்றி மேற்பல கதிர்களீன்று
இளர்மணி யுண்முதிர்ந்து கிழ்த்தலை குனிந்தவன்றே. (௩௭)

முற்றிய பருவநோக்கி முழுவலி மள்ளர்கையிற்
பற்றிய கூனிரும்பாற் பலனுறு கதிர்கடம்மை
முற்றவு மரிந்தரிந்து முன்னரி பல்லவைத்துத்
தெற்றென வவற்றையெல்லாஞ் சேர்த்துப்பல் சும்மையாக்கி. ()

சென்னிமேற் சுமந்துகொண்டு சீர்திகழ்களங்கள்போந்து
மன்னியக் குய்த்துப்பல்போர் வான்முக டளாவ வேய்ந்து
பின்னவற்றினைப் பரப்பிப் பிணையலிட் டுறுகடாப்போர்
துன்னிய மேதிதம்மாற் றுவைப்பித்தார் களமர்மன்னோ. (௩௯)

நண்ணிய பலாலம்வேறு நலத்தசெந் நெற்கள்வேறாப்
பண்ணுறப் பிரித்துக்காற்றிற் பதடிகள் போகத்தூற்றி
யெண்ணுபொன் மலைகள்பல்ல வெனப்பல்போர் குவித்துப்பின்ன
ரண்ணுறு மரக்கால்கைக்கொண் டளந்தள விட்டார்மன்னோ. ()

ஆழிகைக் கொண்டுகாவ லாற்றிடு கின்றவேந்தர்க்
கேழிலொன் றானமான வெண்ணிலொன் றளந்துமற்றைச்
சூழுமூர்க் காணிதெய்வத் தொல்விழாச் சிறப்புகட்கீந்
தேழையர்க் கையநல்கி யேய்ந்தமற் றறமுஞ்செய்து. (௪௧)

மிகுந்துள செந்நெல்முற்று மேவுபல் பண்டியேற்றித்
தொகும்படித் தம்மாடங்க டொறுஞ்சேர்த்துத் தென்புலத்தார்
தருங்குல தெய்வமொக்கல் சார்விருந் தோம்பிப்பின்னர்
மகிழ்ந்துள தமையுங்காக்கும் வாழ்க்கைகூர் குடிகளெங்கும். ()

காற்றிசை யுறைவாக்கொண்ட கட்செவிக் கரசுதாங்கும்
ஊற்றிசை நீர்வற்றும லூறுந்தண் கடல்சூழ்வைப்பில்
நாற்றிசைத் தம்முளோற்ற நண்ணிய தாயிலங்கு
மேற்றிசைப் பாலனுள்ளை மேயது கழிநீர்நெய்தல். (௪௩)

அங்கில மாதரிப்பி யணிமுத்தி னொடுவிராய
புன்னைநன் முகைகள்விற்பார் புனையவற் றினைக்கொள்வோரும்
அன்னவேற் றுமையோரார்கொண் டகன்றணிந் திடுவார்பின்னர்
மன்னதிற் புலராதுள்ள மணிகளாற் செல்வராவார். (௪௪)

கேதகை மலர்கொக்கென்னக் கிளர்தரக் கழியினுள்ளாற்
போதரும் வாளையங்கும் புனலினுட் டோன்றவற்றின்
மேதகு நிழல்கண்டு வெரீஇமீண்டு மேலைவாவும்
ஓதுறிற் பகைகளையொன்று முண்மையி னென்றுமங்கண். (௪௫)

வலைபிழைப் பவர்தம்மோதை வாருநீ ருலர்த்துமோதை
மலையெனக் குவிப்பாரோதை மற்றவற் றினைவிற்போர்தாம்
விலைபக ரோதைநான்கு மேவியே யொன்றாய்க்கூடி
யலைமலி முந்நீரோதை யடக்குமே ரோதையாமால். (௪௬)

வெற்பகத் திருள்களின்றேன் மிகுமுல்லைக் கோக்களின்பால்
பொற்பமர் மருதக்கன்னிப் பூங்கனிச் சாறுநெய்தற்
பற்பல்சங் கங்களின்வாய்ப் பாய்ந்துமுத் தமிழுந்தங்கும
அற்புதச் சங்கம்பல்ல வாமெனப் பொலியுமன்றே (௪௭)

வரைசெயற் கரியவாய வண்மைகூர் பாண்டிநாட்டின்
தரைபுகழ் சீரைமுற்றுஞ் சாற்றிட வல்லார்யாரே
யுரைசெயச் சேடனுமொல் லுறாதெனி னும்மவையைத்
திரையெறி யேடகச்சீர் தெரிந்தவா றெடுத்துச்சொல்வாம் (௪௮)

நாட்டுப்படலம் முற்றிற்று.

## நகரப்படலம்.

செய்யதா மரைமகள் சேர்ந்துறை வீடுவெண்
மெய்யதா மரைமகள் மேவிவா ழில்லக
முய்யலா மெனவுணர்த் துள்ளவ ரெண்ணியாங்
கெய்தலா மெனுந்திரு வேடக மாநகர் (௧)

பங்கய னாதிய பண்ணவ ரேவருந்
துங்கமா முனிவருஞ் சூழ்வது நாடொறுந்
திங்கள்சூ டியமுடிச் செஞ்சடைத் தேவனு
மெங்கணு யகன்றிரு வேடக மாநகர். (௨)

சாற்றுநல் லறமெலாஞ் சார்ந்தவர்க் கீவது
நாற்றிசைப் பொருளெலா நண்ணினோர்க் கீவது
போற்றுசீ ரின்பெலாம் புக்கவர்க் கீவதவ்
வேற்றவீ டீவதவ் வேடக மாநகர். (௩)

விஃகெனு முற்பவ மேற்பவ மிப்பவ
முத்துயர்ப் பவங்களில் மொய்பவம் போக்கிடு
முத்தள வில்லுவ மொத்தகான் சூழ்வதா
மெத்தலத் தினுமுய ரேடக மாநகர். (௪)

நாடக மெங்கணு நாட்டுறு சைவமே
சூடக மாமெனச் சூழ்வுற வையையி
லோடக நீரெதி ருற்றசம் பந்தர்பா
ஏடக மேற்றதா மேடக மாநகர். (௫)

ஆயிரக் கெட்டுகே வாரம்வேய் மாதல
மேயவற் றுள்ளிரண் டேழ்தலம் வேய்பனுள்
தேயமே லோங்கிய செப்பற் றுள்ளுயர்.
வேயதா மான்மியத் தேடக மாநகர் (௬)

### புறநகர்.

காசினி சூழ்கருங் கார்க்கட லொப்பன
தூசிலா விந்நகர்ச் சூழ்ந்துள பொங்கர்கள்
வீசிமேல் வெண்படாப் பாய்விரித் தூர்கலம்
மாசிலக் காவின்மேல் வாழும்வெண் கொக்கர்கள். (௭)

வானுள வைவகை வண்டரு வூடுசார்
காநிறை பாதவங் கண்டிவை வேறெனு
மூனமி லாவுணர் வுற்றிடா தம்மலர்த்
தேனுணும் வண்டினுற் றேருவா ராங்குளார். (௮)

### நந்தவனம்.

நாடொறும் விண்ணுளார் நாடியே வந்துவந்
தேடக நாதனை யேத்திமீண் டேகுவார்
பாடது கண்டவர் வதிதரப் பன்மலர்
வீடருள் நந்தன மேவுவ பல்லன (௯)

### தடாகம்.

சீர்த்துள கல்வியுஞ் செழியமா செல்வமுஞ்
சேர்த்தொருங் கோரிடச் செறிவரி தேயெனல்
தீர்த்துணர் தாக்கலை மகள்திரு சேக்கையாப்
பார்த்துறை யிருமரை பல்குநீர்த் தடம்பல. (௰)

யானைக்கூடம்.

தேவரே வர்க்குமுந் றேவனு முதன்மையை
மேவுமே ரம்பனம் முகத்தினை மேயதால்
தாவிலம் மாண்பினும் மாக்களுட் டலைமையை
மேவினு மெனுமத வேழவா ரிகள்பல. (கக)

குதிரையிலாயம்.

(வேறு)

அம்பரத் தெங்கணு மடருடுக் கணத்துள்மூ
வொன்பது முதன்மையை யுற்ற வவற்றுண்முன்
பம்புடு நம்படி வத்தாற் பகட்டதென்
றம்பரில் வாம்பரி யுறையிலா யம்பல. (கஉ)

இரதசாலை.

(வேறு)

விண்ணுள வோராழித்தேர் வெய்யவன் றனைச்சுமக்குந்
திண்ணிய வீராழித்தேர் திறுதற் கணற் சுமக்குந்
தண்ணிய குணர்த்துவேந்தர் தமைச்சுமந் தூர்வோநாமென்
றெண்ணுசீர் நாலாழித்தே ரிறைகொள்சாலைகள் பற்பல்ல. (கஙு)

பதாதி.

நாற்படை கையிற்றுங்கி நண்ணிய பகைவரைத்தாங்
தோற்படையாது வென்று துவசங்கைத் தலம்பிடித்துக்
காற்புரம் வீரகண்டைக் கழலினைப் பூணும்வன்மை
மேற்படு மிலக்கவீரர் மேவுசாலைகள் பற்பல்ல. (கச)

ஒட்டகம்.

ஈரிரு படைசாலெம்மோ டெதிர்த்தழிந் திட்டதெவ்வர்
வீரசு வர்க்கத்துள்ளே மேவினு ரவரைப் பார்த்துப்
பாரிடை யுள்ளார்க் கோதும் பான்மைபோல் முகமேல் னோக்குஞ்
சீருள வொட்டகங்கள் செறியுஞ்சாலைகள் பற்பல்ல. (கரு)

களிறுபாய் பரிமாதேர்க்குக் கருவிகளமைக்குஞ்சாலை
யினிர்தரு வீரகண்டை வீரர்கள் கையிற்றுங்கு
மொளிதிகழ் வாள்முன்னுதி யுரைக்கும்வெம் படைகளாக்கும்
பனிலாச்சாலையன்னூர் பயிலுங்கல்லூரிபல்ல. (கசு)

## இடைநகர்.

புடையுடை யாகச் சூழும் புறநக ரத்தின் சீரை
யடையவுந் தேர்ந்துரைப்பா ரவனிமே லியாவருள்ளார்
இடையிலாச் செழுமைவாய்ந்து சேணிலத் துளாரும்போற்று
மிடைநகரத்தின்சீரு மியன்றவா றெடுத்துச்சொல்வாம். (கஎ)

பூப்பொலி நீர்ப்பூமல்கும் பொய்கையுந் தீந்தேன்மாரி
யாப்பவிழ் மலர்பெய்யுத்தி யானமு மாதராருங்
கோப்பினா டவருமாடற் குலவுஞ்செய் குன்றுமோவ
மீப்புனை மாடனாட்டும் விளங்குவ பல்லவாங்கே. (கஅ)

மதமிகு களிற்றினோடு மையல்செய் பிடிக்கணங்க
ளிதமுற வொன்றுகூடி யீர்ம்புனல் குடைதல்மானப்
பதமணி கழலினாரும் பைங்கொடி யிடையினாரு
நிதமல ரோடைவாவி நீர்குடைந் தாடுவாரால். (ககூ)

மாடமே னிலையுலாவு மானன்னார் காளையன்னார்
கோடடூர் வான்றருப்பூக் கொய்திட்டுப் பின்னராங்கு
மாடுறும் வானயாற்று வண்புன லாடியக்கா
வாடிலாக் கனியுமுண்பர் மறுமைப்பே றிதன்மேல்யாதோ. (உ0)

மேனிலை மாடத்தும்பர் மேற்பயில் மடவார்செவ்வி
வானவர் நோக்கித்தங்கள் மாதரென் றணுகிக்கிட்டிக்
கானிறை யன்னார்கூந்தற் கமழ்மலர் புலர்தல்கண்டுள்
மானமுற் றுள்கியாமே மடவாரென் றுரைத்துமீள்வார். (உக)

மதிச்சிலை மாடத்தின்மேல் மன்னுதூசியை வான்றிங்கள்
உதித்தெழு நாட்களிற்றன் னொண்கதிர் பரப்பிமண்ணும்
மதிக்கதி ரில்லாநாட்கண் மங்கையர் வதனத்திங்க
ளுதித்தந்நீர் பெருக்கியாங்க ணூற்றமற்றதனை மண்ணும். (உஉ)

ஒண்ணிலா முற்றத்தாடு மொண்டொடி யாரெறிந்த
பண்ணமை கந்துகங்கள் படர்குழி பிழைத்துப்பாய்ந்து
விண்ணர மடவார்கொங்கை மிசைப்புடைத் திடலெம்மாத
ரெண்ணெழின் முலைக்குத்தோற்றீ ரெனப்புடைத் திடுதல்போலும்

பொன்னினா லமைந்தமாடம் போதனைச் சிவனுநீல
மன்னினா லுயர்ந்தமாட மாதவன் றனைக்கடுக்கும்
மின்னுசெம் மணிவேய்மாட மெய்யுருத் திரனைமானு
மிந்நகர்ச் சீர்காண்பான்சூழு மூர்த்திவர் திறத்தார்போலும். (உச.)

இடைநக ரச்சீர்முற்று மியன்றவா றெடுத்துரைக்க
நடையில்கா லிலியர்யீர்ந்த நாவுளர்ஞரி மென்மை.
யுடையகா லுண்டிகொள்ளு மொருவனு லியலுங்கொல்லோ
இடையிலா வுண்ணகர்ச்சீர் இளத்துதுந் தெரிந்தவாறே. (௨௫)

உண்ணகர்.

(அகழி)

உலகெலா மளந்தமாய னுறுமவதாரம் பத்து
ளிலகுநீர் வாழ்மீன்கூர்ம மெனவுரு வெடுத்துவேலைத்
தலையொளித் திட்டதெவ்வர் தமைக்கண்டு கொன்றுனிந்நீ
ரலையக மூள்ளொளிப்பி னகப்படு வாரோதேரார். (௨௬)

இந்நகர்ச் சூழகப்பா வினைச்சூழ்ந்த வகழிதன்னைப்
பண்ணுகா சினியிற்கண்டோர் பகராறு மானத்தாலே
மன்னில வுலகைச்சூழ்ந்த சக்கர வாளவெற்பைப்
பின்னயி லாதுசூழ்ந்து பெரும்புறக் கடலுண்டென்பார். (௨௭)

(மதில்)

அன்றுமா லயனுமீச னடிமுடி காணக்கீழ்மேற்ச்
சென்றிடு மளவிற்றென்னச் செப்பவோர் காட்டாங்கஞ்சப்
பொன்றிகழ் வில்வக்கானிற் போற்றுமே டகத்தைச்சூழ்ந்து
நின்றிடு மதிலின்கீழ்மேல் நீளடி முடிகள்மாதோ. (௨௮)

அம்மதில் வளர்ந்துசெல்கா லடியண்டத் தடிமுட்டிற்றம்
மும்மையா முலகும்போற்று முடியண்ட முடிதட்டிற்றால்
தம்மெதிர் வழிச்செல்வோர்க்கோர் தடையுறின் மேற்செல்வாரோ
விம்மவை நின்றவாங்கீழ் மேற்செலா தாங்கேயாங்கே. (௨௯)

பரத்தையர்வீதி.

திருத்தகு மேடகப்பேர் சேர்ந்தவிந் நகரிடத்துப்
பரத்தைய ரில்லின்வாயிற் பருஞ்சுவர் தம்மிற்றீட்டு
முரைத்துள புணர்ச்சிபேத வோவியங் காணிலெல்லாம்
விரத்திசெய் மேலோரேனு மீட்டும்வந் திடாரோகீழே. (௩௰)

பலதனங் கொடுத்தேபின்பற் பலதனங் கொள்வார்நாய்கர்
விலைமினார் தனமிரண்டை வீழுங்கா முகர்க்குக்காட்டிப்
பலதனங் கொள்வார்காட்டிப் பறிக்கும் விஞ்சையை யின்னார்பா
லிலகுறத் தாங்கற்றுக்கொண் டிலர்கொடுத் துக்கொள்ளன்னார். ()

* இடை – ஒப்பு. தேரார் — பகைவர். நாய்கர் — வணிகர்.

### வேளாளர்வீதி.

கங்கையின் குலத்திற்றோன்றிக் கழறுநல் லாசாரத்துத்
துங்கமா நடைநயந்து தூயநல் லறங்கணாடிப்
பங்கமி லாதசெம்மைப் பயன்பெற முற்குலத்துப்
புங்கமு வர்க்குமேவல் புரிகுவர் வேளாண்மாக்கள். (௩௨)

விருந்தினர் தம்மைநாடி வேண்டித்தம் மில்லழைத்துப்
பொருந்துநல் வரவாமென்னப் புகழ்ந்துகால் கழுவுநீர்தந்
திருந்திடச் செய்தோராறு மின்சுவை யுண்டியென்று
மருந்திடச் செய்துபின்ன ரருந்துவர் வேளாண்மாக்கள். (௩௩)

### வைசியர்வீதி.

நதிபூல வற்றினுள்ள நற்புனற் பெருக்கனைத்து
மதிர்திரை மேற்புனைந்த வாழியிற் புகுதலென்னப்
பொதிதரு சிறப்புமேவும் புறத்துள வெங்நிலத்து
நிதிகளுங் குழுமிமல்கி நிலவுவ வணிகர்வீதி. (௩௪)

பற்பல தேயத்துள்ள பற்பல பொருளுங்கொண்டு
பற்பல தேயத்துய்த்துப் பற்பல விலாபங்கொள்வா
ரற்புவேனர் வர்த்தகத்து மனுவள வேனுநட்டம்
விற்பதி லடையார்நீதி மேவுறும் வணிகமாக்கள். (௩௫)

கண்டிகை பூதிபூண்டு கதிநல்கைந் தெழுத்துமுள்ளத்
தண்டிய வன்பினோடு மாவர்த்தி பலசவித்துத்
தொண்டுசெய் யடியார்க்காணிற் றாயமா தேவனென்றுட்
கொண்டுபூ சித்தாநந்தங் கூடுவா ரந்தநாய்கர். (௩௬)

### அரசர்வீதி.

மங்கல முரசவோதை மதம்மதக் களிற்றினோதை
பங்கமி லாத்துரங்க பந்தியின் கனைப்பினோதை
செங்கதிர்ப் பொற்றட்டேய்ந்த தேருரு ளுருமோதை
வெங்கழற் பதாதியோதை மிக்குறு மன்னர்வீதி. (௩௭)

கீழ்க்குடி யரசர்வந்து கிளர்திறை யளக்குமார்ப்பும்
வாழ்த்திடு கவிவாணர்க்கு மாபொரு ளளக்குமார்ப்புந்
தாழ்த்திடு தெவ்வர்தோற்றுச் சாற்றிடு துதியினார்ப்பும்
ஆழ்த்தகுமன் னரினார்ப்பை யமிழ்த்திடு மரசர்வீதி. (௩௮)

மாமறை யோதலோடு மாமக மியற்றலேற்றோர்
தோமற நல்கலென்னுஞ் சொல்லுமுத் தொழில்கைக்கொண்டே
யேமமா ரந்தணள ரிருமூன்று தொழிலும்பின்னோர்க்
காமிரண் டொன்றுங்காத்திட் டளிப்பனவேந்தர்மாடம். (௩௯)

## அந்தணர்வீதி.

வேதநான் கினையுமோதி விளம்புசாத் திரங்களாறுங்
காதலிற் கற்றுச்சைவா கமமிரு பானெட்டுந்தேர்ந்
தோதிய வாறேயவ்வவ் வொழுக்கங்க ளவ்வாறாற்றி
மேதகு மந்தணளர் வீதிகள் பொலியும் பல்ல (௪௰)

ஓதுமுத் தீமுகத்தா லும்பரார்க் குணவு நல்கும்
போதெழு புகையேவானிற் போர்த்தெங்கும் போர்த்துவெய்யோன
சீதமில் கிரணமாற்றித் திகழ்கருக் கொண்டுபாரில்
மாதமும் மாரிபெய்ய வளர்ப்ப வந்தணர்தம் மாடம். (௪௧)

## ஆதி சைவர்வீதி.

ஆகமத் துரைத்தவண்ண மரியதந் திரங்கள்யாவு
மாகெழு வேதத்துள்ள மந்திர வழிச்செய்தம்மை
போகனு லயபரார்த்த பூசையான் மார்த்தபூசை
யாகிரண் டாற்றுமாதி சைவர்வா ழுகங்களோர்பால். (௪௨)

## வேதபாடசாலை

மன்னிய வுதாத்தத்தோடு மருவிய வநுதாத்தம்மேல்
பன்னுசு வரிதமென்னப் பகருமுச சுரத்திேனாடு
துன்னுநான் மறையிருக்கைத் தூயமா ணவர்களோதி
யுன்னியத் தியனஞ்செய்யு முயர்பாட சாலையோர்பால். (௪௩)

## ஆகம பாடசாலை.

சாற்றுமெந் நூலினுக்குந் தலைமைவாய்ந் துள்ளவென்னப்
போற்றுசை வாகமங்கள் புகன்றிடு மிருபானெட்டும்
பாற்றுளி நீரினின்று பருகிடு மராளம்போன்று
மேற்றிகழ் சீடர்கற்கும் வியன்பாட சாலையோர்பால். (௪௪)

## தமிழ்வேத பாடசாலை.

வாதவூ ரடிகளீந்த வாசக மனனுநந்தனும
போதசம் பந்தர்தந்த பொதிசுவை யமுதுமோவா
மோதநா வரசர்நல்கின் மொழிப்பாலு மாரூர்ப்பெம்மா
னோதிய கரும்பின்சாறு மூட்டுசாலைகள் பற்பல. (௪௫)

---

* மராளம்—அன்னப்பறவை. மோதம்—மகிழ்ச்சி.

## வேதாந்தமடம்.

மறையினுண் குச்சியாக வழங்குப நிடதம்பல்ல
வறைசெயு மவற்றி னுள்ளே யாயிர முயர்ந்தவாகு
மிறையிலா வவற்றுணூறு மேலவா மவற்றெண்ணான்கும்
விறல்கெழு தசமுமோதும் வேதாந்த மடங்களோர்பால். (௪௬)

## சைவ சித்தாந்தமடம்.

சூத்திர மெனவெவைக்கு நிகழ்சைவத் துறுசித்தாந்த
சாத்திரம் பதினான்குந்தேர் சமயாசா ரியர்முகத்தாற்
பாத்திரர் கற்றற்கென்னும் படியொழுக் குடையசீடர்
சேத்திர மென்னக்கற்குஞ் சித்தாந்த மடங்கள்மல்கும். (௪௭)

## குருபூசைமடம்.

நாவலூ ருதித்தெழுந்த நம்பியா ரூரனோது
தேவளஞ் செறிதேவாரத் திருத்தொண்டத் தொகைப்பொதிந்த
பாவளர் புகழ்வேயாறு பத்துமூன் றடியார்மற்றைக்
கோவடி யாருக்காற்றுங் குருபூசை மடங்களோர்பால். (௪௮)

## அன்னசத்திரம்.

பொன்னிற மமைந்தசூபம் பொரிக்கறி பாயசம்தேன்
முன்னறு சுவைகளோடு மருவிய வடிசிலென்றும்
முன்னவ ரென்னவேத மொழியு மந்தணர்க்குமற்றைப்
பின்னவர் தமக்குமூட்டிப் பிறங்கு சத்திரங்களோர்பால். (௪௯)

## தண்ணீர்ப்பந்தல்.

சம்பிரக் கனியின்சாறுந் தருமில வணமுமிக்க
வம்பியல் கருநிம்பத்தின் மருவிய விலையுஞ்சேர்த்தே
யம்புதக் கரத்தினோடு மளவிற்குத் தக்கவாறே
பம்பிட வளாவுந்தண்ணீர்ப் பந்தர்கள் பலவாமாங்கே. (௫௰)

## கோயில்.

ஆழியிற் சுற்றும்வேய்ந்த வரதன நடுவமர்ந்த
கேழுறு மணியேயென்னக் கிளர்பல மறுகினுப்பு
ணேழுல கனைத்துமீன்ற வேலவார் குழலியோடு
வாழுமே டகநாதன்றன் கோயி லுயகமா மன்னும். (௫௧)

---

* அம்பு—நீர். தக்கரம்—மோர்.

அண்டரூருக்கு மேற்போ மணிமதில் கோபுரங்க
ளெண்டரும் விமானங்கர்ப்ப வில்லத்த மண்டபம்மா
மண்டப நூற்றுக்கரற்கல் மண்டபம் பதின்மடங்கா
மண்டபம் பொலிவுற்றோங்கி மன்னுமப் பொற்பூங்கோயில். (௩௨)

நம்பனுன் முகத்துதித்த நால்வேத கீதவோதை
நம்பியா ரூரன்முன்னோர் நவில்தமிழ் வேதவோதை
பம்பிய கண்டைசின்னம் பல்லிய வோதைகீழ்வந்
தும்பர்போற் றோதைமல்கி யுயர்ந்து சந்நிதிவிளங்கும். (௩௩)

இன்னமான் மியத்ததாய வெழின்மிகு மாலயத்துள்
மன்னிநந் தாயாமேல வார்குழ லம்மைநேசய்கள்
துன்னிய பரிவாரங்கள் சூழவே டகநாதன்மிக்
கின்னருள் கரந்துமேவி யிருந்தா சாரூமன்றே. (௩௪)

நகரப்படலம் முற்றிற்று.

ஆ படலம் ௩-க்குச் செய்யுள் ௱௩௪.

## நைமிசப் படலம்.

மாமேவு தேவரொடு முனிவர்பலர் மகிழ்ந்துறையு மாண்பிற்றாகித்
தோமேவு வானுழைந்து கற்பகக்காத் தருக்களையுங் குளிரச்செய்யும்
பூமேவு பாதவங்கள் பொதுளியசீர்ப் புலவர்பலர் போற்றப்பெற்ற
தேமேவு நைமிசமாந் திருவனத்தின் சிறப்பினையாஞ் செப்பலுற்றாம்

(வேறு)

பிறப்பினே டிறப்புநீக்கிப் பேணித்தன் னிணையுற்றாரைக்
கறப்படு கண்டனுக்கிக் கணக்கிலாச் செல்வ நல்கி
வறப்பினும் வளங்களீந்து வானவர் நறுமுறுப்பச்
சிறப்பெலா மொருங்கே துய்க்கச் செய்வது நைமிசக்கான். (௨)

காமமே வெகுளி மையல் காணுறு மதமாற் சல்ய
மேமுறு பழிபாவந்த னேறுற மாதவத்தோர்
தாமமேக் கெழுந்து கொணூமுத் தற்றுறவாடப் பற்புல்
மாமக மியற்றுஞ் சாலை வனத்தது நைமிசக்கான். (௩)

மழைமுகி லொளித்தவேனு மணிக்கடல் வற்றினேனு
முழைமலை விளங்களெல்லா முறைபிறழ்ந் தொளித்தவேனுந்
தழையுறு தருக்களையச் சால்வள மனைத்து நல்கிக்
கழைபொரு தோளி பாகன் கழலிணை காட்டுமக்கான். (௪)

வற்கலை யுடையினாரும் வார்சடை முடியினாரு
நற்கலை மிலைந்த வேணி நாதனஞ் செழுத்தினுண்மைச்
சொற்கலை தெளிநாவாருஞ் சோர்வினன் னடையினாரும்
பற்கலை மாதவங்கள் பயிலிட நைமிசக்கான். (௫)

காணுறு பிரம சர்யங் காருக பத்தியங்கான்
பேணுவா னப்பிரத்தம் பெட்பறு சன்னி யாசம்
பூணுநா னிலைநின்றார்க்குப் பொருளற மின்ப நல்கி
மாணமை முத்தியீயும் வளத்தது நைமிசக்கான். (௬)

பயமுறு விலங்கினோதை பயமுறு கான்யாற் றோதை
கயமுறு புழைக்கை மாவின் கழிபெருமோதை வேதம்
பயிலுறு மோதை வேத பாரகர் தருக்க வோதை
புயலுறு மெழிலி யோதை பொருமெனமல்கு மன்றே. (௭)

கிளியொடு குயிலு மற்றைக் கேண்மைசேர் பூவைப் புள்ளு
மளிபெறு முதியோ ரோது மருமறை கேட்டுத் தாமுங்
களியுடனோத வாங்கே கானமா மயூரமெல்லாம்
வளிவரு சிறைவிரித்து மகிழ்விற்கூத் தாடுமன்றே. (௮)

வென்றடு சீயத்தோடு வெங்கரிக் குருளைமேவுங்
கொன்றிடு புல்வாயானின் குழக்கன்றி னுடனேகூடும்
வன்றிறனுகத் தோடு வலியுறு நகுலம் வாழும்
புன்றிறற் கொடியினோடு புழைபுகு கூகை சேரும். (௯)

வண்டலை தேமா வாழை வழைதண்புன் னாகம் வாசங்
கொண்டதேன் வருக்கை யாரங் கோங்குசம் பகமந்தாரம்
பண்டரு வகுளந் தெங்கு பாடலங் கமுகு புன்னை
யெண்டரு தமால மாதி யெண்ணிலாத் தருக்கண் மல்கும். (௧௦)

பம்பெழிற் பொங்க ரெங்கும் பைங்குயில் பாடும்பொய்கை
வம்பவிழ் கமலச் சேக்கை மலர்மிசை யன்ன மன்னுங்
கொம்பரேய் தருக்க டோறுங் கொழுவிய சுரும்பு சூழும்
பைம்புனற் றடங்களெங்கும் பணிலங்க ளூருமன்றே. (௧௧)

உற்றதந்தையை நிகர்த்தாங் குண்மையாம் பயனுணர்த்தும்
பெற்றதாயினை நிகர்த்தும் பெரும்பசிப் பிணிதணிக்குங்
கொற்றவ னிகர்த்தியார்க்குங் கோளிலா நீதிதேற்றுங்
கற்றதே சிகனிற் காத்துக் கதிவழி காட்டுமக்கான். (கஉ)

கொழுவிய குயில்கள்கிள்ளை கொம்பரே யளிகள்மற்றை
யழகிய கரும்பு பூக்க ளலர்தரு தருவடர்ந்த
பொழிலுறு நைமிசக்கான் புண்ணிய முனிவர் மாட்டுக்
கழைவிலான் றேற்றுத்தந்த கப்பணப் பொருள்கடுக்கும். (கங)

ஐம்புலன் வென்றுளோர்க ளடர்தருக்களின் மீதார்ந்த
வம்புலாங் கொடிகளாங்கு மகத்தழற் கொழுந்தினாலே
வெம்பிடா தத்தூமம்விண் மேவித்தண் காராய்ப்பெய்யப்
பம்பியே தளிர்த்துப்பூத்துப் பலம்பல பயக்கு மாங்கே. (கச)

(வேறு)

விடங்கொள் நாகத் துரிவைகள் வேய்கள்மேல்
நுடங்கியாலுவ நுண்ணிடை யார்பயில்
நடங்கொள் மாநகர் மாளிகை நாட்டிய
படங்கொள் பல்கொடி யொத்திடும் பண்பினே. (கரு)

ஆடுகின்ற வருள்பெறு மந்திமேல்
மாடுகுன்று மலையரு விப்புனல்
நாடிவீசக் கடுவ னதித் தெண்ணீர்
சாடிவீசிடுஞ் சால்புடைத் தவ்வனம். (கசு)

விருத்த வேதியர் மேவுங் கரகத்திற்
றிருத்தி போன்ற துதிக்கைநீர் மொண்டுவந்
தருத்தி யோடு மரிக்கிய மீந்துபின்
மருத்து மேவக்கை மாசெவி வீசுமால். (கஎ)

அவனிதாங்கு மனந்தன்ற னாயுண்முற்
றவணிருந்துதன் றேரிரண்டாயிரங்
கவைகொணாவிற் கரைந்திடி னும்முற்று
றுவமைநீங்குமவ் வொண்வன வண்மையே. (கஅ)

ஆனபல்வள மார்ந்தவக் கானிடை
மான நான்முகன் மைந்தர்க ணால்வரும்
ஞானமன்னிய நாரதன் மார்க்கண்டன்
றூயன் கண்ணுவன் றவில் வசிட்டனும். (ககூ)

வாமதேவன்கா பாலிவான்மீகனுட்
காமில் கௌசிகன் காற்குவன் கோதமன்
பூமன் போதன் பொருஞ்சுக னத்திரி
வாமனன்றுரு வாசன்சி வற்சனும். (௨௦)

இன்ன மாதவ ரெல்லவ ருங்குழாந்
துன்னு சௌநகத் தூய முனியொடு
மன்னு துவாதச வாருடி கப்பெயர்
நன்னர் வேள்வி நடத்திடு மேல்வையில் (௨௧)

ஆங்கடைந்தன னூர்சடைச் சூதனுங்
கோங்கவிழ்ந்தசெங் கொன்றையங் கண்ணியன்
றேங்கமழ்ந்த திருவடிக் கன்பினன்
வீங்கு பத்தி வியாதன்மா ணாக்கனே. (௨௨)

வேதமாகமம் வேண்டு மிருதிக
ளோதித் தேர்ந்தவவ் வுத்தமச் சூதனை
மாதவத்தர் மகிழ்ந்தெதிர் கொண்டுநீர்
பாதமாட்டிப் பரிவொடு போற்றியே. (௨௩)

இருக்கை யீந்துபின் பேற்ற முகமனோ
டருக்கியாதிக ளன்பினிற் றந்தவன்
றிருப்பொலிந்த திருமுக நோக்கியே
விருப்பி னோடொன்று வேண்டுதல் மேயினர். (௨௪)

மூன்று நேத்திர முன்னோன் விரும்பிவாழ்
வான்ற கேத்திர மாயிர மன்னவற்
றேன்ற மான்மிய மிக்கதியா தத்தலச்
சான்ற வான்புகழ் சாற்றுக மீட்டுமே. (௨௫)

என்று கேட்ட விருடியர்ப் பார்த்துநீர்
நன்று கேட்டனிர் நானிலம் போற்றிடுங்
குன்ற வில்லி குடிகொள்பல் கேத்திரத்
தொன்று யர்ந்ததா யுறும் வில்வ கானமே. (௨௬)

முற்ற வோதறு மூன்று புராணத்துள்
பற்று சைவ புராணங்கள் பத்தவற்
றுற்ற சைவ புராணமென் றோன்றதாம்
மற்றதிற் சேர்னும் வாயுவின் சங்கிதை. (௨௭)

முன்னொர் ஞான்று முதிர்ந்த தலத்தினில்
முந்துசிலப் பிருகு முனிவரன்
வந்துதாள்கள் வணங்குபு வேண்டிட
வந்து தேவன் வகுத்ததலை தோதுவாம். (உஅ)

பாண்டி நாட்டிற் பலர்புகழ் தீர்த்தமும்
வேண்டு மின்பம் விளைத்தருள் மூர்த்தியுங்
காண்டல் மேவக் கதியின் றலமுமா
மீண்டு முச்சிறப் பெய்ந்ததா மத்தலம். (உகூ)

மன்னு கூடற்கு வாயுவின் றிக்கினி
லொன்று மொன்றரை யோசனையுள்ளது
பன்னு மாவிட பக்கிரித் தென் மேற்கில்
தின்னோர் யோசனைத் தூரத்தி லுள்ளது. (௩௦)

வானத்தார்நிதம் வந்து வணங்குறுங்
கானப்பேரெனுங் காளையார் கோயலுக்
கான மேற்கினி லைந்தெனும் யோசனைத்
தானத் துள்ளதாஞ் சாற்றிய வத்தலம். (௩க)

ஆங்கண் வேக வதிப்பெய ரார்ந்துசீர்
தாங்கு வையையுந் தக்கண வாகினி
யோங்கு பேர்படைத் தூர்கின்ற தாமதன்
பாங்கர்க் கீழ்க்கரைப் பாலுள தத்தலம். (௩உ)

தேடு சீர்த்தித் திருஞான சம்பந்தர்
நாடமண் கெட நாட்டிய வாதத்தி
லேடு வையையு ளெதிரே றிய
வேடகத்ததா லேடகப் பேரது. (௩௩)

(வேறு.)

இவ்வணந் தொகுத்துச்சொன்ன வினையிலாச் சூதன்றன்னைக்
கவ்வையில் முனிக்கணங்கள் கழலிணை வணங்கியைய
அவ்வகைச் சிறப்பினும்வில் வரணி யுத்தலசீர்
செவ்வையின் விரித்துச்சொல்க வெனவவன் செப்பலுற்றான். ()

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ படலம் ௪-க்குச் செய்யுள் ௱கூஅ.

# பிரமன் சிருட்டிபெறு படலம்.

கற்பமுன்னொன்றிற் கஞ்ச மலர்மிசை
யற்பொடார்ந்திடு மந்தணனன் வையகத்
சிற்பொதிந்த சராசர மீன்றிடு
நற்படைப்பினை நண்ணிய தோனுவாம். (௧)

முத்தரு முனிவரு மொய்த்துச் சூழ்வது
நித்தலு மலர்மர னிறைந்த பாங்கது
சித்தரற் சாத்தியர் தேவர் சாரணர்
வித்தியா தரர்கதி வேண்டு மாண்பது. (௨)

துங்கவா சனகமழ் தூப மொய்த்தது
சங்கர சசிதர சாம்ப மூர்த்திய
வெங்கணா யகவென விந்தி ராதியர்
புங்கமாந் துதிபல புகழ்ந்து சூழ்வது. (௩)

நந்திபி ருங்கிபூத் தந்த ரொடெழும்
வந்தனைப் பாவொலி வழங்கு வாச்சியத்
தைந்தியப் பேரொலி யருவி வீழொலி
நந்திடு புள்ளொலி நாருந தொக்கது. (௪)

மணிபல குயிற்றிய மாட மாளிகை
பணிநிறை கோபுரம் படிகண் மேடைக
ளணிபெறு மாயிரங் கால்கொண் மண்டபந்
திணிமதி லாதிய திகழ்ந்த சீரது. (௫)

மணிவிளக் காவலி வயங்கு மாண்பது
தணிதவில் வாயில்பொற் றகடு வேய்ந்தது
குணிதமாம் பாரிடக் குழுக்கள் காப்பது
கணிதமி லூழிதோ றோங்குங் கைலையே: (௬)

அன்னவே தண்டவெம் பதனை யெண்கணான்
முன்னதா கியவொரு கற்ப முற்பொழு
துன்னுதன் னுவிடை யுறைமடந்தையோ
டன்னலூர் தியினனு யடைந்திட் டானரோ. (௭)

கோயிலை யண்மினன் கோபுரத்திரு
வாயிலிற் றாழ்ந்துதன் வரவைப் பாரிட
ராயகா வலர்தமை யடுத்திட் டன்னரா
னாயகன் றிருமுனர் நவிலு வித்தனன். (அ)

ஆதிநா யகன்குறிப் பாணை யாலவர்
போதியுள் ளெனவிடப் போந்து பூமிசை
யோதுமெட் டுறுப்புக ளுறப்ப ணிந்தவன்
வேதநல் லிருக்கினா லேத்தி வேண்டுவான். (கூ)

போக்குவா ரானையின் புணர்ப் பிலாதவ
னீக்கிலா தெங்கணு நிறைந்த நின்மல
னாக்கம தாகவிவ் வுலகி யாவையு
மாக்குறு செயலெனக் கருள்க வென்றனன். (ய)

பங்கயன் வேண்டுகோள் பரம னுள்ளுணர்ந்
தங்கவன் முகத்தினை யருளி னோக்கியே
யிங்கெமக் குவப்பதா யிருப்ப தோர்தலந்
தங்குவில் லுவவன தலம தாகுமால். (கக)

அன்னது தீவினைக் கனல மாயது
முன்னிய வினையெலா முடித்து விப்பது
பன்னிய புண்ணியம் பயக்கும் பாலது
தன்னையே தற்குநேர் தந்த மாண்பது. (கஉ)

அத்தல மடைந்துமிக் கன்பொ டெம்மையுங்
கொத்தல ரேலவார் குழலி னாளையும்
பத்தியிற் பூசனை பண்ணிப் போற்றினீ
நத்திய தருளுது நாமென் றோதினான். (கங)

அப்பொழு தேவிடை யருளப் பெற்றய
னப்புகழ் வில்லுவா ரணிய மார்தலந்
துப்புற வடைந்தனன் றாயதா யோர்தடஞ்
செப்புமங் காக்கியத் தீர்த்த மூழ்கினான். (கச)

பூதிசா தனமெயிற் பூண்டு கௌவிய
மாதிதே னறுமல ராதி நிவேதனந்
தீதிலா விரைகமழ் தூப தீபமுஞ்
சேடுறக் கொண்டுபொற் கோயி லுற்றனன். (கரு)

ஏடக நாதனுக் கேற்றநீ ராட்டினா
னுடைசந் தணிந்துபூ வலங்கற் சூட்டினான்
சேடுசேர் தூபநற் றீபங் காட்டினா
னடுமின் சுவையபோ னகமு மூட்டினான். (கசு)

தாமரை யாயிரஞ் சாற்று பேருடன்
றாமரை நாயகன் சசியழற்கணான்
றாமரைத் தாளிலர்ச் சித்துத் தாழ்ந்தனன்
றாமரை யாதனஞ் சார்ந்த தேவனே. (கஎ)

சாற்றுமீ ரெட்டுப சாரஞ் செய்துபா
கேற்றதாம் பூலமு மீந்து கற்பூர
தாற்றுநீ ராஞ்சன மடைவிற் கோட்டியெட்
டேற்றமா முறுப்பினா லிறைஞ்சி யேத்தினான். (கஅ)

இவ்வண நித்தலு மியற்ற வெம்பிரா
னெவ்வறு மறிமதி யுவாவில் வெண்ணகைக்
கொவ்வையங் கனியிதழ்க் கோதை தன்னொடு
கவ்வையி லேற்றின்மேற் காட்சி தந்தனன். (ககூ)

நாலிரு கண்களா னாடி யன்பொடு
நாலிரு குவிகைக ணாட்டிச் சென்னிமே
னாலிரு தசைத்துதி நன்கு பூண்டரு
னாலிரு மூர்த்தியா நாதற் போற்றுவான். (உ௦)

(வேறு.)

கங்கைவே ணியனே போற்றி கலைமதி மிலைந்தாய் போற்றி
யெங்கணு நிறைந்தாய் போற்றி யீறிலா நித்த போற்றி
பொங்கரா வணிந்தாய் போற்றி புரமெரி படுத்தாய் போற்றி
யிங்கெனை வலிந்துகொண்ட வேடக நாத போற்றி. (உக)

தொண்டர்துன் பொழிப்பாய் போற்றி தூயகா பாலி போற்றி
யண்டர்நா யகனே போற்றி யகிலகா ரணனே போற்றி
விண்டுவேள் பாகங் கொண்ட விமலகா மாரி போற்றி
பிண்டைவார் சடையாய்ப்போற்றி யேடக நாத போற்றி. (உஉ)

மகபதி முன்றே வர்க்குண் மகபதி யானாய் போற்றி
ககபதி யேறு மேற்றி லேறுங் காள போற்றி
முகபதி யொளியாய் போற்றி மூலமாம் பொருளே போற்றி
[illegible]ம் பரமுதல்கு மேடக நாத போற்றி. (உங)

இன்னவா றேத்திச் சென்னி யிறைஞ்சிய வெண்க ணானை
யென்னிகர் மணிகண் டுமிக்க வேடக நாத னோக்கி
யுன்னாது சோத்தத் திற்குள் ளுவந்தன முவகை யெல்லா
மன்னநீ சிருட்டி யாற்றும் வரந்தந்தா மெனப்பணித்தான். (உச)

அம்புயா தனன்களிப்புற் றமலன்றன் மலரிற் றாழ்ந்து
சம்புவே நின்ற னக்கித் தலத்திலோ ரைந்து நாட்கள்
பம்பிய விழாவை யாற்றப் பரிந்ததென் னுள்ள மென்று
னம்பனு மவ்வா றுஞ்சாரு நயந்தரு ளப்பெற் றப்பின். (உரு)

ஆகம விதியின் வண்ண மமைதர வியற்றத் தொண்டர்
சோகங்க ளெவையும் போக்குந் தூயநன் பேர்த்த டந்தோய்ந்
தேகமா நீற ணிந்திட் டீசன்கின் மணிகண் மெய்ப்பூண்
டேகமா மிருதி யாச முற்றெழுத் தைந்து மெண்ணி. (உசு)

விச்சுவ கன்மன் றன்னை விரைந்தழைத் தெம்பிரா னுக்
கெச்சமாம் விழா வியற்றற் கேற்றபண் டங்களோடு
முச்சமாம் பணிகள் யாவு முவப்புற வாக்கித்தந்திட்
டெச்சிறப் பினுமிக் காக வெழினக ரணிசெய்யென்றான். (உஎ)

அன்னவ னந்த வாறே யாக்குவ னெனவிரைந்து
பொன்னினு லைந்து தேர்கள் புனைந்தெழில் வாகனங்கள்
கொன்னணிச் சிவிகை யாதி கொடிகுடை சாமரங்கள்
மன்னு பாத்திரங்க ளாதி மணிபொதித் தாக்கியிட்டான். (உஅ)

ஆதார சத்திபீட மாதிய வணிந்து வானின்
மீதேறு கோபுரங்கண் மேதகு மண்டபங்கண்
மூதான சபைகடெற்றி முன்னுவே திகைகளெல்லா
மீதேயோ வென மயங்க வெழிலுறப் புதுக்கியிட்டான். (உகூ)

சக்கர தண்டத்தோடு சாற்றிடு பிரமதண்டந்
தக்கதாஞ் சத்திபீடந் தக்கனுக் கினிமுன்னாய
வக்கினி குண்டமூன்று மளவுங்கோ டாதமைத்தே
யெக்கிய சாலைமற்று மியமைப்பினி லாக்கினனல். (௩0)

தெருவெலாந் தோரணங்க டெற்றிக ளெலாங்கும்பம்பூர்
தருவெலாந் தூண்களின்பாற் சதுக்க மெலாநிலைத்தேர்
மருவெலாங் கொண்டதார்கா வணமெலா நாட்டிப்பாரின்
றிருவெலாங் கவர்ந்ததென்னுத் திருநக ரலங்கரித்தான். (௩க)

இன்னவா றெவையு மாக்கி யெண்கணோன் றனக்கு நாட்ட
வுன்னவன் பவித்தி ரம்பூண் டுறுநவில் லக்னைகொண்டு
மன்னுசங் கற்பம்பேசி வாச்சியமனைத்துமார்ப்ப
மின்னவி ரமரரோடு மிருத்துசங் கிரணஞ்செய்து. (௩௨)

அங்குரார்ப் பணமியற்றி யடுத்தநாள் வேதவோதை
பொங்கவாச் சியங்க ளார்ப்பப் பொற்றம்ப மீதிலேற்றி
னங்கமார் துவசமேற்றி யன்றுதொட் டொவ்வோர்போழ்துந்
துங்கமா மத்திதேவைச் சூழ்வல முன்னடாத்தி. (௩௩)

இவ்வண மெல்லிராவு மெட்டுநா ளியற்றிமற்றைச்
செவ்விய வொன்பானாளிற் சிறந்ததாந் தேர்நன்னோந்தி
லவ்விய லெந்து தேவை யாரோக ணஞ்செய்வித்துத்
திவ்விய வியங்க ளார்ப்பத் திருவீதி வலஞ்செய்வித்தான். (௩௪)

அன்றிர விரதநின்று மப்பஞ்ச மூர்த்திகம்மை
யொன்றவ ரோகணஞ்செய் தேடுதே ரடிச்சுவட்டைச்
சென்றுபார்த் திடச்சூழ்வித்துச் சித்திரமண்டபத்தி
னன்றுவீற் றிருப்பச்செய்தா னான்முகத் தந்தணாளன். (௩௫)

செப்புமீ ரைந்தாநாளாந் திகழேற்றின் மதியுவாச்சே
ரொப்பிலா மகநாளேற்றி னோரையிற் பரிவாரங்க
டிப்பிய மாகச்சூழத் திருவேடகத்தெம்மானைக்
கொப்பணி யேலவார்பூங்குழலியையேற்றிலேற்றி. (௩௬)

சுத்தமா யிலங்குநீரத் தூயதாந்தண்றடப்பால்
மொய்த்தெழுந் தருளச்செய்து முன்னதாய் விதியினாற்றி
னத்திதே வனைக்கொண்டாட்டி யவபிரு தஞ்செய்வித்தான்
முத்தலங் களையுமாக்கு முத்தற்றொழில் பெற்றமூர்த்தி. (௩௭)

அந்தணர் பல்லோருக்கு மறுசுவைப் போனகங்கண்
மூந்துபன் போடுண்பித்து முகவாச தாம்பூலந்தார்
சந்தன மீந்துதக்க தக்கனை யுளம்பூரிக்கத்
தந்தவர் மிகுகளிப்பின் றலைப்படச்செய்தானன்றே. (௩௮)

நித்தியோற் சவங்களாதி நிகழும்பக் கோற்சவங்க
ணத்துமா சோற்சவங்க ளுட்டுமூன் றுறுப்புப்பூசை
நித்தலுந் தவறுதாற்று நியதிகளனைத்துஞ் செய்தான்
சுத்தநந் தனவனங்கள் சூழ்தர வாக்கினனே. (௩௯)

இன்னணம் பிரமன்பூசை யியற்றிப்பின் வில்வக்கான
மன்னு மேடகநாதன்றன் மலரடி வணங்கியேத்திச்
சன்னிதி நின்றுமன்னோன் றன்விடைபெற்றுநீங்கித்
தன்னுல கிற்சிருட்டித் தனித்தொழில் புரிதலுற்றான். (௪௦)

பிரமன் சிருட்டிபெறு படலம் முற்றிற்று.

ஆக படலம் ௫-க்குச் செய்யுள் உ௱௦௯.

## வியாசர் வரம்பெறு படலம்.

ஏடகத்தய னினு முதற்றெழிற்
பீடடைந்த பெருங்கதை யோதினும்
நாடும்வேத வியாதனோர் நல்வரச்
சேடடைந்துள சீர்க்கதை செப்புவாம். (க)

(வேறு)

கலைமுழு துணர்ந்தோன்யோகக் காட்சியிற் சிறந்தோ னுண்மை
நிலைவளர் மணிவிபூதி சாதன நெறிமேற் கொண்டோன்
கலைமதி மிலைந்த வேணிக் கண்ணுதற் பெருமான்பாதந்
தலையினுஞ் சிந்தையுள்ளுந் தணப்பறு தவத்தான்மிக்கோன். (உ)

அஞ்செழுத் தகலாநாவோ னறிவதையறிந்ததூயோன்
பஞ்சவேள் விகண்முன்னைய பசுபந்தம் பலவுஞ்செய்தோன்
செஞ்சவே வருந்திநோற்குஞ் சிவவிரதங்களயாவு
மெஞ்சுறு தியற்றுசில னிருடிக ளெவர்க்குமேலோன். (௩)

பரவுமெய் யன்புபூண்ட பராசர முனிவனென்பா
னிரவினிற் போதுவிலாடு மெந்தையெம் பெருமான்சென்னி
வரநதிப் புனல்புக்காடு வானுளம் விழைந்துசெல்வான்
றரைகெழு யமுனையாற்றைக் கண்ணிணை களிப்பக்கண்டான். (௪)

பங்கய மசோகஞ்சூதம் பனிமலர் முல்லைநீலம்
பொங்குசெங் கழைவிற்கோட்டிப் பொருவில்சே லெடுத்துநாட்டிச்
சங்கொலி முழக்கங்காட்டித் தணந்தவர் தம்மைவாட்டி
யங்கச னெதிர்ந்தானென்ன வடுத்தது யமுனைநீத்தம். (௫)

த்தலைப் பனிநீர்முத்தந் தருக்கமழ் சாந்தமாலி
தொத்தலர் கதலிநாவி சூழ்ந்துறு களபமுன்றீ
மொத்தவர்ப் பிரிந்துளோருக் குறுபகை யாயகொண்டு
இத்தநன் முனிவன்முன்னர்ச் செறிந்தது யமுனைநீத்தம். (௬)

முப்பழம் பரப்பியேல முற்படு பஞ்சவாசஞ்
செப்பவிர் மணிப்பூண் பல்ல தெரிந்துபூந் தட்டிற்கொண்டு
வைப்புறுங் கோலமாதர் மணமகற் காண்பான்போந்த
தொப்பநல் லுரவோன்முன்ன ருற்றது யமுனைநீத்தம். (௭)

(வேறு.)

கண்டவித்தகை நீத்தங் கடப்பவர்க்
கொண்டுசெல்லுங் குருமணித் தட்டுள
தண்டவாணர் விமானமொப் பாயது
பண்டுதொட்டுள பாயின் மரக்கலம். (௮)

அக்கலத்தினை யக்கரை யுய்ப்பவன்
றக்கமாலுமி யாகிய தந்தைவாய்த்
தொக்கசொல்வழிச் சூழ்ந்துநின் றுளெழின்
மிக்கமச்சகந் திப்பெயா மெல்லியல். (௯)

வண்டுலைத்து வனைமலர்வாய்மது
வுண்டொலித்தங் குவப்பச் சுருண்டுதண்
மண்டலைத்தலை வண்புனன் மொண்டுலாங்
கொண்டலைக்கறுக் குங்கருங் கூந்தலாள். (௧௦)

மூசும்வண்டுகண் மூசும்வண் டென்றலா
லேசுமாசுக மாசுக மென்றலாற்
கூசுமற்றவை யென்றல கங்கொள
வீசுவாளின் விளங்குமைக் கண்ணினாள். (௧௧

இருகருங்கடற் பாங்கரு மெல்லவ
ரிருவர்வந்துதித் தென்ன விருகணி
னிருமருங்கு மிலங்கெழிற் செம்மணி
யிருபெருங்குழை யிட்டொளிர் காதினாள். (௧௨)

பவளவாயிற் பரவிய சேயொளி
தவளமுத்த நிறத்தைத் தவிர்த்தலாற்
றிவளநோக்குநர் செம்மணி யேயெனக்
கவினுமொப்புக் கழறு மெயிற்றினாள். (௧௩)

தன்னைநேர்பவர் தம்முரு வங்கவ
ரன்னவாடியை யெள்ளி யவர்மனந்
தன்னையுங்கவர் தன்மையி னாலுயர்ந்
தின்னிலத்தி லிலங்கு கபோலத்தாள். (கச)

இரவியோரிரண் டேயிரு பக்கமும்
பரவிநிற்பதோர் பான்மைய தென்னவே
மருவுசெம்மணி வைத்திழை தோட்டணி
யிருசெவிக்க ணிலங்கு முகத்தினாள். (கரு)

சங்கினங்களச் சங்கொண் டலந்திடப்
பொங்கும்பொற்புப் பொலிகந் தரத்தினா
ளங்கசன்கைக் கடைக்கலம் புக்குறத்
துங்கமென்கழை வென்றொளி தோளினாள். (கசு)

அண்டவாண ரமங்க ணிறைந்தமு
துண்டகாதலி னேக்குற வொண்கவின்
மண்டுமார்பின் மறைந்தெழிற் பாற்கடல்
கொண்டபுற்புதம் போன்றெழு கொங்கையாள். (கஎ)

நூலைமின்னை நுவலுவர் நூலமாப்
போலுமென்னப் புலமை யறிவிலார்
காலினேறுவேள் தன்னுருக் காணினு
மேலநோக்குறு தென்னு மிடையினாள். (கஅ)

குலவரம்பை நிகர்த்த குறங்கினாள்
நிலவரைப்புளி னீரினுட் புக்கொளித்
தலவனஞ்சி யடங்கும் படிக்குலாய்
நலவனப்பி னகுமுழந் தாளினாள். (கக)

சேறுகொண்டெழு செய்ய வராலிணைக்
கூறுகொண்ட கொழுங்கணைக் காலினாள்
மாறுகொண்டபன் மாமணி நூபுரஞ்
சாறுகொண்டு தழங்குபொற் காலினாள். (உ0)

மணங்கமழ்ந்து மலர்ந்த பொலங்கொடி
யணங்குநெஞ்ச மணங்குற வாரெழி
லிணங்குபூந் தழ லிந்திரை யுந்தினம்
வணங்குமிக்கெழின் வாய்ந்த பருவத்தாள். (உக)

(வேறு.)

பன்னற்கரிய சுவைகனிதீம் பாகிற்பயின்ற பனிமொழியாள்
கன்னிப்பருவங் கடவாத காமர்க்கொடிகண் கவர்பனப்பா
வன்னப்பெடைபோன் மரக்கலத்தி னருகேநிற்பக் கண்டவடன்
முன்னர்க்குறுகிப் பெரியதவ முனிவன்சிலசொன் மொழிகின்றான்.

இன்னலகற்றும் பொருளுடையா ரெளியரெவரோ யாயிடினு
மன்னுநதிப்பூம் புனற்றுறைக்கண் மதலையேற்றிக் கரைவிடுவோ
ருன்னுமனத்து னினைத்தவெலா முறுவார்நமது சிவபெருமான்
பன்னுமலர்க்கட் டிருவருளாற் பணியும்வானும் வையமுமே. (௨௫)

தலங்கொடுத்த யாத்திரைக்குச் சார்வார்தமைமுன் றடிப்பாரும்
அலந்துபுனலில் வீழ்ந்துநலி வடைந்தார்தமைக்கண் டிருப்பாருங்
குலங்கணசிப்பக் கண்ணுதலோன் கோபானலத்திற் காளாகி
விலங்குபறவை யாய்ச்சனித்து வீழ்வார்நரகி லாழ்வாரே. (௨௬)

என்றுமறையா கமம்பலவா யியம்புமதனு லெனைக்கலமேற்
றின்றுகரையேற் றுவைப்பெனினீ பெல்லாநலமு மினிதுறுவை
யன்றியெழிலார்கணவனையு மடைவிப்பெறுவை யரனருளா
லொன்றுங்குறையொன் றிலைபெறுதி யுறுதிபுகழு முனதாகும். ()

என்னவியம்பு முனிவரன்ற னினியமொழிகேட் டெதிர்வணங்கிப்
பொன்னையனைய மடவரலும் புகலுமடிகே ளும்மனத்துண்
முன்னமெதுவோ மற்றதனை முடிப்பானுளதிங் கீதுவா
யன்னதெனினு நம்பாலொன் றறிவித்திடவேண் டுவதுளதால். ()

இந்தக்கலமுய்ப் பதற்கையா யிரம்பாரத்துக் கனம்வேண்டு
மந்தப்படியே சேர்ந்திட்டா லன்றிச்செல்லா தெவ்வாற்று
லுந்தக்கடவேன் பெண்பாலே னொருத்திசிறிய ளுண்மையிதா
மெந்தப்பரிசு முணர்ந்தீர்நும் மிதயப்படிசெய் கென்றனளால். ()

கனிவாய்க்கனியின் னணமுரைப்பக் கருணையோடு பராசரமா
முனிகேட்டுவப்புற் றருமணியே மொழியா றகிளியே யெழில்கனிந்த
வனிதாயமுதம் பொழிந்தெனநின் மலர்வாய்புகன்ற பனிமொழியா
னனியாமுள்ள மகிழ்ந்தனமிந் நாவாய்நடத்தும் வகைகேட்டி. ௨௮

எல்லாவுலகத் துள்ளனவா மெட்டாற்பெருக்கு மெண்கோடிச்
சொல்லாநிறைபுண் ணியதீர்த்த மனைத்துங்கொணர்ந்த தூய்மையது
நல்லாய்நறுநீர்க் கடமொன்று நம்பானுளதா மதையேற்றிச்
செல்லாநிற்கு நொடிப்பொழுதிற் றிறஞ்சேர்நாவாய் திண்ணமிதே.

அப்பாற்கோல்கொண் டுய்த்தலுக் கரிதன்றுமிந் நதிகடத்தித்
தப்பாதென்னை விட் டிடுதியெனிற் றளர்ந்தழு கியன்மெல்லநடந்
தெப்பாலவருந் துதிக்குமந்தா கினிபோய்ச்சேர்வ லென முனிவன்
செப்பாநின்ற மொழிக்கிசைந்து சிறுபுன்னகையா ளடிவணங்கி.()

மேலாம்பிரம குலமுடையீர் விருத்தாப்பியமு மிகவுடையீர்
நூலாறம்பரியீ ரின்மொழியே நுவன்றீர்மறுப்ப தழகாமோ
நாலாஞ்சாதிப் பெண்பாலே னுவாயோட்டு மவன்மகனுங்
காலாலேவு மதைச்சிறியேன் கையா லேற்றல் கடனன்றோ. (௬௧)

ஆதலானும் மருள்வேட்டு நாவாயோட்டு மகற்கியைந்தே
னீதலான்மற் றிலலையென விசைந்தாளசைக்கற் கரியகல
மீதுநூனீர்க் காகமதை மெல்லவெடுத்து வைத்துமுனி
நாதன்றனு மேறலுமே நாவாய்துறைநின் றாநதுவே. (௬௨)

தீரத்துறைவிட் டெழுந்துவருஞ் செழியநதியின் புனல்கிழிக்கும்
பாரக்கலத்தின் முன்னென்று பறறுக்கோல்கைக் கொண்டூன்றி
நேரத்திருப்பிப் புனற்றெய்வ நெஞ்சுணினைத்துக் கடவினளால்
காரொத்திருண்டு கடைகுழைந்த கரியகூந்தற் கன்னிகையே. ()

வரமாமுனிவன் காகாக வலியானடக்கு மரக்கலம்பாய்
திரைமாமணிமுத் தெடுத்தெறிந்து திகழவ்வாற்றி னுப்பனுநீஇ
வரைவாரணமு மிரையாக வாரிமடுக்குந் திமிங்கிலமும்
விரையாவகலத் தாழ்பெருநீர் வெள்ளங்கிழிய வொழுகுங்கால். ()

கண்ணார்நுதலா னுயிர்க்குயிராய்க் கலந்தான்கருதித் தொழுமடியார்
புண்ணார்பிறவிப் பிணியொழிக்கும் பொருவிலபெருமான் பூவுலகிற்
பண்ணார்மறைநூற பொருள்விளங்கிப் பரவுமாறு கனிவினுளத்
தெண்ணாநின்ற திருவருளா லெதிர்தோன்றிற்றோர் பூம்பொழிலே.

(வேறு)

துள்ளுநீர்ப்பெருங் குடிஞையிற் றலங்குறு நாப்பண்
கள்ளுலாமலர்ப் பொதும்பரிற களித்திமிர் வண்டின்
றெள்ளுபாடலுஞ் சிறைமயிலாடலுஞ் செறிந்தே
ருள்ளுலாவிய தீவினைக்கண்டன னுரவோன். (௬௬)

கண்டகண்களைப் புறஞ்செலாதீர்த்தெழு கவினும்
வண்டலம்புறு புதுமலர்பொதுளிய வனமுந்
தண்டடங்களுந் தாமரையோடையுந் தழுவி
மண்டுதென்றலுந் தூண்டின முனிவனுண் மயலை. (௬௭)

இதனைத் தென்றெழு விரகமேற் கொளவுளமிணைந்து
மதலையுய்த்திடு மச்சகந்தியின்முக நோக்கித்
திதலைமென்முலை யாய்வளஞ் செறிந்தபூம் பொழிலார்
புதுமைமிக்குள பொன்மயத் தீவிது கண்டாய். (௩௮)

இந்தத்தீவினி லிருவரு மிருந்திளைப் பாறி
யுந்தத்தக்கதிம் மரக்கல மொல்லென வுய்ப்பாய்
சுந்தப்பூங்குயி லேயெனத் தன்றவ வலியான்
முந்தப்போவதை நிறுத்தினன்பின்னரு மொழிவான். (௩௯)

அறந்தவாநெறி தழைத்துயர் பொறிபுலனடக்கித்
துறந்தமாதவ னொருவனைத் தோற்றுவித் தவனால்
மறைந்த மாமறை விளங்கிடக் கருதினன்மனத்துட்
குறைந்தமாமதி வேணியன்றிருவுளக் குறிப்பால். (௪௦)

ஏவுமாரனு மலர்க்கணை தொடுத்தெதிர் நின்று
தூவுமாதலி னென்னுளா நலிதரத் துளங்கும்
பூவுலாம்பொழி லிடத்தெனைப் புருடனுவடைந்து
மேவுவாயெனில் விரும்பிய நலனெலாம் பெறுவாய். (௪௧)

அலர்தருங்கணை யங்கசா னலமலைத்திடலா
னலிவுறுதெனை நல்லெழிற்கற்பகக் கொடிநே
ரிலகுநின்கையா லெடுத்துமார் புறத்தழுவுவையே
லுலகெலாம்புகழ் நன்மகப்பேறுனக் குண்டாம். (௪௨)

விண்டநாண்மலர் வாவியால் விளங்கிய பொழில்வாய்
வண்டுநாரியுங் கழையிலும் வலியசேற் கொடியுங்
கொண்டுவேள்கணை சொரிந்திடக் குழைந்துறுமயற்கள்
ளுண்டமாலுமெ னுளத்தினுக் குயிர்த்துணை யாவாய். (௪௩)

மனமகிழ்ந்தெனை யனங்கநூல் வகுத்தவா றுவிங்
கனவிதங்களா லிதம்பெறு லீலைகள் காட்டி
யனலெழுங்கடுங் காமவெப் பகற்றுநின் னதரக்
கனியினூறமு தாயகி யாழமீ கனிந்தே. (௪௪)

என்னவேதமா முனிவர னிசைத்தசொல் லினையு
மன்னமாமரக் கலமுமோடாதுநின் றமையுங்
கன்னலின்மொழி கருதியத் தவன்றனை நோக்கி
நன்னலந்திகழ் மொழிசில நயமுட னவில்வாள். (௪௫)

அடிகள்பற்பல நூல்களுமறிந்துளீர் துறவி
லொடிவின்மாதவ நெறியின்றி ருணர்வுறு தில்லை
கடிகொள்பக்குவ முற்றிலேன் கன்னிமைகழியாக்
குடியின்மெல்லிய சிறியள்யான் கூறுவதுளதோ. (௪௬)

வழியின்முந்திய மறையவர் நீவிர்நானிகழும்
பழியின்முந்திய விழிகுலப் பாவைமுன்பருவக்
கழிவின்முந்திய சிறியளே யென்னைநீர்கலத்த
லிழிவின்முந்திய தாகுமன் றேவுணர்ந்திலிரோ. (௪௭)

கலநிறுத்துநல் கடனினை கருணைபால்விடுமி
னிலைநிறுத்திய கரைமிசை நிறுவுவல்கொடுபோய்ப்
பலநிறுத்திய கங்கையின் பாற்செலுமென்று
நலநிறுத்திய பைங்கொடி நவின்றனளன்றே. (௪௮)

கன்னியின்மொழி கேட்டலுங் கண்ணுதற்பெருமா
னுன்னுதன்றிரு வுளத்தினு லூட்டியகாம
வின்னல்கொண்டுள விருந்தவப் பராசரமுனிவன்
பின்னரும்பல நன்னெறி பேசலுற்றனனால். (௪௯)

மங்கலந்தரு நற்குண சாலினின்வளப்பா
ரங்கலந்திகழ் மேனியாற் கண்களுக்களவில்
சங்கலந்திட வளித்திடு மென்னுயிர்க்கலைவி
யிங்கலந்திட வருத்திய காமநோய்க்கிரங்காய். (௫0)

மெய்த்தவம்புரி மாதவர் தமக்கெலாமேலாய்
வைத்தவென்றனை யுற்றனை நீயுமாதவத்தாய்
மைத்தடங்கணாய் பூருவ புண்ணியவலியா
லுய்த்தநிற்பெறு தந்தையு மென்னைநன்குணர்வான். (௫௧)

இன்றுநம்மைநீ மணம்புரிந் திடுதல்கேட்டனனேல்
நன்றெனக்களித் தவனுனை நாடொறும்புகழ்வா
னென்றிநீயறி யாததொன் றுளதுனக்கறிவி
லொன்றுமாறுணர்த் துவனுள முவந்ததுகேட்டி. (௫௨)

உன்னையீன்றவித் தந்தையை யன்றிமற்றொருவன்
முன்னுமுண்டவன் முனிவர்விப் பிரர்தமக்கினியன்
றன்னருந்தவத் துணைவன்மன் னுலகெலாந்திங்கு
மன்னவன்வசு வென்பவன் றுறக்கத்து வதிவோன். (௫௩)

அந்தத்தாதையை யமரர்க ளொடுவரவழைப்பே
னுந்துமீனத்தி னாற்றமு முனக்கிலையாக்கிக்
கந்தம்யோசனை வீசிடக் கணத்தினிற்புரிவே
னிந்தப்பூம்பொழி லிடத்தெனை மணம்புரிந்திடுவாய். (௫௪)

சொல்லுமென்மொழி மறுக்கிடேல் சுரும்பலர்வாளி
மெல்லுமென்னையிவ் வேலைநீ விரும்புவையிதுவே
நல்லகாலமா நன்மகப் பேறுநிற்குண்டா
மில்லையேலுனக் கினியந்தச் செல்வமேயிலையாம். (௫௫)

மேவியானினிப் புகல்வதென் விண்ணுள தேவ
ராலுமண்ணுளோ ராலுமேபுகழினை யடைவாய்
பாலுமின்னமு துந்தகு மென்மொழிப் பாவாய்
சாலுநின்னையே தலைவியா வரித்தன னென்றான். (௫௬)

முனிவன்வாசகங் கேட்டலும் பௌவன முதிருங்
கனிவுமேன்மையு நன்மகப் பேறுமுட் கருதிக்
குனியுநாணினள் புன்னகைகொண்டுநின் றடியே
னினியென்செய்வது தேவரீருளப்படி யென்றாள். (௫௭)

அன்னகாலையின் முனிவர னகங்களி கூர்ந்து
மன்னுதன்கர கரகநீ ரபிமந்திரித்து
மின்னினின்றவண் மேற்புரோக் கணஞ்செய விளங்கி
யுன்னுயோசனை கந்தியா யினளுநல குவப்ப. (௫௮)

நம்பராசர னெண்ணியாங் கந்நதி நாப்பண்
வம்பறுமலர்ப் பொதும்பருண் மன்னினர் வந்தா
ரும்பரார்வசு மன்னனோடுளங்களி கூர்ந்தே
யெம்பராபர னடியவர்க்கிதுவொரு வியப்போ. (௫௯)

இந்திராதியர் தம்மையும்வசுவெனு முன்னைத்
தந்தையானவன் றன்னையும்யோசனை கந்தி
சிந்தையாலுற வணங்கினள் செய்தவ முனியு
மந்தமேவிலா வானந்தபரவச மானான். (௬௦)

(வேறு)

வானவர் கோமானந்த வசுவெனுங் கோமான்றன்னை
யானனங் குளிரநோக்கி யரசனே நீயுள்ளன்பிற்
போனநாட் செய்துவைத்த புண்ணியப் பயனன்றேயோ,
மானமா தவத்தோனுன்றன் மருமகனாகுமாண்பு. (௬௧)

இத்தலத் தெவரும்பெற்ற விலங்கிழைக் கன்னிதன்னைச்
சத்துவ குணத்துயர்ந்த சதுமறை யோதுநாவி
னுத்தம பாத்திரத்தி னுதவுறி னுககத்தின்மேல்
வித்துறு தையிலமென்ன மேம்படப் பரவுமன்றே. (கஉ)

பானத்துட் சிறக்குந் துங்கா பானமற் புதமதான
கானத்துட் சிறக்குஞ் சாம கானமீ னங்கவிர்க்கு
நானத்துட் சிறக்குங்கங்கா நானமற் றவைபோனல்குந்
தானத்துட் சிறக்குந்தானங் கன்னிகா தானமென்ப. (கங)

பரசிவ லிங்கமெங்கும் பரவுசாளக்கிராமங்
திரமரு வுருத்திராக்கந் திரவிய மில்லநெய்பால்
விரவறு சுவையினன்னம் விருப்பொடு மேலோர்க்கீவா
ரிருகுலங் கோடியுய்யு மேற்றவான் பதமும்வாய்க்கும். (கச)

பொருளுறு கலையாதொன்றைப் பொறித்த புக்தகமேயாக
பெருகுநற் குலத்துளுற்றோர் பெற்றகன் னிகையேயாக
வருபெருந் தவத்தாண்மிக்க மாதவற் களிப்பாராயிற்
றிருமிகு மகங்கள் பல்ல செய்பயன் பெறுவர்மன்னே. (கரு)

பொருந்திய தவத்தாற்பெற்ற புத்திரி தனைநல்லோர்க்குத்
திருந்திய வன்பிற்றானஞ் செய்பவ னளவில்சீர்த்தி
தரும்பெருஞ் செல்வமோங்கித் தருநிழல் வீற்றிருந்து
பெருங்கயி லாயவாழ்வும் பெறுவனென் றிசைக்குநூலே. (கசு)

வேதிய முனிவர்க்குள்ளம் விருப்பொடு தானஞ்செய்யும்
போதிய லோதிபாற்சற் புத்திர னெநவன்றோன்றிற்
காதிய வெழுபிறப்புங் கடப்பரக் கன்னிபெற்றோ
ரோதிய பிதிர்க்குலங்க ளொன்றொடு நூறுமுய்யும். (கஎ)

உயர்ந்தசற் பாத்திரத்தி னுதவுகன் னிகைபாற்றோன்றி
வயங்கிய மகன்றன்மாதா மகன்குல திலகமாவான்
மயங்கிய வறிவினர்க்கு வழங்குவோர் சாலிவித்தை
யுயங்கிய வுவரில்வித்திட் டுழல்பவர்போல்வரன்றே. (கஅ)

என்றுசற் பாத்திரம்வந் தெய்துறு மன்றேமிக்க
நன்றெனத் தனயைதன்னை நல்கிட வேண்டும்பெற்றோ
ரன்றுநல் லோரைவாரங் கரணங்க ளாதியாய
வொன்றுநோக் கிடவேண்டாமென் றுரைத்திடு முண்மைநூலே.

இந்துவே டிரவிகூட்ட மிசைந்தமா வியதிபாதஞ்
சந்திரா தித்தர்தம்மைத் தனியரா விழுங்குங்காலம்
வந்தவர்த் தோதையந்தூ மகோதய மருவுங்கால
முந்திய கபிலாசட்டி முதிர்கயச் சாயைமாதோ. (௭௦)

பொருத்தமுற் றெய்துமிந்தப் புண்ணிய காலமேழு
முரைத்தவா யிரத்தின்மேலா வொவ்வொரு தானமேற்றி
நிரைத்திடு காலமோர்சற் பாத்திரிகர்க்குமென்ப
வரித்தவர் தமக்கோர்கன்னி வழங்கலின்மிக்கதின்றே. (௭௧)

(வேறு.)

விண்ணு மண்ணும் விளங்குறு மாமுனி
நண்ணும் வண்ணமுன் னுனீ நயந்துமெசப்
புண்ணி யத்தின் பெருமை புகல்வதோ
வெண்ணி னீயே பெரும்புக ழெய்தினாய். (௭௨)

என்ன மாண்பி னியம்பு வசுவெனு
மன்ன னுள்ள மகிழ்ந்து வரமுனி
தன்னை நல்லடி தாழ்ந்து துதித்தெழா
முன்னர் வந்து முகமன் மொழிந்தனன். (௭௩)

கன்னி யோசனை கந்தியை மாமணிப்
பொன்னி லங்கு கலன்கள் புனைந்துதேன்
றுன்னு மாமலர் சூட்டிப் பங்கேருகத்
தன்னா மென்ன வழைத்தங் கிருத்தினன். (௭௪)

முன்னும் வேத முனிவா னுக்குநற்
கன்னி கைக்குங் கமழ்தரு சந்தனம்
பன்னு மாமலர் பற்பல வுங்கொடு
மன்ன லம்பெற மன்னன் புனைந்தனன். (௭௫)

ஆய வேலையி லம்மலர்ப் பூம்பொழிற்
பாய நன்மணப் பந்தரிற் பூங்குயில்
வாய வாழ்த்தொடு வண்டுகள் பாடிட
நேய மாமயி னின்று நடிக்கவே. (௭௬)

உய்ய வாசி யுரைத்தனர் விண்ணவர்
வைய மன்னன் வசுவு மகிழ்ந்துளங்
கையி னீரொடு கன்னிகை யைத்தவ
மெய்யன் கையில் விருப்பி னளித்தனன். (௭௭)

அந்த ரத்தினிற் றுந்துபி யார்த்தன
வுந்து முள்ளத் துவப்புறு மும்பரும்
வந்து பூமலர் மாரி பொழிந்தன
ரிந்த மாநில மெங்குந் தழைக்கவே. (௭௮)

பரிவுடைத்தம் பதிகளும் பண்ணவர்ப்
பிரிய முற்றுப் பணிந்தனர் பேணினர்
துரிசின் மாமக தோன்றுக வென்னவே
யுரிய வாசி மொழிந்தன ரும்பரே. (௭௯)

மன்னர் மன்னன் வசுவெனு மாண்புளான்
றன்னொ டும்பர்தந் தானமுற் றெய்தினர்
பின்னர் மாதவன் றண்மலர் பேணுறாஉ
மின்னி னின்றவ ளொன்று விளம்புவாள். (௮௦)

மாதவத்தர் மகிழ்ந்து வணங்குறாஉ
நாத வென்னையிந் நண்பக லிற்றொட
லேத மன்றுகொல் யாவர்க்கு நன்னெறி
யோது கின்ற வுமக்கென் னுரைப்பதே. (௮௧)

எவன்மணந்திடு மேந்திழை தன்னைவான்
றவனெனல்லொளி சார்பகற் சேருவா
னவன்செய் புண்ணியம் யாவு மழிந்துளக்
கவலையுற்றுக் கலங்கி யுழல்வனே. (௮௨)

சேய கண்ணுதற் செம்மல் தலத்தினு
மாய வன்றுயின் மாதலந் தன்னினுந்
தேயு நுண்ணிடை யார்தமைச் சேர்பவன்
றீய மாநர கத்திடைச் சேர்வனே. (௮௩)

தந்தை தாயவர் தங்களின் முன்னரு
முந்து தேசிகர் முன்னருஞ் சேர்பவ
னிந்த வைய மியாவு மிகழ்தரப்
பந்த முற்றுப் பழியடை வானரோ. (௮௪)

இன்ன வாறெழி லேய்மச்ச கந்திதான்
பன்னு மென்மொழி கேட்ட பராசர
னன்ன துள்ளுற வாய்ந்து திகைத்தன
னன்னெ றிப்படு மாறு நவிலுவான். (௮௫)

மானி னோக்கியர் வந்து வணங்குறு
கான வார்குழ னாயகி கேட்டிநீ
யான மீனெனு மன்னை வயிற்றுறு
மீன மன்ன திகழப் படாதரோ. (௮௬)

எற்று தெண்டிரை யிவ்வுலகத்தினிற்
குற்ற மென்பன யாவுங் குணங்களா
மற்ற யாவு மனத்தி லுணர்ந்துளேன்
சற்று நீயினித் தாமதியே லென்றான். (௮௭)

அன்ன வாசகங் கேட்டலு மாங்கவள்
புன்ன கைப்பெருக் குற்றனள் பொற்கொடி
யன்ன மாதுகை யம்புயம் பற்றினா
னன்று மாதவ னுள்ளுவப் புற்றனன். (௮௮)

தேம்பொழிந்து செழுமலர் வாய்ந்துள
பூம்பொழிற்கண் வளம்பல போந்துகண்
டோம்பு மன்பி னிருவரு முற்றனர்
கூம்பு மாதவி கூடிய பந்தர்வாய். (௮௯)

உடலி ரண்டுயி ரொன்றென வுற்றுளங்
கடலு மீநதி யுங்கலந் தாலென
வடர்பெருங்களி ப்பாற்புணர்ந் தின்புறாஉத்
தொடரு மாரன் றொடக்கறத் துய்த்தனர். (௯௦)

சொற்ற சீர்வாச்சி யாயன சூத்திரத்
துற்ற பண்பி னுணர்த்துமி லீலைகண்
முற்று மாற்றி முதிர்ந்த களிப்பொடு
பெற்ற வின்பப் பெருங்கடன் மூழ்கினார். (௯௧)

அக்க ணத்தி லருமணி யன்னவ
டக்க தூய கருப்பந் தரித்தன
டொக்க வப்பொழு தோர்மகன் தோன்றினா
னிக்கடற்புவி யெங்கணு முய்யவே. (௯௨)

இன்பமுற்ற விருந்தவ னும்பெரி
தன்பி னிற்பிரி யாதவ டானுந்தம்
முன்பிற் செய்கவின் முற்றுற நோக்கிமெய்
யன்பு நெக்குறாஉ விட்டார் வியாசப்பேர். (௯௩)

கதிரை யன்னவந் தெய்திய காதல
னெதிரி னின்றவ ணீன்றவ டன்னையும்
பிதாவுய பெருந்தவன றன்னையு
முதிரு மன்பொடு முன்னர் வணங்கினான். (௬௪)

வணங்கு மைந்தன் மனந்தவத் திற்செல
விணங்கு கின்ற குறிப்பினை யெண்ணியே
யணங்கின் முன்னின்ற வன்னை தகைத்தனள்
பிணங்க லுற்றவள் பெற்றவ ளாதலால். (௬௫)

அருந்தவத்தி னெனைப்பெற்ற வன்னையே
திருந்து மாமறை யாகமச் செம்பொருள்
பொருந்து மீரொன்ப தாரும் புராணங்கா
தருந்து மாவிதி காசமங் கங்களே. (௬௬)

இன்ன நூல்களை யிவ்வுல கத்திடை
மன்னி யெங்கு மருவ விளக்குவான்
முன்னி மாதவ மாற்ற முயல்கின்றே
னென்னை யிங்கு தடுத்திட லென்றரோ. (௬௭)

நினைப்பி னிற்குமுன் நிற்பன்வந் தாதலி
னெனைத்த கைத்திட லென்று புகன்றரு
முனிக்கு மாங்கு மொழிந்து விடைபெறாஉப்
பனித்த டங்கிரி நோக்கிப் படர்ந்தனன். (௬௮)

(வேறு.)

கறைபொ ழிந்துறை கண்டனுர்
மறைபு கன்றிடு வழியினோர்
குறையி னன்மணங் கொள்ளுமா
றிறைவி தோன்றிடு மேனது. (௬௯)

இரும டற்புலி யீட்டமு
மருவு மான்களின் கூட்டமு
மருவி வீழ்புன லாற்றினே
டொருது றைக்கணீ ருண்பது. (௭௦)

அடல் மிகுந்தபஞ் சானனங்
குடிகொ ணீடிய குகையுளே
பிடிகள் கன்றுகட் பெற்றிடக்
கடிபி லாதவை காப்பது. (௭௧)

நெருப்பி னைபுன னேரென
விருப்பு றும்படி வெண்பனி
யிருப்ப தாலவ ணிரசிதப்
பொருப்பை நித்தலும் போல்வது. (௧௦௨)

கங்கை யோடுறு கடுக்கையுந்
திங்க ளும்புனை சென்னியால்
தங்கி மத்தின்வெண் டறுவிறைவன்
மங்கை பாகனேர் மாண்பது. (௧௦௩)

தேவ தாரம்வேய் செங்கடம்
போவி லாழுணைத் தொள்ளகில்
சேவொ டாரம்வெண் டேக்கும்விண்
காவி னோடளாங் கவினது. (௧௦௪)

இரலை யேனமா வெண்குலோ
ளரிம தக்கய மம்புலி
பெரிய யாளிகள் பிளிறொலி
யருவி யோதையை யடர்ப்பதாம். (௧௦௫)

களிக்கு டாவடி கண் [illegible]
ப்ளிக்கு வட்டவெ [illegible] வான்
வெளிப்ப ணிக்குளம் வெருவிவந்
தொளிக்கு மாமதி யொப்பது. (௧௦௬)

இன்ன சீர்வளத் திமயமா
நன்னர் வெற்பினை நண்ணிமேற்
றுன்னு தூய்மைசால் பதிரிகை
யென்னு மாச்சிரம மெய்தினன். (௧௦௭)

கங்கை யின்றடக் கங்கையுற்
றங்க ணேருட சமாக்கியே
யங்க ணனுரு ளார்தரத்
துங்க யோகினைத் தொடங்கினன். (௧௦௮)

இந்தி யங்களென் றிசைத்திடு
மைந்த டக்கியே யாமைபோ
லுந்து காலையுள் ளொடுக்கியே
சிந்தை தான்புறஞ் செலாமலே. (௧௦௯)

இரண்டி னோடிரண் டியம்புமூ
விரண்டொ டையிரண் டாறிரண்
டிரண்டு மீமிசை யேற்றவெண்
ணிரண்டி தழ்க்கம லங்களாம். (கக0)

ஐந்தை யுங்கடந் ததனின்மே
லந்தி லாஞ்ஞையா மாயிரக்
கந்த மாரிதழ்க் கமலமேல்
நந்தில் சோதியை நாடினான். (ககக)

(வேறு)

சோதியை நாடுங்காலைத் தோற்றமி லசரீரிப்பே
ரோதுதெய் வீகவாக்கொன் றுரைத்தத லஃதியாதென்னின்
மீதுயர் தவயோகத்தால் விளையுந்தா னாந்மியப்பே
றேதுமிங் கண்ணுறுதா லேடகத் தலஞ்செல்லென்றே. (கக௨)

சொற்றதன் னதைக்கேட்டுத்தன் னேயநீர்ப் பாண்டிநாட்டு
ணற்றல மென்னயாரு நவின்ற வில்வாரண்யத்தி
லுற்றவே டகத்தைநண்ணி யுமாபதி தனைப்பூசிப்பான்
பொற்றடத் தீர்த்தமாடிப் புகுந்தனன் வியாதன்மாதோ. (ககங)

பூதிகண் டிகைதரித்துப் புனிதவைந் தெழுத்தையெண்ணிக்
கோதிலாக் கோபுரத்துக் கோயிலி னுட்புகுந்து
சோதியா மேடகத்தான் றுணையடிக் கமலந்தாழ்ந்தே
யோதிய விதியாற்பூசை யுஞற்றிட வொருப்பட்டானால். (ககச)

தவனகும் பந்தாபித்துச் சமக நமகஞ்செவித்துப்
புவனமுற் றடங்குமந்தப் பூரண விலிங்கச்சென்னி
கவினுற வபிடேகித்துக் கவ்விய மைந்துமாட்டி
நவமதா மமுதமைந்து நளிர்தர வபிடேகித்து. (ககரு)

உத்தம நறியவாச முற்றகந் தாபிடேக
நத்திய வன்பினுற்றி நளிர்சுத்த நீராலாட்டிப்
புத்தவொற் றுடைகொண்டு பொன்மேனி மெலத்துவட்டி
யத்தமிக் குள்ளதாம்பி [illegible] வணைந்துபின்னர். (ககசா)

பூதிவெண் புண்டரங்கள் பொற்புற நுதலிற்சாத்திக்
கோதில்சந் தணிந்துநல்ல கூவிளந் தளத்தாற்பத்தா
யோதுநூ றுநாமங்க ளுச்சரித் தருச்சித்துப்பின்
றீதிலா வாசதூபந் தீபமுஞ் சுழற்றிககாட்டி. (ககஎ)

பண்ணிய வருக்கத்தோடு பாயசான் னமுநிவேதித்
தெண்ணிடு சோடசோப சாரமு மியற்றி யூக்க
ணண்ணிய காவுடைத்து நறிய தாம் பூலமிட்டுந்
தண்ணிய வெண்கற்பூராஞ் சனஞ்செய்து நமக்கரித்து. (௧௧௮)

முவ்வலஞ் சூழ்ந்துவந்து மும்முறை தண்டமென்னச்
செவ்வையின் வீழ்ந்திறைஞ்சித் திருவேடகப்பிரானைத்
திவ்விய தோத்திரத்தாற் றியானிக் [illegible]ன்றிப்பெம்மா
னெவ்வமில் புராணமூவா றிதிகாச முற்றுந்தேர்ந்து. (௧௧௯)

உலகெலா முய்யும்வண்ண முரைத்துப்பின் னிட்டைகூடி
யிலகுதா தாங்மியப்பே றெய்துக வென்றுபெம்மான்
மலர்திரு வாக்குப்பெற்று மகிழ்வொடு விடையும்பெற்றுச்
செலும்வட திசையைநோக்கிச் சென்றனன் வியாதன்மாதோ. ()

வியாசர் வரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆ. படலம் ௯க்குச் செய்யுள் ௯௱௨௮.

# பராசரப் படலம்.

பெருஞ்சினை யொத்துப் பொலிந்த நெடுஞ்சடை
மின்னும் வேத வியாதன் கதைசொலும்
பன்னு மந்தப் பராசர மாமுனி
யுன்னி யர்ச்சனை யாற்றிய தோதுவாம். (௧)

தனயன் சென்றமை யெண்ணித் தளர்வுறு
மனைவி யாகிய வாசவி வாண்முகங்
கனிவி னோக்கிக் கழறலுற் றான்றவப்
பனவ னாய பராசர மாமுனி. (௨)

என்னுயிர்த் துணையேவருந் தேவினி
யுன்ன னின்மக னாரணத் தின்பொருண்
மன்னு நூல்களில் வையகந் தேர்தர
லுன்னி நோன்பை யுஞற்றுதற் கேகினன். (௩)

மைந்தனார் பெற்ற தாயெவண் மற்றவன்
றந்தையா ரிங்கு யாவர் சகோதரர்
சொந்தமா ரயலேவர் துணைவரார்
யந்தமா மனையா ரிந்தப் பாரினே. (௪)

மாயவாழ்க்கைப் பிரபஞ்ச மற்றிதி
னேயமுற்று நினைத்தின்ப துன்பமென்
றுயதுக்க மகிழ்வடை வார்தமைத்
தீயவல்விலங் கேயெனச் செப்புவர். (௫)

(வேறு.)

எவ்விடத் தெவ்வுயிர்க்கு மிறைவனாய் நிறைந்தவீசன்
செவ்விய கருணையாலே சீவர்கட் கெல்லாமெய்து
மொவ்விய மதியுள்ளோர்க ளுணர்ந்திவை யொருவாற்றானுங்
கவ்விய நசையானுள்ளங் கலங்கிமெய் வருந்தாரன்றே. (௬)

ஆதலின் வருந்தனீயா னறிந்திடத் தக்கவெல்லா
மேதக வறிந்துளோனிவ் விரிபுன லரங்கத்தின்பாற்
காதலாற் றவத்துக்கொவ்வாக் கருமத்தைக் கருதிச்செய்தே
னீதெலா மீசனாஞ்ஞை யின்றிமற் றுவதின்றே. (௭)

இனியுனக் கென்னாற்பூட்டு மிருங்கலம் யார்க்குந்தோற்றாக்
கனவென மறைகநீயுங் கன்னிகை யாகிவேடன்
மனையினின் முன்போலுற்று வதிகுக கடல்சூழ்வையந்
தனியர சாளுமன்னன் சந்தனு மனைவியாவாய். (௮)

அந்தச்சந் தனுவந்துன்னை யடையுமத் தருணமீட்டு
மிந்தப்பூம் பொழிற்கணுற்ற வெளவன மெய்துகிற்குச்
சிந்திக்கே லெனநுவன்று செய்தவ னொழுலுநோக்கி
யுந்திக்கண் முத்தஞ்சிந்தி யோசனை கந்திகூறும். (௯)

அன்னையைப் பிதாவைநீத்தே யனுமதி யின்றியெல்லி
லென்னையிப் பொழிற்கட்சேர்ந்தீ ரெழிற்சுதன் றனையும்பெற்றே
னன்னவன் றவமேற்சென்றா னதனையு மறந்தேனும்மா
லென்னைவிட் டெழுதலென்னே யென்றழு தடியில்வீழ்ந்தாள். ()

அழுதவ டன்னை யாற்றி யன்னமே வருந்தேல்வையந்
தொழுதகு மன்னனுன்னைத் துணைவியாக் கொள்வனீயே
கெழுபெருந் திருவினோடுங் கிளையொடுந் தளர்வொன்றின்றி
வழுவறு போகந்துய்த்து வாழ்வையீ துனக்குச்சொற்றேன். (௧௧)

அன்றிநம்மிருவர் சேர்க்கை யதனையு மறைய லியார்க்கு
மின்னநன்மணநின் மெய்யிற் றோன்றுமா றென்னெனன்பார்க்கிங்
கொன்றியபராச ரப்பேர் முனிவனை யோடத்தேற்றி
மன்னுறு கரைவிடுத்தேன் மனமகிழ்ந் தளித்தானென்பாய். (௧௨)

இம்மறைப் பொருளை யென்றும் வெளியிடே லெனவுரைப்ப
மொய்ம்மலர்க் குழலினாளு முனிவர னுரைத்தவாறு
மெம்மரக் கலங்கொண்டப்பால் விடுத்துமீண் டியன்றவெல்லாம்
விம்முறு கனவிற்கண்ட விளைவென மறந்திருந்தாள். (கஙு)

வாசவி யென்பாளிந்த வண்ணமிங் கிருந்தாளாக
மாசறு முனிவன்கங்கை மாநதி நோக்கிச்செல்வா
னேசறு தவத்தான்மிக்க வென்மனத் தெண்ணலாகா
மேசமுற் றென்செய்தேனென் றின்னன நினைவதானான். (கச)

இழிகுல மடந்தையின்ப மெண்ணலும் பாவம்பாவங்
கழிதரு துழுகந்தத்துக் கன்னிகை தன்னைப்பொங்கி
யெழுபுனல் யமுனையாற்றி னிடையினிற் பகலிற்சேர்ந்தேன்
மொழிதரு பத்திஞான முறையிது நன்றுநன்றே. (கரு)

பலவிலங் கடர்ந்தகானிற் பவனமோ டுதகமுண்டுஞ்
சலமிசைத் துயின்றுமூசித் தலைதலைகீழா நின்று
நலிவுறீஇப் புரியவல்ல நற்றவ ரோனுங்காம
னலர்தரு கணைக்குள்ளாகா ரரியர்மற் றரியரம்மா. (கசா)

மருவுறு பத்திஞானம் வயிராக மொழுக்கமீதற்
றருமநற் றெய்வம்போற்ற றவமிவை யனைத்துமைதோய்
கருநெடுங் கடைக்கணல்லார் காதலுட் பட்டவன்றே
பரவுறு சூறைக்காற்றிற் பஞ்செனப் பறக்குமுண்மை. (கள)

முற்றவுந் தெளியக்கற்ற மூதுணர் வுடையரேனும்
வற்றிய யாக்கைமூப்பு மலிபிணிப் படுவரேனும்
பெற்றவர் சுற்றமெல்லாம் பிறகிட வவமதிக்கச்
சுற்றிய காமத்தீயின் சூடுபட் டுழலார்யாரே. (கஅ)

ஊரினை வளைந்ததீக்கங் குயர்வரை முகட்டொளித்து
நீரினுட் குளித்துமுய்ய லாகுமிந் நெடுநீர்வைப்பி
னீரினுட் குளித்திட்டாலு நெடுவரை யொளித்திட்டாலுங்
காரியிற் கொடியகண்ணார் காமவெங் கனலுக்குய்யார். (கசு)

இருந்தவ முனிவனுள்ளத் தின்னண மெண்ணி யெண்ணி
வருந்திய வமயத்தெம்மான் மங்கையோர் பங்கனால
மருந்தியெவ் வுலகுங்காக்கு மண்ணல்பே ரருளால்விண்ணிற்
பொருந்தச ரீரிசொற்ற புதுமையும் புகல்வாமன்னோ. (உ0)

பராசர முனிவகேட்டி பராபர னருளானீயிக்
தராதலத் தியற்றிச்செய்கை தனைநினைத் தயர்வுகொள்ளேல்
விராவுறு சுகதுக்கங்கள் விதிப்படி யெய்துமன்றே
புராதன வயன்மான்மூன்றும் புலவருந் தகைத்தற்பாற்றோ. (உக)

களக்கறைப் பெருமானெம்மான் கருணையாற் புவனமுய்ய
வுளத்தினிற் கொண்டவாறிங் கொருதனி மாயன்றானே
துளக்கறு வியாதனென்னத் தோன்றின னதனாலுன்றன்
விளக்குறும் பத்திஞான விருத்திகள் வீந்தமாதோ. (உஉ)

வல்லைநீ சித்தசுத்தி மருவுதற் குபாயங்கேணீ
யெல்லைகீழ் கடற்குமேற்பா லெழிற்பாண்டி நாட்டில்வையை
மல்லலார் நதிக்குக்கீழ்பால் மதுரைக்கு வாயுதிக்கி
லொல்லுமான் மியவில்வக்கா னென்றுயர்ந் துள்ளதாங்கே. (உ௩)

தரத்தரு வரங்களெல்லாந் தந்தருள் சீர்த்திவாய்ந்த
தரத்ததா யிலங்குமேன்மை சால்சிவ தலமொன்றுங்கண்
வரத்துறை யேடகத்தான் மலர்த்துணை யடியும்பாகந்
தரித்தம ரேலவார்பூங் குழலிதன் றாளுந்தாழ்ந்து. (உச)

மும்மையாங் கரணமொன்றி முன்னுபூ சனைபுரிந்தால்
செம்மைசேர் சித்தசுத்தி செய்தவ ஞானம்யாவு
மிம்மையிற் பெறுவாய்போதி யிதனையிங் கெவர்க்கும்விள்ளேல்
மெய்ம்மையீ தெனவுரைத்து நின்றதல் விண்ணின்வாணி. (உரு)

(வேறு.)

விண்ணின்மீதச ரீரிவாய் விளம்பிய மாற்ற
மண்ணினின்ற பராசர மாமுனி கேட்டுத்
தெண்ணிலாமிலை வேணியன் றிருவரு ளிதுவென்
றெண்ணிமீண்டனன் படர்ந்தனன் றென்றிசை நோக்கி. (உசு)

மின்னுதெண்டிரை வையைமா நதிமணிவீசும்
தென்னனாட்டினிற் சேர்ந்துவில் வாரணியத்துள்
என்னுமைந்துலா மேடக மெனுமொரு தலத்தை
முன்னுவந்துகண் டன்பினாற் றொழுதனன்முனிவன். (உஎ)

மூவராய்முழு முதல்வனாய் மூவுலகத்து
மேவுவான்பரஞ் சோதியாய் வேதநுண்பொருளா
யாவுமாய்த்தன தன்பர்தம் பொருட்டெழுந்தருளுந்
தேவன்வில்லுவா ரணியவீசனைத்தரி சித்தான். (உஅ)

கண்டுமாமுனி கண்கணீர் வாரமெய்ப் புளகங்
கொண்டுபுண்ணியப் பூம்புன லாட்டி மெய்குளிரப்
பண்டுதோலுடைப் பரனுக்குப் பட்டுடை சாத்தி
மண்டுநன்மணங் கமழ்தரு சாந்தமும் வணைந்து. (௨௯)

வன்னியேமுதற் பத்திரத் தானறுமலராற்
பன்னுமாயிர நாமமும்பகர்ந்தருச் சித்துத்
துன்னுநல்விரைத் தூபமுந் தீபமுஞ்சுழற்றி
மின்னுதீங்கனி பாலொடு முணவமுதூட்டி. (௩௦)

ஏலநன்மணஞ் செறிந்ததாம் பூலமுமீந்து
நாலுவேதமு நவின்றிடு முறைப்படிநவிற்றி
மாலும்வேதனுங் காண்கிலா மலரடிதொழுதான்
சாலுமன்பினிற் றளர்விலா துயர்ந்தமெய்த் தவத்தோன். (௩௧)

மூன்றுகாலமு மன்பொடு முயன்று செய்பூசை
யான்றவாயிர வருடங்க ளாற்றினன் பின்னர்
மான்றிருக்கின வேலவார் குழலொடு மகிழ்ந்து
தோன்றிநின்றன னேடக்ருதனுஞ் சுயம்பு. (௩௨)

மாதவத்தருந் தொழத்தகு மாமுனி யஞ்சல்
நீதகப்புரி பூசனைநிரம்பவுண் மகிழ்ந்தேந்
தீதகற்றிய சித்தசுத் தியுஞ்செயுந் தவமு
மேதகப்பெறு வாய்நமதன்பர்கள் வியப்ப. (௩௩)

நம்மையொத்தனை நமதுசா ரூபமுந் தந்தோ
மிம்மையித்தலஞ் சண்டிகே சுரனுட னிருப்பாய்
செம்மையுற்றநற் றவமெலாஞ் சித்திக்கு முனக்கே
மும்மைசாலுல குக்குநீ முதல்வனு மாவாய். (௩௪)

என்றுகூறியே யேடக நாதனெம் பெருமான்
பொன்றிணிந்ததன் கோயிலுட் புகுந்தன னன்பா
லன்றுதொட்டுமா முனிவனு மத்தலத் திருந்தான்
மன்றுளாடிய வள்ளறன் பூசனை புரிந்தே. (௩௫)

(வேறு.)

இருந்தவருந் தவமுனிவ னெம்பிரா னெழுந்தருளி
வருந்தலினிச் சாரூபம் வழங்கினமித் தலத்தினினீ
யிருந்திடு சண்டேசனுட னெமையொப்பா யென்றருளித்
திருந்த வொளித்திடுமருளைச் சித்தத்துட் சிந்தித்தே. (௩௬)

ஏழையே னென்பொருட்டு மெழுந்தருளிச் சிவபெருமான்
மாழைமதர் நெடுங்கணுமை மாதினொடு மெதிர்போந்து
பீழைமனக் கசடறுத்துப் பீடுபெற வைத்தொழியா
வூழையொழித் தருளினனே யென்றுள்ள முவந்தெழுந்து. (௩௭)

நிரைத்தகதி ரொளிபரப்பி நிமிர்கோடி பரிதிநிக
ருருத்திருவே டகநாத னொருவனையும் பாகமமர்
வரித்தமல ரேலவார் குழலியையும் வலஞ்சூழ்ந்து
வரத்துறுசந் நிதிநின்று மனநெகிழ்ந்து துதிக்கின்றான். (௩௮)

மாதேவ நினதுதிரு மலர்முக மண்டலம்போற்றி
போதேறு மிதழிமதி புனைந்தசடா டவிபோற்றி
மீதேறு மழுவொடுமான் விளங்குமலர்க் கரம்போற்றி
சீதேவி கொழுநனயன் றேடரிய கழல்போற்றி. (௩௯)

புரிவேள்வி யுருவாகிப் பொருந்துமவை புரிபவனாய்ப்
பரிவோடு மற்றவற்றின் பயனளித்து மளிப்பானா
யரியமறை வடிவாகி யகப்பொருளா யதன்முடிவாய்த்
தெரிவரிதா யெங்குநிறை செல்வநின்பூங் கழல்போற்றி. (௪௦)

மூவர்சுரர் முதலாய முழுதுலகுந் தனிப்புரக்குங்
காவலருங் காவலரிட் டுவந்துதொழுங் கண்ணுதனின்
பாவலர்முத் தமிழ்ச்சங்கப் பாமாலை யொடுசொற்கண்
மாவலரு மாரியப்பா மாலைபுனை கழல்போற்றி. (௪௧)

ஞாதுருவாய் ஞேயமதாய் ஞானமுமாய்க் கலையுரைக்கும்
பேதமொடு பேதமுமாய்ப் பிறங்குபர சுகமாகிப்
போதகனாய் மாணவனாய்ப் புகன்றிடுமெய்ப் பொருளான
நாதனுமாய் நின்றோய்நின் னளினமலர்க் கழல்போற்றி. (௪௨)

பிருங்கிமுதன் முனிவரரும் பிரமனொடு தருமனுமே
யொருங்குமன முவந்துதொழு முத்தமவித் தகசடையுண்
மருங்கமரும் கருங்குழலின் மங்கைமகிழ் தரவிவந்து
வருஞ்சுரநீர் வீறடக்கி வைத்தவநின் கழல்போற்றி. (௪௩)

மாயனயன் றொழுதேத்த வரமளிக்குந் தாமுடையாய்
தீயநமன் சேயையடர் திறமழிக்குஞ் செயலுடையா
யாயுநறு மலரேல வார்குழலி யமரிடத்தாய்
தூயதிரு வேடகத்திற் றோன்றியவா கழல்போற்றி. (௪௪)

உருகிமனங் கரைந்தொருகை யுதகமொடு பச்சிலையிட்
டிருகைகுவித் தேத்துமவர்க் கிருங்கயிலை யளித்தருள்வோய்
ப்ருகுசுவைக் கனிகளொடு பண்ணியமை வேதனங்க
டருமவருக் கைந்தருக்க டருபவநின் கழல்போற்றி. (௪௫)

சம்போசங் கரகங்கா தரசிவசாம் பவபரம
வம்போரு கன்சிரமற் றுமையினொ டேனத்தின்
கொம்போடு புனைமார்பா குழைவெள்ளைக் கோடுடையாய்
தம்போத மற்றவருள் சார்பவநின் கழல்போற்றி (௪௬)

என்றட்ட கத்துதியா லேத்திக்கை தொழுதிறைஞ்சிக்
கன்றலில்லீப ராநந்தக் கடன்மூழ்கிக் கரைகாணாத்
துன்றுபெருங் காதலுறுந் தூயபரா சரமுனிவன்
மன்றுணடித் தருள்வோன்முன் வரம்பலவும் வேண்டுவனால். (௪௭)

(வேறு.)

எத்தலத்துள்ளு மித்தலமேன்மை பெறவேண்டு
மித்தலத்தென்று நீயும்வதிதந் திடல்வேண்டு
முத்தமத்தென்பே ராலித்தலஞ்சீ ருறல்வேண்டுஞ்
சித்தமெற்கினிநற் சுத்தம தாகச் செயல்வேண்டும். (௪௮)

சுந்தரமுனனைத் துதிபுரிகின்ற தமியேன்பேர்
சந்திரனுகஞ் சேர்தருசங்கா தரநிற்கு
முந்தியபேரன் போடுறைபாகத் துமையாட்குஞ்
சொந்தமதாக வழங்குதல்வேண்டுந் துணைவேண்டும். (௪௯)

அமையுறுமேட ரவியிற்பௌரணை யந்நாளி
லுமையுறுபங்கா ருனைநற்புண்ணிய வுதகத்தாற்
கமையுறுமன்போ டபிடேகித்துக் கவினுரச்
சமையுறுவெண்பட் டாடையுடுத்தி தருமாறே. (௫௦)

மாமணிவெண்முத் தங்கோமேதம் வைடூர்யந்
தூமணியாரம் பன்மலர்மாலைத் தொடைசாத்திக்
காமலிதண்பூங் கலவையணிந்து கனிவோடு
நாமருவும்பே ராயிரநாம நலங்கூறி. (௫௧

கருதுவில்வங்கொண் டருச்சனையாற்றிக் கமழ்தூபம்
விரவுறுதீபஞ் சாலியன்னமுறை வேதித்துப்
பரவியவீரெட் டுபசாரங்கள் பரிவாற்செய்
தரதனமேருத் தேர்மிசையேற்றி விழாவாற்றி. (௫௨

கண்ணாரக்கண் டஞ்சலிசெய்து களிப்போரா
மண்ணோர்போற்றும்படிவைத்தவர்தம் மனத்தேநீ
பண்ணார்மொழியோ டுற்றிடல்வேண்டும் பாரில்யா
னெண்ணுநின்று வேண்டுவதிவையே யெனநின்றான். (ருங)

இவ்வகைபோற்றி யிசைதவன்வேண்டிய வெல்லாமு
மவ்வகையேதந் தோமெனமுன்னின் றருள்செய்தே
யெவ்வமில்செம்பொற் கோயிலினுள்ளா லெழிலோங்குந்
திவ்வியமாடத் தேடகநாதன் சேர்ந்தானால். (ருச)

மாத்தவனன்றெம் மானரு ளானின் மலனாகிப்
போதவனும்பிற் போதரமுந்தும் புகழ்பெற்றா
னாதலினாலா நந்தமடைந்தங் கணியாரு
மேதகமுந்தும் பணிபுரிதற்கே விழைவுற்று. (ருரு)

முன்னினனமரத் தச்சனையன்னான் முன்னெய்தித்
துன்னியமாடப் பந்திகண்மண்டபஞ் சோமின்னும்
பொன்னிலைவிண்ணிற் றிகழ்கோபுரநாற் புரமாரப்
பன்னெறியுற்றா ரெழுபிரகாரம் பருமன்றம். (ருசு)

சொன்னவிமானம் புண்ணியதீர்த்தத் துறைபல்ல
பன்னியபொன்னார் விண்டொடுதிண்டேர் பலவூர்தி
மன்னுறுதுவசம் விடபாலயமும் வளரோங்கி
நன்னெறியுறவுண் டாக்கினனன்றே நனிவல்லே. (ருஎ)

துந்துமிசங்கந் தண்ணுமைதாளந் தொனிசெய்ய
வந்தரவானோர் விண்ணிடைநின்றே யலர்பெய்யப்
பந்தியினோதுந் திப்பியகீதம் பலபாட
முந்துவிழாவுங் கண்டுமகிழ்ந்தான் முனிநாதன். (ருஅ)

நம்பெருமான்றன் பூசனையென்று நடந்தேறப்
பம்புறுசிற்றார் நந்தனவனமார் பழுவங்க
ளம்பொனணிந்த திருவாபரண மநேகங்க
ளும்பருமெச்சும் படிமற்றெவையு முதவிப்பின். (ருகூ)

மெல்லியல்பங்கன் கண்ணுதலோன்பால் விடைகொண்டு
பல்லதலம்புண் ணியதீர்த்தங்கள் பரவிப்போய்
நல்லவனஞ்சால் வதரிக்கண்ணன் னடைமேலாம்
வல்லதவஞ்செய் வேதவியாதன் வளங்கண்டான். (சுO)

மீண்டெழிலோங்கும் வில்வாரணிய மிசைமேய
வாண்டவனுமெம் மானடியிற்றாழ்ந் தன்பாரூப்
பூண்டுவரும்பூ ரணைதோறும்பூ சனைசெய்து
வேண்டியிருந்தான் சிவதருமத்தின் விளைவேற. (சுக)

எண்ணுறுமன்பிற் சான்றபராசர னிவ்வாறு
யண்ணிய வுண்மைப் புண்ணியமேலீ டதனாலே
கண்ணுதலெம்மான் மங்கையோர்பங்கன் கழலாருந்
தண்ணியபொற்பூஞ் சேவடிநீழல் சார்ந்தானால். (சுஉ)

(வேறு.)

என்றிவையெடுத்துச்சூத முனிவர னியம்பக்கேட்ட
நன்றிகொள் சௌநகாதி மாதவர் நயந்தவன்பின்
மின்றிகழ் வில்வக்கான மெய்ப்புகழ்க் காதையின்ன
வன்றியு முளதேலோந்து மருள்கென வேண்டினாரால். (சுங)

பராசரப்படலம் முற்றிற்று.

ஆக படலம் எக்குச் செய்யுள் கூ௱கூக.

# குசகேதுப் படலம்.

பந்த மற்ற பராசர மாமுனி
யந்தில் பூசனை யாற்றிய தோதினுங்
கொந்து மாலைக் குசகேது மன்னவன்
முந்த ருச்சித்த முன்கதை கூறுவாம். (க)

(வேறு.)

முன்னொரு கற்பந்தன்னின் முதல்வனெம் பெருமான்றட்கு
மன்னிய வன்பனீதி மனுநெறி வழாச்செங்கோலான்
மன்னவர் முடிகடாக்கும் வடுப்பொலி கழல்வேய்காலான்
கொன்னவி னெடியவேலான் குசகேது வெனுமோர்வேந்தன். (உ)

வையநாட் டேடகத்தில் மன்னியாள் நாளிற்கோட்கள்
செய்யதம் வழிகண்மாறித் திறம்பிட வந்நாட்டி
லுய்யுறப் பெய்யுங்கொண்மூ வொழுக்குமா றியதாற்செய்யின்
மையினல் விளைவுமாறி வற்கட மலிந்ததெங்கும். (ங)

அவ்விறை யரசாவிருட்டி யதனினாற் பிரசையாவுங்
கவ்வைமிக் குறலையுன்னிக் கணிப்பிலா வன்னதானஞ்
செவ்வையி னந்தணர்க்குச் செய்தும் பன்மகங்கள்வேதத்
தவ்வழி புரிந்துமாரி யனுவள வும்பெய்தின்றால். (௪)

மீட்டுமீ சன்பாற்பத்தி மிகவியற் றியுமவன்பேர்ப்
பாட்டினை யிசைத்துஞ்சைவ பத்தரைப் பூசித்தும்மெய்
வாட்டுவ வாசமுற்று மணிதிரு நீறுதான
நாட்டுறச் செய்துமந்த நாட்டினிற் புயலேயின்றே. (௫)

புத்திரர் தந்தைபாலும் புணர்முலை மின்னார்தம்மை
நத்திய கணவர்பாலும் நற்சீடர் குருவின்பாலு
மித்தையிற் றம்பிமார்கண் மேலுள மூத்தோர்பாலும்
பத்திகொள் பிரசைவேந்தன் பாலு மன்பற்றானன்றே. (௬)

கம்மியர் முதலோராய கைத்தொழி லாளர்யாருந்
தம்மகட் டுண்டியின்றித் தைரியங் குன்றிவீழ்ந்தா
ரம்மவிவ் வனைத்தும்வேந்த னுய்ந்தரு ருழன் றுகாத்தற்
கிம்மியு முதவவொண்ணா தேங்கியீ சன்றாளுன்னி. (௭)

ஊன்றன்பிற் றலோபவாச முற்றனன் கிடந்தானந்த
ஞான்றடி யரைச்சோதித்து நன்குபின் பருளுங்கொன்றை
கான்றிழி நறவவேணிக் கைலையெம் பெருமானந்தக்
கோன்றனிச் செயலுள்ளத்துக் குறித்திது செய்வதானான். (அ)

வெள்ளியங் கிரியினின்று விமலனுங் கருணைமூர்த்தி
யெள்ளலி லாதவானி னிமையவர் முன்னோரேத்த
வொள்ளிய விடையொன்றின்மே லும்பன்மா முகன்முன்னாக
வுள்ளசூழ் பரிவாரங்க ளுமையவ ளோடுமேறி. (௯)

துந்துபி யைந்துமார்ப்பத் தூயநான் மறைகள்வாழ்த்தச்
சிந்துநீர் வைகைக்கீழ்பாற் றிகழ்வில்வா ரணியம்வந்து
முந்துவை காசித்திங்கண் முன்னுபூ ரணைவிசாக
நந்துமங் களவாரத்தி னண்பக லேற்றோரைக்கண். (௰)

சுற்றுநாற் புறத்தும்பத்து யோசனைத் தூரத்திற்கும்
மற்றுநா ரேசனைக்கண் மருங்கினுஞ் சிதறும்வண்ண
முற்றதன் சடைக்காரொன்று லுதகமா மழையைப்பாரின்
முற்றுள சீவரெல்லா முகந்துய்யப் பெய்வித்தானால். (௧௧)

*குசகேது மன்னனங்குக் குறைவிலா வருடந்தன்னை
நசையுறாஉக் கண்டானந்த நண்ணியான் வேண்டியாங்கே
பசிதெற வுயிர்கள்வாழப் பைம்முகில் பொழியச்செய்தாய்
வசையறு கருணைக்குக்கைம் மாறெவ னெனத்துதிப்பான். (௧௨)

சம்புவே போற்றியேமா சலமக டவனேபோற்றி
பம்பியெங் கணுநிறைந்த பரமத யாளுபோற்றி
யம்புவி யாக்கிக்காத்திட் டழித்தற்கா ரணனேபோற்றி
வெம்பவ மாற்றிமோக்க வீடருள் விமலபோற்றி. (௧௩)

காரணங் கட்கெலாமுற் காரணப் பொருளேபோற்றி
பூரண குணத்தாய்போற்றி பொருவரும் வடிவபோற்றி
யாரண சிகைக்குமெட்டா வாதிநா யகனேபோற்றி
வாரணப் பிறவிதாண்ட மதலையா யுள்ளாய்போற்றி. (௧௪)

சிவமய சோதிரூப சின்மயப் பொருளேபோற்றி
தவமுயல் யோகருள்ளத் தாமரை மலர்வாய்போற்றி
யவமுறு வடியர்வேண்டு மனைத்தையு மருள்வாய்போற்றி
பவமுத லறுக்கவேட்டார் பற்றுக்கோ டானாய்போற்றி. (௧௫)

வித்தியா ரூபாகோர விச்சுவ மூர்த்திபோற்றி
சத்தியோ சாதபோற்றி தனிவாம தேவபோற்றி
நித்திய வமிதபோற்றி நீள்சதக் கிருதுபோற்றி
கத்தவி கர்த்தபோற்றி கழறுசங் கர்த்தபோற்றி. (௧௬

ஏகனே யநேகபோற்றி யிகல்புர தகனபோற்றி
பாகமோர் பெண்ணைவைத்த பசுபதி பவாந்தபோற்றி
சீகண்ட பரமபோற்றி திகழுமுக் கண்ணபோற்றி
யோகசாட் சியனேபோற்றி யுட்பிரே ரகனேபோற்றி. (௧௭

நின்னையான் முன்னும்பின்னும் நேருமேல் கீழெங்கண்ணு
மன்னுமெஞ் ஞான்றும்போற்றி வணங்குவ னெனத்துதித்தா
னன்னதோத் திரத்தானந்த மடைந்தருட் கடலாமூர்த்தி
யென்னிகர் மோலிவேந்த னெதிர்ப் பிரசன்னனாகி. (௧௮

புண்ணிய வரசநீதான் புகன்றிடு சோத்தங்கேட்டுத்
தண்ணிய வுளம்பூரித்தேன் தனிகனி யாணுயெம்பா
னண்ணுமெய் யன்பர்தம்மு ளாயக னீயேநின்னு
ளெண்ணிய வேண்டுகென்று மெழிற்றிரு வாய்மலர்ந்தான். (௧

* வருடம்—மழை.

அத்திரு வாக்குத்தேவ ரமுதெனச் செவியாம்வாயாற்
றுய்த்தகோ மகன்பணிந்து துணைக்கரஞ் சிரமேற்கூப்பி
யெத்திறத் தேவருக்கு மெட்டாநின் சேவையின்வே
றெத்திரு வெனக்குவேண்டு மெண்கணா னுலகுநொய்தே. (௨௦)

என்னினு மெனதுளத்தி லிச்சையோர் மூன்றுண்டான
வன்னவை யிரவிதிங்க ளமர்ந்திடு காறுமீது
மன்னுவில் லுவகானப்பேர் மருவுத லொன்றுனைகலே
யென்னமே லாக்கலொன்றிங் கென்றுநீ வதிதலொன்றாம். (௨௧)

இந்நமூ வரங்கள்வேட் டேனென்னலுங் கருணைவள்ள
லந்தவா றாகவென்னா வருளின னத்தலத்திற்
சந்ததம் வசிக்கும்புன்மா தாவரங் கட்குமுத்தி
தந்தருள் வாயென்றால்யாஞ் சாற்றலென் மனித்தருக்கே. (௨௨)

அன்றுதொட் டயன்மால்காணா வமலனவ் வில்வக்கானுள்
நன்றுமை மகார்களோடு நாட்டினிற் றென்கைலாய
மென்றுரை தருஞ்சீர்சான்ற வெழில்கொளத் தலத்தின்கண்ணே
யென்றுமீற் றிருந்தானம மேடக நாதனென்ன. (௨௩)

(வேறு.)

பின்னரக்குச கேதுவாம் பேரினா
னனவிசனுக் கார்வசந் தோற்சவ
நன்னராற்றிட நாடி நவதினம்
பன்னுவைபவப் பண்பி னியற்றியே. (௨௪)

தசமமாந்தினந் தன்னில் விடையினி
லசலமங்கையோ டார வரன்றனை
யிசையின்வாச்சிய மார்ப்ப வெழுவித்து
நசைகொள்நான்முக னற்றட நண்ணியே. (௨௫)

அத்திதேவனை யாகம நூற்படிச்
சுத்தபுண்ணிய தோயத்தின் மூழ்குவித்
தெய்த்திலாதகற் பேந்திழை கைப்பிடித்
தத்தடத்தி லவபிரு தாடினான். (௨௬)

பின்னுமீசனைப் பேணியவ் வாஞ்ஞையான்
மன்னுமாலய மாபணி யாற்றிட
றுன்னிமண்டபஞ் சூழ்மதில் கோபுரஞ்
சொன்னவாயிரத் தூண்மண் டபமுதல். (௨௭)

---

* அவபிருதம்—கடைநீராடல்.

மண்டமுற்புகை மாமரு சாலைசெம்
புண்டரீகமொய் புண்ணிய தீர்த்தத்தில்
றண்டுறைப்படி சார்நடு மண்டபங்
கண்டுமுத்திக் கரையினைக் கண்டனன். (௨௮)

அத்தனூர்தரற் கானவெள் ளேறுமுன்
னத்துமூர்திக ளூடெழின் மாரகஞ்
சுத்தமாமணி தூயசொன் னத்தினிற்
புத்தியாகப் பதித்தணி வித்தனன். (௨௯)

நாட்டுநித்திய நைமித்தி யத்தொடு
சேட்டமானவி சேடமெ னுங்கிரி
பூட்டுநாயகன் பூசனைக் கேயத்தன்
னூட்டிற்பாதியை நல்கின னன்பொடு. (௩௰)

கங்கைமாநதி கட்டுஞ் சடாடவி
யங்கணுன்றனக் காகுங் கடிமலர்
புங்கமாமலர் பொற்புறு நந்தனந்
துங்கவரிலயச் சூழலி லாக்கினன். (௩௧)

அந்தணாள ரடுக்குறை வீதியும்
பிந்துமற்றையர் போரக வீதியு
மிந்திலவண்டமொய் யாவண வீதியுங்
கொந்துகோக்களின் கொட்டிலு நாட்டினான். (௩௨)

குஞ்சரங்கள் குடிகொளு நம் வாரிகள்
விஞ்சுவேக விறற்பரி மந்திர
மஞ்சுலாமுடி வையநற் சாலைக
ளஞ்சுறுதப தாதியில் லாக்கினான். (௩௩)

இன்னவான வெழின்மிகு செல்வங்கண்
மன்னவாக்கி மகிழ்ந்து மனங்குளிர்ந்
தென்னவூரு மிதற்கிணை யின்றென
நன்னராக நகரம் புதுக்கியே. (௩௪)

நித்தியோற்சவ நேர்ந்தபக் கோற்சவந்
துத்தியப்பிர தோடம கோற்சவ
முத்தமச்சிவ ராத்திரி யுற்சவ
நத்துசோமவா ரத்தினல் லுற்சவம். (௩௫)

* வையம்—இரதம்.

ஆரனல்விழா வாதிரை யின்விழா
சேருமாத விழாவாண் டின் சீர்விழா
சாரிரத்தின தண்டிகை யின்விழா
மேருவில்லிக்கு மேதகக வாற்றியே. (௫௬)

பன்னியோடு பரவியே யேடக
மன்னுமாலயத் தீசனை மன்னுயிர்க்
கன்னையாமேல வார்குழ லாளம்மை
தன்னைநாளுந் தரிசித் துறைந்தனன். (௫௭)

எண்ணுமுப்பத் திரட்டியா மாயிர
நண்ணுமாண்டு வரையந் நகர்க்கணே
யண்ணிவைகி யரனரு ளாற்பெரும்
புண்ணியத்தொரு புத்திரற் பெற்றனன். (௫௮)

சோடனென்னத் துலங்கு பெயர்புனைந்
தேடகத்தர னின்னரு ளான்முடி
சூடநல்கிச் சுடர்குச கேதுமன்
சேடகங்கணன் சேவடி சேர்ந்தனன். (௫௯)

குசகேதுப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௬௫௦.

# திருஞானசம்பந்தப்படலம்.

நாதனேடக நாயகனைக்குச
கேதுமன்னவன் கிட்டி யருச்சித்த
தோதினஞ்சம ணோய்ந்திட வந்தருள்
போதசம்பந்தர் பூண்கதை போற்றுவாம். (௧)

(வேறு.)

காருலவுங் காமலிந்த காழிநகர்க் கவுணியரின்
கலைதேர் சீல
ரேருலவும் சிவபாத விருதயரா மவர்மனைவி
வடமீ னேய்க்கும்
பேருலவும் பகவதியா ரிவர்கள்செயும் பெருந்தவத்தாற்
பிறந்து ஞானச்
சீருலவுஞ் செங்கடம்பின் றெரியலணி சேய்சேயாச்
செனித்தா ரம்மா. (௨)

நீராடச் செலுந்தந்தை பின்சென்றார் நின்மலமாய் நிகழு மூன்றாண்
டாராகு மாருளுடைய பிள்ளையா ரவர்மறுக்க வகலா தேக
வேராரு மாலயத்தி லிலங்குதடக் கரைநிறுத்தி யெழி னீராடப்
பாரார்க ளுய்யவந்தார் பசித்தழுதார் சிவகரத்தின் சிகரம் பார்த்தே. (௩)

அம்மையே யையேயென் றழுவார்க்குத் தோணியப்ப ரன்னை யாரைக்
கொம்மையூர் குயப்பாலை மாழைவள்ளந் தனிற்கறந்து கொடுப்பா யென்னச்
செம்மையார் ஞானமொடு செழும்பாலை யூட்டவுண்டு பசிநோய் தீர்ந்தா
ரெம்மையா ளுடையாருந் திருஞான சம்பந்த ரெனப்பே ரெய்ந்தார். (௪)

தன்னியம முடித்தெழுந்த தந்தையார் நோக்கியெவர் தந்த பாலை
யுன்னியுண்டாய் சொல்லென்றே யொருமாறு கொண்டோச்ச வுளத்தன் போடு
சென்னிமிசைச் சேர்த்தவொரு செங்கைவிர லாற்சுட்டிச் சேணிற் காணக்
கன்னியொடு மிடபமதிற் றோன்றுபெரு மான்றன்னைக் காட்டி னாரே. (௫)

வேதமுத லக்கரத்தை வன்மெய்யோ டுறச்செவியால் விளங்குந் தோட்டை
யோதினர்செந் தமிழ்மறையா லுவந்துதிருத் தோணியப்ப ருபய பாதப்
போதிலெழு மன்புடனே புண்ணியராந் தந்தையும்பின் போந்தார் கோவில்
தீதிலவ்வூ ருள்ளார்க டெரிந்தடைந்து வணங்கினரச் சிவக்கன் றின்றாள். (௬)

தந்தையவூர் தோண்மீதிற் றன்புகலி வலம்போந்தார் சனங்கள் சூழப்
பந்தமிலாச் சிவஞான சம்பந்தர் மறுநாளப் பரமன் பாதந்

சிந்தையுற வணங்கியபின் றிருக்கோலக் காச்சென்று
வேதஞ் செப்ப
அந்தவரன் பொற்றாள மணிக்கப்பெற் றடைந்தாரச்
சண்பைக் கன்றே. (௭)

பகவதியா ருதித்தநனி பள்ளியுள மறையவர்கள்
பக்க லூரார்
மிகவுமதி சயித்தணுகி விழைந்துதொழு துய்ந்தனர்பின்
வேண்ட வந்தத்
தகவுடையார் நனிபள்ளி தாதைதோண் மேற்செலுங்காற்
றமிழ் வேதத்தை
யகமகிழ வுரைத்தங்க ணமர்ந்ததற்பின் றலைச்சங்கா
டணுகி னாரே. (௮)

பதியிலுயர் வலம்புரமும் பல்லவனீச் சுரஞ்சாய்க்கா
டெழில் வெண் காடும்
மதிதவழுஞ் சிகரிமுல்லை வாயிலுமுற் றடிவணங்கிப்
பதிகம் பாடிக்
கதிதருமச் சிரபுரத்தைக் கண்டுமயேந் திரப்பள்ளி
குருகா வூர்சென்
றதிசயிக்கக் கவிபுகன்று காழிவந்தார் நீலகண்ட
ரவணுற் றாரால். (௯)

வரவறிந்து பிள்ளையார் பாணரெதிர் செலவவரும்
வணங்கி வாழ்த்தப்
பரனடியை வணங்குவித்துப் பணித்தனர்யாழ் பாடவவர்
விறலி யோடுந்
தரமிகும்யா ழிசைக்கக்கேட் டுகந்தவர்க்குத் தங்குமிடந்
தந்துண் பித்தார்
சிரபுரத்துப் பிள்ளையார் செப்புதமி ழிசையாழிற்
சேர்த்துப் பாடி. (௧௦)

யாழினிலே தேவரீ ரருட்பாவை யமைத்திசைக்க
வருள்வீ ரென்னக்
காழிநகர்ப் பெருமானுங் களித்தருள வன்றுமுதல்
யாழுங் கூட
வூழிகடந் திடுந்தில்லை யுகந்துசென்றார் பாணருட
னுறல்கேட் டுற்ற
வாழியமூ வாயிரவ ருடன்பதியை வலம்போந்து
மன்றுட் புக்கு. (௧௧)

கற்றாங்கென் றெடுத்தோதிக் களிப்பெய்தி வேட்களத்தைக்
கண்டு பாடி
யுற்றாங் ககன்றுகழிப் பாலைதொழு தம்பலத்தை
யுகந்து சேரக்
கற்றார்மூ வாயிரவர் சிவகணமாக் காணவது
பாணர் காணச்
சொற்றார்பின் னடிஞா யென்றதொடைப் பாமாலை
சூட்டி னாரே. (௧௨)

தானுதித்த வெருக்கத்தம் புலியூரு நிலாக்கரையிற்
றலங்கள் யாவுங்
கூனன்மதி வேணியரைத் தரிசிக்க வெனப்பாணர்
கூறக் கேட்டு
ஞானமலி பெருமானவ் வெருக்கத்தம் புலியூரை
நண்ணிப் போற்றி
வானளவு முதுவரைப்பெண் ணாகடத்திற் றூங்கானை
மாடம் போற்றி. (௧௩)

நெல்வாயி லறத்துறைக்குச் செலவுன்னித் தந்தைதோண்
நீக்கிப் பூந்தாண்
மெல்லமிதித் தேகியங்கு மாறன்பா டிப்பதியை
மேவி னாராங்
கெல்லியுற வப்பதியி லிருந்தருள வறத்துறைவா
ழீசன் பிள்ளை
புல்லும்வருத் தங்கண்டு பொற்றரளச் சிவிகைகுடை
சின்னம் யாவும். (௧௪)

தந்தையா ருடையபிள்ளை தனக்களிமி னெனவவ்வூர்
தன்னில்வாழ்
மந்தணர்கள் கனவிலுரைத் தறத்துறையார் மறைந்தனர்மிக்
கதிச யித்துச்
சிந்தைமகிழ் வுடனெடுத்துச் சென்றனரப் பிள்ளையார்
கனவிற் செப்பு
மந்தமொழிப் படிவரக்கண் டருள்வியந்து பணிந்ததன்மே
லமர்ந்தார் மன்னோ. (௧௫)

திருவறநற் றுறைகண்டு சிவிகையிழிந் தரன்கோவில்
சேர்ந்து பாடிப்
பெருவளநெல் வெண்ணெய்பழு வூர்விசைய மங்கைவைகா
விறங்கு பண்ணை

மருவுபுறம் பயம்வணங்கிச் சண்டேசர் வந்துதித்த
சேய்ஞ லூரிற்
றிருவளருந் தமிழோதிப் பனந்தாள்பந் தணநல்லூர்
சென்று போற்றி. (கசு)

வளமிகுவோ மாம்புலியூர் வாளொளிபுற் றார்கடம்பூர்
நாரை யூருங்
களமிருந்த கருப்பறிய லூர்வணங்கிப் பிள்ளையார்
காழி யுற்று
ளமகிழ்ந்து பகவதியார் திருநீற்றுக் காப்பணிய
வுவந்தில் சேர்ந்தார்
குளமனற்கோ வுடையாரைத் துதித்திருந்தா ருபநயனங்
கொண்டா ரண்ணல். (கஎ)

வேதியர்க்கு மறைதெளிவித் தைந்தெழுத்தின் பெருமைதனை
விளம்பி வாழ்நா
ளோதுதிரு நாவரச ருறுதல்கேட் டெதிர்செலக்கண்
டுவந்து தாழ்ந்தார்
தீதிலரான் திருஞான சம்பந்தர் சிந்தைமகிழ்ந்
தவரைத் தாழ்ந்தார்
காதலுட னிருவரும்போய்க் கண்ணுதற னடிவணங்கிக்
களிப்பி னாழ்ந்தார். (கஅ)

நாவரசைத் தன்னகத்தி னல்லமுத முண்பித்து
நண்ண வப்பர்
பூவுலகிற் றலங்கடோறும் போகவெனக் கருத்தியெனப்
புகலி வேந்தர்
காவளஞ்சேர் திருக்கோலக் காவரைக்கு முடன்சென்று
காழி மீண்டா
ராவலுடன் பலபதியுந் தரிசிப்ப லெனத்தந்தை
யவரோ டுற்றார். (கக)

(வேறு.)

கள்ளிருக்குந் தண்டலைசூழ் கண்ணார்கோ விலைவணங்கிப்
புள்ளிருக்கு வேளூரு நின்றியூர் புகனீடூர்
வள்ளலுறை புன்கூர்மண் ணிப்படிக்கரை குறுக்கை
பள்ளவயல் வள்ளியூர் பந்தணநல் லூர்பணிந்து. (உ0

கஞ்சமார் மணஞ்சேரி கவினெதிர்கொள் பாடியெழின்
மிஞ்சுவேள் விக்குடியும் வியன்கோடிக் காபுகழ்சேர்
கஞ்சனூர் வியலூர்மங் கலக்குடியுங் கற்றவர்கள்
செஞ்சொலார் திருந்துதே வன்குடியு மின்னம்பர். (உக)

வடக்குரங் காடுதுறை வளப்பழன மையாறுந்
தடப்பெரும் புலியூர்நெய்த் தானமழ பாடிபொன்னி
யிடக்கானூ ரம்பிலா லந்துறைமாந் துறையென்னும்
விடைக்கொடியார் பதிகடொறும் விளம்பினர் தமிழ்ப்பதிகம். ()

மழநாட்டிற் காவேரி வடகரையிற் சென்றங்கே
யழகாருந் திருப்பாச்சி லாச்சிரம மணுகுமுனம்
பழவினையான் முயலகனோய்ப் படர்க்கஞ்சித் தன்மகளை
மழவிடையோன் சந்நிதிவைத் தனன்கொல்லி மழவனென்பான். ()

திருஞான சம்பந்தர் திருச்சின்ன வொலிகேட்டே
யொருபோழ்தி லப்பதியை யொளிவிளங்க வலங்கரித்து
வருவார்முன் னெதிர்சென்று மழவன்பூ மிசைவீழ்ந்தத்
திருஞானச் சேயுடனே சென்றனையான் கோயிலுளே. (உச)

சிவிகையிழிந் தாலயத்துட் சென்றமலம் வந்தருளப்
புவியுய்ய வந்தபிரான் பொற்றொடியி னிடாவினவக்
குவிகரத்தோ னம்மழவன் கூறுவான் முயலகனாற்
சவியிழந்தா ளென்றனையை யென்றவர்க்குச் சாற்றினனால். (உரு)

சொன்னமொழி கேட்டையர் துணிவளர்திங் களெனப்பாப்
பன்னினார் திருப்பதிகம் பாவைபிணி தீர்ந்தெழுந்தாள்
கன்னியொடு மழவனவர் கழறொழுதான் சிலநாளங்
கென்னையா ளுடையபிரா னிருந்துறைபைஞ்ஞீ லியையடைந்தார். ()

செங்கண்மழ விடையோன்வாழ் திருவீங்கோய் மலைவணங்கிக்
கொங்குறுகா விரித்தென்பாற் கொடிமாடச் செங்குன்றூர்த்
திங்கண்முடி யுடையாரைச் சேவித்து நணுபோற்றிச்
செங்குன்றூர் தனிலுறைந்தார் தீப்பனிநாள் சேர்ந்ததால். (உஎ)

பரிசனங்க ளளிர்சுரத்தாற் படுந்துயரந் தனைக்கேட்டா
ரரியயன்கா ணாப்பரமர்க் கவ்வினைக்கிவ் வினையென்று
மரியமொழித் தமிழுரைத்தா ரப்பிணியந் நாடகன்ற
குருதெழுமா டப்பாண்டிக் கொடிமுடிவெஞ் சமாக்கூடல். (உஅ)

கருவூருந் தொழுதுகொங்கைக் கடந்துசோ ணாடெய்திக்
குருகாரும் பராய்த்துறைகற் குடிமலையுந் தொழுதேத்தித்
திருவார்மூக் கீச்சுரமுஞ் சிராப்பள்ளி யானைக்கா
மருவார்பாற் றுறையெறும்பி வளப்பதியு நெடுங்களம்போய். ()

திருக்காட்டுப் பள்ளியுடன் றிருவாலம்பொழில்போற்றி
யுருக்காட்டும் பூந்துருத்தி யுயர்கண்டி யூருடனே
கருக்காட்டா வேதிகுடி கவின்சோற்றுத் துறையடைந்தார்
தருப்பூக்க ணிறைவெண்ணி சக்கராப் பள்ளியுற்றார். (கூ0)

நலத்தின்மிகு புள்ளமங்கை நல்லூருங் கருகாவூ
ரலத்தகத்தாண் மடவார்சூ ழவளிவணல் லூர்தொழுது
நிலத்திலுயர் திருப்பரிதி நியமமுடன் பூவனூர்
சொலத்தகுநல் லாவூருந் தொழுதுவலஞ் சுழியடைந்தார். (கூக)

முதல்வரவ னுறைநாளின் முதுவேனில் வரவந்தப்
பதியகன்று பழையாறைப் பதியடைந்தாரடியருட
னதிகவளக் கழனிகள்சூ ழாறைமேற் றளியெய்தி
முதியவழி வினர்சத்தி முற்றத்தைத் தொழுதேத்தி. (கூ௨)

திருப்பட்டீச் சுரஞ்செல்லுஞ் சிந்தையுடன் புறப்பட்டார்
மருப்பட்ட விதழியார் வண்டாளப் பந்தர்தரக்
குருப்பட்ட சிவபூதங் கொடுவந்து பட்டீசர்
தரப்பட்ட தெனவிசும்பிற் றந்திடவன் னதையுவந்து, (கூ௩)

வணங்கினா ராளுடையார் வாழ்த்தினார் திருவருளைக்
கணங்கொள்ளும் பரிசனங்கள் காவணக்காம் புகள்பிடித்தார்
பணங்கொள்பாம் பணியணிந்த பட்டீசர் பதம்போற்றிச்
சுணங்காருங் குயமடவார் சூழாறை வடதளியும். (கூ௪)

பேசுநலவிரும்பூளை திருவரதைப் பெரும்பாழி
மாசிலாத் திருச்சேறை வளநாலூர் மயானமுடன்
வீசுபுகழ்க் குடவாயில் விளங்குநறை யூர்போற்றிக்
காசுமலி யெழிலரிசிற் கரைப்புத்தூர் சிவபுரமும். (கூ௫)

குடந்தைக்கீழ்க் கோட்டமுயர் குடமூக்குங் கோலமிகு
குடந்தைக்கா ரோணஞ்சீர் கொளுநாகேச் சுரம்பரவி
யிடந்தையுறக் களித்தபிரா னிடைமருதுந் தொழுதேத்தி
யடைந்துகுரங் காடுதுறை யாவடுதண் டுறைசேர்ந்தார். (கூ௬)

மிகமகிழ்வா யப்பதியின் மேவுநாள் தந்தையவர்
மகம்புரிநா ளணுகியதான் மாதனமும் வேண்டுமெனப்
புகறல்கேட் டரன்கோயிற் புக்கிடரி னும்மென்னுந்
தகவுடைய பதிகமதைச் சாற்றினா ராளுடையார். (௩௭)

ஆயிரம்பொன் கிழியொன்றை யரனருளா லொருபூதம்
மேயபீ டத்திலிட்டு விளம்புமுமக் கரனளித்த
தூயதாங் கிழியிதென வரனருளைத் தொழுதேத்திப்
போயங்கண் காழிதனிற் புரியுமக மெனவிடுத்தார். (௩௮)

குறியுடையா ரவணீங்கிக் கோழம்பப் பதிவணங்கி
மறியுடையீர் திருவைகல் மாடக்கோ யிலைத்தொழுது
பொறிவாழு நல்லமுடன் புகலூர்ந்தூர் துருத்தியொடு
மறிவரியார் மாயூர மடைந்துசெம்பொற் பள்ளியுற்றார். (௩௯)

விளநகரம் பறியலூர் வேட்டநற் குடிதரிசித்
துளமகிழ்ந்து தருமபுர முற்றனரெம் பெருமானார்
களநீலப் பாணரன்னை களிப்புடனங் குதித்ததலத்
துளவவர்தஞ் சுற்றத்தா ருவப்புடன்வந் தெதிர்கொண்டார். (௪௰)

பணிந்தார்கள் பாணனார் பார்த்தவரைப் பரமனார்க்
கணிந்ததிருப் பாமாலை யாளுடையா ரருளதனால்
துணிந்தியான் யாழிலிசை துன்னவிசைத் தேனென்ன
விணங்கியவிவ் விசையுலக மெங்குமிசை யோங்கவென்றார். (௪௧)

பகருமொழி கேட்டலுமே பாணர்மன மிகநடுங்கித்
தகவுடையா ரடிவணங்கிச் சாற்றியநும் பாவிசைகள்
மிகவரிதா மோர்பதிகம் வியப்பெய்த யாழ்க்கரிதா
யகநெகிழ வுரைப்பீர்யாழ்க் கடங்காமை தெரிப்பலென்றார். (௪௨)

காழியர்வேந் ததுகேட்டுக் கடவுண்மல ரடிவணங்கி
யாழிலடங் காவிசைநூற் கடங்காமை காட்டவுனி
வாழிகள்சேர் நற்பூமுண் மாதர்மடப் பிடியென்று
மேழிசையின் பாசுரத்தை யியம்பினார் சம்பந்தர். (௪௩)

திருநீல கண்டர்யாழ் சேர்த்திசைக்க வொண்ணாமற்
பெருமான்ற னடிவணங்கிப் பேசுவா ரிவ்யாழும்
மருமந்த பாவிசைப்பே னெனப்புகலா தாகியதா
லுருநீங்க வுடைப்பலென வோங்கினார் தடுத்ததனை. (௪௪)

வாங்கினா ராளுடையார் மாதேவர் பார்வதியா
ரோங்குதிரு வருட்பெருமை யொடுங்குமோ வியாழிற்
பாங்குபெற வியன்றமட்டும் பாடுமெனப் பகர்ந்தளித்தார்
தாங்கினர் சிரமீதிற் றந்தயாழ் தனைவணங்கி. (௪௫)

தருமபுரந் தனைநீங்கித் தகுநள்ளா றடைந்தீசன்
பொருவருஞ்சந் நிதிமுன்னர்ப் போகமார் பூண்முலையென்
றருமைமிகு பதிகமுறைத் தவணீங்கிப் புறத்தணைந்து
திருநீல கண்டரையாழ் சேர்த்திசைப்பீ ரெனவருளி. (௪௬)

தாளந்தன் கைக்கொண்டு சம்பந்தர் பாடியதை
நீளுமிசை யாழ்சேர்த்து நீலகண்டர் வாசித்தா
ராளுடையா ரகமகிழ்ந்தே யப்பதியை நீங்கியற்றை
நாளதிலே சாத்தமங்கை நற்பதியை யணுகினரால். (௪௭)

திருநீல நக்கரது தெரிந்தெதிர்கொண் டடிவணங்கி
யருமைமிகு மவருடன்சென் றயவந்தி யென்றுலாக்கும்
திருவளரு மாலயத்திற் சேர்ந்திறைஞ்சி நீலநக்கர்
பெருமகத்தி லமுதுண்டு பிள்ளையா ரவரமர்ந்தார். (௪௮)

காலையிற்சென் றயவந்தி கண்டுதரி சித்தன்பாய்
நீலநக்கர் சிறப்பதனை நிகழ்த்தினர் பதிகமதிற்
சீலரந்தப் பதிநீங்கித் திருநாகைக் காரோண
மேலமரும் பதிதொழுதார் விடைகொண்டார் நீலநக்கர். (௪௯)

கீழ்வேளூர் தொழுதெழுதல் கேட்டசிறுத் தொண்டர்நண்ணித்
தாழ்விலாத் தன்பதிக்குச் சம்பந்தர் தனையழைப்பச்
சூழ்வந்து கணபதீச் சுரந்தொழுது பிள்ளையா
ரேழ்நரம்பி னிசைசேர்பா விசைத்தனரா றுதொண்டர்புகழ். (௫௦)

செங்காட்டங் குடிவாழுஞ் சிறுத்தொண்ட ரகத்திலவ
ரங்கூட்டு மமுதருந்தி யப்பதியுற் றூர்பின்னாள்
தங்கூட்ட முடன்மருகற் றரிசித்தங் கிருந்தருனாள்
சங்கூட்டுங் கரமங்கை தனையுடன்கொண் டோர்வணிகன். (௫௧)

கோயிலின்பின் புறமடத்திற் குறுகியுறங் கினனிரவிற்
றீயவர வவனுயிரைச் செகுக்கவவ டண்டாளாய்ப்
பாயதுய ருடனழுதாள் பார்மீதிற் புரண்டக்கால்
மேயவிட வைத்தியரால் விடந்தீரா தாயிற்றே. (௫௨)

தாலையிலே கன்னிமன்சு கலங்கியயர்ந் தானுறையு
மாலயத்தை நோக்கிவிட மமுதாக்கு மெம்பெருமான்
வேலனைய விழிபிரதி வேண்டமக னுயிரளித்தாய்
பாலனுக்கா வந்தகனைப் பாதத்தா லுதைத்தனையே. (ருங)

திருமருக லுறைசிவனே சிறியடியேர் தீரவிட
மொருவும்வண மருள்வாயென் றெண்டொடியா ளுரைத்தமொழி
திருவளருங் கோயின்முனஞ் சேர்ந்தபுக லிக்கோன்கேட்
டருள்புரிவா னடியரொடு மவண்முகம்பார்த் தறைகுவார். (ருச)

பயமகற்றி நிகழ்ந்தவெலாம் பகரெனக்கண் ணீர்சொரிந்து
வயவேணு புரப்பெருமான் மலரடியை வணங்கிவைப்பூர்
நயவணிகன் றமனுக்கு நற்புதல்வி யெழுவருளேந்
தயவிலவன் றன்மருக ரிவர்க்கெம்மைத் தருவலென்றே. (ருரு)

சொல்லியவன் பொருட்குமற்றைத் தோகையரைப் பிறர்க்களித்தான்
புல்லுதுய ருற்றவிவர் புலம்பொழிய விவர்தமக்கே
யில்லளிப்பா னெனத்தந்தை தாய்க்குமறைந் திவர்ச்சார்ந்தேன்
நல்லகலங் கடல்கவிழ்த்த நாயகனே ரலிவுற்றேன். (ருசு)

அடிகணீ ரெழுந்தருள வருந்துயரம் போயதென்றாள்
வடியர்த பெருங்கருணை வள்ளலார் விடநீங்கச்
சடையாயென் றிருப்பதிகஞ் சாற்றினார் விடந்தவிர்ந்தா
னடியில்வீழ்ந் திறைஞ்சினா னடியரெலா மார்ப்பரித்தார். (ருஎ)

கன்னிமன மகிழ்ந்தந்தக் காழியர்கோ னடிபணிந்தா
ளன்னவரை மணம்புணர வருளியவ னுறைநாளிற்
றன்னுசிறுத் தொண்டனார் தொழுதுதன தூர்க்குவரப்
பன்னினா ரெழுவிசைந்தார் பாலர்திரு மருகனின்றே. (ருஅ)

சிவன்கோயிற் சென்றுதொழச் செங்காட்டங் குடிக்கோல
மவர்காணக் காட்டினா ரங்கமும்வே தமுமோது
பவரென்னுந் திருப்பதிகம் பாடியந்தப் பதியமர்ந்தார்
புவனமெலா முய்யவந்த புண்ணியராம் புகலியர்கோன். (ருகூ

சிலநாளப் பதியமர்ந்து சிறுத்தொண்டர் விடைகொள்ளப்
பலதலங்க டரிசித்துப் புகலூரின் பாங்கிலுற
நலமிகுந்த முருகனார் நாடியெதிர் கொண்டுதொழ
வுலவடியா ருடன்கோவில் வணங்கியவர் மடத்துறைந்தார். (சூ

வர்த்தமா னீச்சுரத்தை வணங்கியவர் திருத்தொண்டைக்
கருத்தனார் சிறப்பித்துக் கவிபுகன்றங் கிருக்குநா
டிருத்தமிகு நாவரசர் திருவாரூர் வணங்கியபின்
திருப்புகலூர்க் கடியருடன் சேருதல்கேட் டாளுடையார் (சுக)

அடியருட னவர்க்காணு மாசையினா லன்பருட
னிடமிகுந்த புகலூரி னெல்லைகடந் தேகினார்
திடநாவுக் கரசரெதிர் சேர்ந்தொருவர்க் கொருவர்தொழக்
கடல்கருங்கற் றோணியாற் கடந்தாரை வினவுவார். (சுஉ)

அப்பரே யாரூரி லானசிறப் பறையுமெனச்
செப்பினா ராதிரையின் சீர்பதிகத் தாற்கேட்டே
யிப்பொழுதே யாரூரை யெய்திவணங் கிப்பின்ன
ரிப்பதியுற் றும்முடனா னிருப்பலென்றா ராளுடையார். (சுங)

அப்பர்புக லூரடைந்தா ராளுடையார் வீரட்டத்
தொப்பில்விற் குடிவணங்கி யோங்குபுக ழாரூரிற்
றப்பில்லா வன்மீகர் தாள்போற்றிப் பதிகமுறைத்
தெப்பொழுது மாலயஞ்சென் றேத்தியவண் வீற்றிருந்தார். (சுச)

வலிவலமுங் கோளிலியும் வணங்கிப்பின் னாரூரிற்
சிலநாளங் கெழுந்தருளித் திருநாவுக் கரசைநினைந்
திலகுபனை யூர்போற்றி யெய்தினார் திருப்புகலூர்
நலமிகுமந் நாவரசர் முருகரெதிர் நண்ணினரால். (சுரு)

யாவருஞ்சென் றாலயத்தி லண்ணலடி தொழுதேத்தி
மூவரும்போ யடியருடன் முருகனார் மடத்தமர்ந்தார்
மேவுறுநா ணீலநக்கர் மிக்கபுகழ்ச் சிறுத்தொண்ட
ராவலுட னப்பதிவந் தம்மடத்தி லுடனிருந்தார். (சுசா)

பிள்ளையார் நாவரசும் பிறதலங்க டெரிசிக்கு
முள்ளராய் முருகரையவ் வூர்நிறுத்தி நீலநக்கர்
வள்ளலாஞ் சிறுத்தொண்டர் வண்பதிக்குப் புகவிடுத்துத்
தெள்ளுதென் மறைவல்லார் சென்றனர்நா லானடந்தே. (சுஎ)

ஈசனருள் சிவிகையின்மே லேறுகவென் றாரப்பர்
பேசுவார் சம்பந்தர் பின்வருவேன் போவீரே
னேசமுட னெனவப்பர் நீள்பதிசென் றார்பந்தர்
வீசுகதிர்ச் சிவிகையுற்று வினவியம்பர்ப் பதிசார்ந்தார். (சுஅ)

மாகாளந் தனைவணங்கி மகிழ்ந்திருந்தா ரப்பருடன்
போகாத புண்ணியனூர் கோச்செங்கட் சோழர்புரி
மாகாதி நதியணிந்தார் மாவிருமூ தவர்சிறப்பைப்
பாகாரும் பதிகத்திற் பாடியங்கண் வீற்றிருந்தார். (சுகூ)

அப்பதிவிட் டப்பருட னாளுடையார் கடவூருக்
கொப்பிலா ரேகவவ்வூ ருறைகுங்கி லியக்கலையர்
மெய்ப்புனித வடியருடன் மேவியெதிர் கொண்டுதொழ
வப்பெரியா ருடனேகி வீரட்ட ரடிபணிந்தார். (எ0)

காசில்சீர்க் குங்கிலியக் கலயனா ரகத்தருந்திக்
தேசுடையநர் திருக்கடவூர் மயானத்தைச் சேவித்து
நேசமுட னங்குறைந்து நீங்கிப்பின் றிருவாங்கூர்
பாசமிலார் மீயச்சூர் பாம்புரமாம் பதிதொழுதார். (எக)

திருவீழி மிழலைதனிற் சென்றுசிவ னடிவணங்கி
யிருவோரு மிருமடத்தி லினிதமர்ந்து பிற்போது
பெருந்துறையுந் திலதையெனும் பிறங்குபதி யுந்தாழ்ந்தத்
திருவீழி மிழலைதனிற் சிந்தைமகிழ் வுடனிருந்தார். (எஉ)

காழிமறை யோர்காணுங் கருத்தினா லவணடைந்து
சூழ்ந்தெம்மோ டெழுந்தருள்க தோணிபுரப் பதிக்கென்றார்
காழிநகர்ப் பிள்ளையின்று கழித்தும்மோ டுறுவலென
வீழிநகர் வேதியர்கள் விருந்தளித்தார் வந்தார்க்கே. (எங)

சொப்பனத்திற் றோணியப்பர் தோன்றியென் கோலமதை
யிப்பதியில் விண்ணிலிருந் திழிந்தவிமா னத்திற்கா
ணொப்பிலாய் காட்டுவலென் றுரைத்தகன்றார் விழித்தெழுந்து
செப்பியவக் கோலத்தைச் சினகரம்போய்த் தரிசித்தார். (எச)

மைம்மருபூங் குழலென்று மாட்சிநிறை பாமொழிந்தா
ரம்மறையோர்க் கருளுவா ரத்தோணி புரங்கோலங்
கைம்மறியா ரிங்கெமக்குக் காட்டினா ரேகுமெனச்
செம்மனத்து மறைவாணர் சீகாழி சென்றனரால். (எரு)

திருவீழி மிழலைதனிற் செந்தமிழ்வல் லாரிருவ
ரொருவாத மகிழ்ச்சியுட னுறையுநாண் மாரியின்றிப்
பெருகாமற் காவேரி பெரும்பஞ்ச முற்றதனாற்
றிருநீறு புனைகின்ற சிவனடியார் வருந்துற்றார். (எசு)

வருந்துவரென் றிரங்கியே மாதேவன் கழலுன்னித்
திருந்துமனப் பிள்ளையார் திருநாவுக் கரசிரவிற்
பொருந்துதுயி லின்கனவிற் புராந்தகனூர் புகலுவா
ரிருந்தகுண குடபீடத் திடுவோமோர் காசுமக்கு. (எஎ)

பஞ்சம்போ நாளளவும் பண்புடனீ வோமென்னக்
கஞ்சநிகர் கண்விழித்துக் கடவுளரு டனைத்துதித்து
மஞ்சுலவுஞ் சினகரத்துள் வந்தனர்கீழ்ப் பீடத்தி
லெஞ்சலிலாக் காசினைக்கண் டெமையாள்வார் தொழுதெடுத்தார் (எஅ)

மேற்பாற்பீ டத்திருந்த விழுமியகா சரசெடுத்தார்
தோற்பாலாம் பறைசாற்றித் தொழுஞ்சைவத் தொண்டர்தமைப்
பாற்பாலாந் தயிர்நெய்யும் பலகறியுஞ் சமைத்தூண்பித்
தாற்பாலார் பரனருளா லாங்குநிகழ் காலத்தில். (எகூ)

அப்பர்மடத் தடியார்க ளருந்தினார் காலத்தி
லப்படித்தம் மடத்திலமு தருத்தத்தாழ் வென்னென்று
ரப்பொழுது பாகுகர்க ளாளுடையா ரடிவணங்கிச்
செப்புவர்நங் காசுவட்டஞ் செட்டிகடாங் கேட்கின்றார். (அ0)

ஆதலினாற் றாழ்ப்பதென வப்பர்புரி கைத்தொண்டிற்
காதலினால் வட்டமிலாக் காசளித்தா ரெனப்புகலி
நாதரினி வாசியிலா நற்காசு பெறுவமென
வோதினார் வாசிதீ ரொண்காசு நல்குமென்றே. (அக)

வாசியிலாக் காசளித்தார் மகிழ்வுடன்பெற் றன்றமுத
லீசனடி யார்க்கமுதை யின்புடன்கா லத்தருத்தி
நேசமுட னுறையுநா ணீங்கியதா னிகழ்பஞ்சம்
வீசுவள மிகவீழி மிழலைநகர் நீங்கிப்போய். (அஉ)

சீர்மலிந்த வாஞ்சியமுந் திருத்தலையா லங்காடும்
பேர்மலிந்த பெருவேளூர் கரவீரந் திருவிளம
ரார்மலிந்த வேணியா ராரூருங் காறாயில்
நீர்மலிந்த தேவூரு நெல்லிக்கா கைச்சினமும். (அங)

தெங்கூருங் கொள்ளிவனந் திருக்கோட்டூர் வெண்டுறையுங்
கொங்காருந் தண்டலைநீ ணெறிகளருங் கும்பிட்டுச்
சங்கூரு மறைக்காட்டிற் றமிழ்முனிவர் தாமடைந்து
பங்காரு முமைபாகப் பரன்கோயில் வலம்வந்தார். (அச)

ம்றைபூசித் தடைத்தழீத லிதுகாறு மறைத்திருக்கு
மிறைவாயிற் கதவங்க டிறக்காம லிப்போதுஞ்
ஞறவேறு வாயில்வழி யுறுவார்க ளெனக்கேட்டு
நிறைஞான சம்பந்தர் நிகழ்த்துவா ரப்பருக்கு. (அ௫)

நாவரசே நாமிங்கு நாதனார் முன்சென்று
பாவுரைத்துத் தரிசிக்கப் பழங்கதவந் திறக்கநீர்
தாவில்கவி செப்புமென்றார் சாற்றினார் திறவாதப்
பீவினிற்றாழ்த் ததுகண்டு கடைக்காப்புப் பாடினரால். (அசு)

கதவுதிறந் ததுகண்டு களிப்பெய்தி யடியார்கள்
குதுகலித்தார் நாயன்மார் கூவிடைவீழ்ந் தடிவ்ணங்கி
விதுவணிந்தார் முன்சென்று விளம்பினார் வியன்பதிகம்
மதிமிகுந்தார் வெளிவந்தார் வண்கதவ மடைப்பதற்கு. (அ௭)

பாடுவீ ரெனவப்பர் பகரமுனி யருள்பதிக
நீடுதிரு முதற்பாவி னீள்கதவ மடைத்ததா
லாடுதிரு நீள்கதவு திறந்ததுவு மடைத்ததுவும்
நாடியரு ட்ணைநயந்து நாயன்மார் வணங்கினார். (அஅ)

முற்கவியிற் கதவடைத்து முழுதுமுரைத் ததன்பின்னென்
சொற்கவியிற் கதவுதிறந் திடுதலென்னென் றகஞ்சூழ்ந்தே
யற்கணிரு விழிதுயின்று ரப்பரவர் சொப்பனத்தி
னற்கவினார் வாய்மூரி லுமிருப்போம் வாவென்றார். (அ௯)

நெடும்போது பின்றொடர்ந்து நெருங்கிலரா னடுவினில்விண்
டொடுங்கோயிற் காட்டியிபத் தோல்போர்த்தார் புகவன்பிற்
படுங்கோவுந் தொடர்ந்தனரிப் பண்புகேட்டாளுடையா
ருடன்போந்தார் தரிசனஞ்செய் துடன்மறைக்கா டடைந்தனரே.

திருஞான சம்பந்தப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௱௨௦.

## ஏடெதிர்ந்த படலம்.

ஏற தேறா னின்னருட் சம்பந்த
ஏறு தோற்ற மிசைத்தாஞ் சமண்கழு
ஏற வன்னவ ரிட்டவே டேயெதிர்ந்
தேறி வையையி.லேவந்த தோதுவாம். (௧)

(வேறு.)

ஈண்டிவர்க ளிருக்குநா ளெழிற்பாண்டி மாதேவி
யாண்டகழு மலவரச ரருமறைக்கா டுறல்கேட்டுப்
பாண்டியனுஞ் சமண்சமயம் பற்றியதைத் தீர்க்கவெணி
மூண்டமகிழ் வுடன்சிலரை முனிவர்பால் விடுத்தனரால். (௨)

திருந்துமறைக் காடடைந்து திருமடத்தை யணுகினார்
பொருந்தியவர் வந்தசெயல் புகன்றனர்போய்ப் புனிதர்பா
லருந்தவத்துப் பிள்ளையா ரழையுமென வவர்கூவ
மருந்தனையார் மலர்த்தாளில் வணங்கினார் வந்தவர்கள். (௩)

அகமகிழ்ந்து மங்கையர்க் கரசியார் குலச்சிறையார்
மிகநலமார் சேமத்தை வினவினா ராளுடையார்
பகருவரந் நாட்டாரும் பாண்டியனுஞ் சமணுற்றார்
தகவுடையீ ரரசியருங் குலச்சிறையுந் தவிரவென்றார். (௪)

அடிகளுஞ்சீர்ப் புகழுறிந்தெம் மரசியா ரெமைவிடுத்தார்
படிமுழுது முய்யவந்தீர் நிகழ்ந்ததிது வெனப்பகர்ந்தா
ரடியரெலா மம்மொழிகேட் டாளுடையா ரடிதொழுது
செடிநிறையு மாருகதஞ் செயிதகரன்றாள் சேர்க்கவென்றார். (௫)

பிள்ளையார் கேட்டருளிப் பிரான்கோயில் சென்றிறைஞ்சி
வள்ளலா மப்பருக்கு வழுதிசெய லுரைத்தேக
வுள்ளமென வெழுநதருள வுரைக்கவவர் நீர்சிறுவர்
கொள்ளமணர் கொடுஞ்செய்கை கூறுதற்கோ ரெல்லையிலை. (௬)

பாதகர்வாழ் பதிக்கேகல் பண்பலகோள் வலியிலதா
ணீதரே யவ்வெண்ண நீக்கவென நிகழ்த்தினா
ரேதநமக் கெய்துமோ வீசனுள மிருக்கவென்று
வேதகுல ரோதினார் வேயுறு தோளிப்பதிகம். (௭)

அதுகேட்ட நாவரச ராமெனத்தா முடனெழுந்தா
ரிதுபோது சோணாட்டி லிருமென்றே கைகுவித்து
மதிமிகுந்தார் தடுக்கவப்பர் வணங்கியதற் குடன்பட்டார்
பதிகடந்து சிவிகையின்மேற் பாண்டியனா டேகலுற்றார். (௮)

பண்ணையா ரகத்தியான் பள்ளிதொழு தவணீங்கி
மண்ணுகோ டிக்குழகர் வளக்கோயிற் றரிசித்தே
யெண்ணுசீர்க் கடிக்குளமு மிடும்பவன முசாத்தானம்
நண்ணிநீர் நாடகன்று நற்பாண்டி நாடடைந்தார். (௯)

கொடுங்குன்றப் பதிவணங்கிக் கூடனகர் குறுகுங்காற்
கெடுஞ்சமணா ரட்டுவரைக் கிடந்தவர்க டுர்நிமித்த
மடுங்கனவு கண்டுமிக வகம்வருந்தி மெலிவுற்றுக்
கொடுஞ்சிகரக் கோபுரஞ்சூழ் கூடன்மா நகரடைந்தார். (௧௦)

ஈண்டினார் சொப்பனத்தி னியல்விளம்பி யாவரும்போய்ப்
பாண்டியனுக் கறிவித்துப் படருண்டா மெனக்கருதி
வேண்டுமுணா வின்றியே மிகக்கவலை கொண்டிருந்தார்
காண்டகுமா தேவியார் குலச்சிறையார் களிகூர. (௧௧)

நன்னிமித்தங் கண்டார்க ணஞ்சமயஞ் செழித்தோங்கி
மன்னுமா லமண்சமய மடிவதற்கே யையமிலை
யென்னுமெனா மிக்கோங்கி யிருந்தார்க ளப்போழ்து
துன்னினார் சம்பந்த ரெனச்சிலர்கள் சொற்றனரே. (௧௨)

சொல்லுமொழி கேட்டவர்க்குத் துகளில்திர வியமளித்தா
ரெல்லையிலா மகிழ்ச்சியுட னிறைஞ்சமைச்சர் முகநோக்கி
யொல்லையிற்போ யெதிர்கொள்வீ ருறுஞான மூர்த்தியையென்
றல்லிமலர்த் திருவனைய வரசியார் சொலவணங்கி. (௧௩)

சென்றனராக் குலச்சிறையார் செழியன்மா தேவியார்
பொன்றிணிந்த வெழிற்கோவில் புகுந்தரனைத் தொழுதுசிவக்
கன்றின்வர வேற்றுநின்றார் காழியர்கோ னியமுழங்கத்
துன்றுமறை யோரடியார் துதிகூற வழிச்சென்றார். (௧௪)

சின்னங்க ளொலித்தவொலி செவிபுகுதக் குலச்சிறையார்
தன்னங்கம் புளகமுறத் தாழ்ந்தெழுந்து கைகூப்பி
யன்னங்கள் சூழ்காழி யாளுடையார்க் கெதிர்சென்று
துன்னங்கண் மரம்போலத் தொழுதுகிடந் தாரமைச்சர். (௧௫)

அடியார்கள் பலர்வணங்கி யவரெழா ததுகண்டு
பொடியாருந் திருமேனிப் புண்ணியனார் முன்குறுகி
முடியாரும் பாண்டியன்றன் முதலமைச்சர் குலச்சிறையார்
படியார வீழ்ந்தங்கம் பரவசமாய்க் கிடக்கின்றார் (௧௬)

என்றமொழி திருச்செவியி லெய்தாமுன் சிவிகைவிட்டுக்
கன்றுகள்காண் டாயென்னக் கடுகிப்போய் மலர்க்கரத்தா
னின்றவரை யெடுக்கமுன நிறைந்ததவப் பேறுடையா
ரன்றெழுந்து கைகூப்பி யானந்தக் கடலமிழ்ந்தார். (௧௭)

பிள்ளையா ரவர்மீது பெருங்கருணை நோக்கருளிக்
கள்ளையார் மலர்க்குழலார் கைதவன் மாதேவியர்க்கு
முள்ளமிகு மன்புடையீ ருமக்குமதி யிதழியொடு
வெள்ளமார் வேணியரன் வியனருளும் பெருகுமென்றார். (கஎ)

நாங்கள்செயும் பெருந்தவத்தா னுதநீ ரிவணெழுந்தீ
ரோங்குசமண் மதமழிந்தே யுயர்சைவந் தழைத்தோங்கு
மீங்கினிமே லென்னத்தேர்ந் தென்னையெதிர் கொளவிடுத்தார்
தேங்குபுகழ்ப் பாண்டிமா தேவியா ரெனவிசைத்தார். (கக)

திருவருள்செய் தடியாரைத் திருவால வாயெங்கண்
தெரியுமெனக் கைதொழுது செப்புவார் கோபுரங்க
ளருகினிலே தெரிவதுவே யாலவா யெனச்சைவக்
குருவரனார் படிவீழ்ந்து கும்பிட்டுக் கூறுவார். (உ0)

மங்கையர்க் கரசியெனும் வளர்பதிக முதற்றொடங்கி
யங்கண்ணு மிருவர்செயு மருந்தொண்டின் சிறப்புரைத்துச்
சங்கமா ரடியருடன் றலஞ்சார்ந்து தகவுடையார்
கங்கைநீள் சடைக்கரந்தார் கவின்கொள்கோ புரந்தொழுதார் (உக)

உட்சென்று வலம்புரிந்தா ருடன்போந்த வமைச்சரொடுங்
கட்செவிக்கங் கணச்சொக்கர் கழல்பணிந்துட் புகவங்கா
கட்செறிபூங் குழன்மாதுங் கைகுவித்து வணங்கிநின்றார்
புட்செறிகாப் புகலியர்க்குப் புகன்றிட்டார் குலச்சிறையார். (உஉ)

பாண்டிமா தேவியெதிர் பாலறு வாயர்செலக்
காண்டலுமம் மாதரசி காழியர்கோன் கழறொழுதா
ராண்டருளப் பெருமானு ரவளையெடுத் தனர்கரத்தான்
மூண்டபெரு மகிழ்ச்சியுடன் முற்றிற்றெங் கருத்தென்றே. (உங)

அடியேனு மென்பதியோ டாற்றுதவ மென்னென்று
பிடிநடையார் கரங்கூப்பி முன்வணங்கப் பிள்ளையார்
கொடியசமண் குழுநீங்கிக் கொழுஞ்சைவ நெறிநின்று
பொடியணிவீ ருமைக்காணும் பொருட்டிங்கண் போந்ததென்றார்.

அரசியர்க்கு விடையளித்தா ரப்பதிவாழ் தொண்டரெலாம்
பரசிவணங் கினரிங்கார் படிறர்கொளுஞ் சமண்கெடுக்கச்
சிரபுரத்தி லெழுந்தமையாஞ் செய்தவமென் றார்க்கருளி
விரவமைச்சர் காண்பித்த விளங்குமடத் தினிதமர்ந்தார். (உரு)

அரசியரா ணையினாலே யமைச்சரரும் விருந்தளித்தார்
பரசமய கோளரியைப் பகற்போது கண்டழுணர்
வுரவரிகண் டுளநடுங்கு மாதங்க மெனக்கலங்கி
யிரவிலடி யாரோது மெழிற்பதிக விசைகேட்டார். (உசு)

அதுபொறார் பாண்டியன்பா லறைகுவோ மெனச்சார்ந்தார்
விதுகுலமன் னவன்றுயரென் விளம்புமென வவருரைப்பார்
மதுரையினிற் சைவர்களா மறையவர்கள் வருதலினா
லிதுநமக்கோ ரிடர்காட்டுங் குறியாகு மெனக்கூறி. (உஎ)

செம்பியநன் னாடதனிற் சீகாழி மறையவன்சே
யம்பிகா பதிஞான மளித்திடப்பெற் றோனென்றே
பம்பியநித் திலச்சிவிகை பரிப்பமேற் கொண்டிங்கு
வம்பியலோர் சிறுவனெம்மை வாதில்வெல வந்தனனாம். (உஅ)

எனமொழிந்த சமணருரை யிருசெவியி லேறாமுன்
கனகோபங் கொண்டுசெயக் கடவதென்னென் றனவர்கள்
மனமாறு மந்திரத்தம் மடத்திலெரி யூட்டுவம்பார்ப்
பனனிவ்வூர் விட்டகல்வான் பார்த்திவவென் றார்மூர்க்கர். (உகூ)

அன்னதனைச் செய்வீரென் றவரைவிடுத் தகம்வருந்தி
மன்னவனுஞ் சயனமுற மாதேவி யாரடைந்தார்
பன்னுமுறை வழங்காமற் பஞ்சவன்வா ளாவிருந்தான்
முன்னுமுள மகிழ்ச்சியின்றி முகம்புலர்ந்த தென்னென்றாள். (௩௦)

சோணாட்டி னுளமறையோன் சூனுவிவண் முன்னினனாம்
வேணாட்டத் தாலெரிய வீட்டினா னருள்பெறறோ
னோணாட்டு மெஞ்சமய விருங்குரவர் தமைவெல்லப்
பூணாட்டும் பூவையென்பாற் புகன்றனர்யா னதுகேட்டேன். (௩௧)

இதுவேயென் மனக்கவலைக் கேதுவென வேந்தலே
யதுவாகி லிருதரத்தா ரடுத்துமத வாதுசெயி
னெதுஜெயமோ வம்மதத்தி லெய்தனல மெனவகன்றார்
மதுவனநன் மொழியார்பால் வந்தனராற் குலச்சிறையார். (௩௨)

ஈதெலா மவர்க்குரைத்தா ரிறைஞ்சியவ ரெம்மானிப்
போதிவணாம் வரப்பெற்றோம் பொல்லாராஞ் சமணர்கொடுந்
தீதியற்று வார்கொலெனச் சிந்தித்தே னெனவரசி
நாதனுக்கோ ரூறுற்றா னெஞ்சாத றுணிபென்றார். (௩௩)

மந்திரத்தாற் றிருமடத்தில் வன்னியுறப் புரிந்தனரஃ
தைந்தெழுத்தை யோதுவா ரணுகுமடத் தணுகுறுமோ
வெந்தரத்தா ருணர்ந்துபுறம் வெந்தீயைக் கொளுத்தினு
ரந்தரத்த ரதையவித்தவ் வமணரென வறிந்தனரே. (௩௪)

ஆளுடைய பிள்ளையார்க் கறிவித்தார் பரிசனங்கள்
சூளுமடி யார்க்கிடராந் துட்டர்செய லென்பொருட்டே
வாளுடைய மன்னவனால் வந்ததீங் கெனவவன்பால்
மூளவன லெனக்கருதி மொழிந்தனரா லருட்பதிகம். (௩௫)

செய்யனே திருவால வாயென்னுஞ் சீர்தொடுத்துப்
பையவே சென்றந்தப் பாண்டியனுக் காகவென
வையனார் கூறியதவ் வரசியார் நலங்கருதி
வெய்யதாஞ் சுரநோயாய் மேவியதக் கைதவனை. (௩௬)

இரவிலே சமணர்செயு மிடரதனைக் குலச்சிறையா
ரரசியார் கதிருதிப்ப வறிந்துமன மிகமயங்கி
வரமுடையார் தமைப்பதகர் வாழ்பதிக்கு வரவழைத்த
விருவோரு மிறப்பதே யியைபெனவச் சுற்றனரால். (௩௭)

வஞ்சகர்கள் செய்தீங்கான் மடத்திற்கூ றிலதென்னுஞ்
செஞ்சொலறிந் தமணர்செயுந் தீங்கிறுதி யென்றேவென்
றஞ்சொலா ருன்னுங்கா லரசர்வெப்பு நோயரெனக்
கஞ்சுகிக ளுரைக்கமனங் கலங்கிமா தேவிசென்றார். (௩௮)

மந்திரியு மங்கணுற வைத்தியர்கள் வந்தவர்கள்
தந்தமருந் தானோய் தணியாமன் மன்னன்மிக
நொந்தனன்பேச் சின்றியுற நொய்யவமண் கேள்வியுற்று
வந்தவர்க ணோயினது வரலாற்றை யறியாதார். (௩௯)

மந்திரித்துப் பீலியினான் மன்னன்மெய் நீவினார்
வெந்துபொரி சிந்தியதவ் வேத்திரமும் பீலியுட
னந்தநோய் செய்யு மதிசயந்தை நோக்கியவா
சொந்தமாங் குண்டிகைநீர் தொட்டெடுத்துத் தெளித்தனரால். ()

அருகனே காவாயெம் மருகனே காவென்ன
வொருவாத தழலினினெய் யூற்றுவபோ லோங்கியதா
லொருவருமிங் கில்லாம லொழியுமென் றேமன்னன்
பொருவருமிந் நோயதனைப் பொறுக்காம லறிவிழந்தான். (௪௧)

மங்கையர்க் கரசியார் மந்திரியார் முகநோக்கிப்
பங்கமுறுஞ் சமணரிராப் பண்ணியதீங் கிந்நோயா
யிங்குவந்த தோவென்று ரிறைஞ்சியவர் முப்புரத்தை
யங்கியுண நகைத்தசிவ னடியார்க்குச் செய்தீங்கே. (௬௨)

மன்னவன்பா லேயாக வந்தடைந்த தச்சமணர்க்
கின்னபிணி தீர்த்திடுதற் கியலாதென் றரசன்
தன்னைவணங் குற்றன்னார் சாற்றுவார் தீச்சமண
ரின்னலிழைத் தாரடியார்க் கித்துன்ப மெய்தியதால். (௬௩)

தீயர்செயு மாயத்தாற் றீராதிந் நோய்மிகுந்த
தூயரரு ளேனுக்கிறைற் றுன்னுதிந் நோய்தீரு
மேயபுக ழோவென்று ரோந்தல்கேட் டிங்கழையும்
மேயநோய் தீர்த்தெவரே யென்றவர்பாற் சேர்வமென்றான். (௬௪)

அம்மொழிகேட் டகமகிழ்வோ டரசியார் சிவிகையினுஞ்
செய்மைமனக் குலச்சிறையார் புரவியினுஞ் சென்றார்க
ளெம்மையருட் பாலுண்டா ரமர்ந்தமடத் தணுகியுள்ளார்க்
கெம்மையா ளுடையாருக் கெம்வரவு கூறுமென்றார். (௬௫)

சிரபுரக்கோ னடிவணங்கிச் செப்பினர் பரிசனங்கள்
வரவிழையு மெனவவர்கள் வந்தழைத்தா ரிருவரும்போய்ச்
சிரமடியி னுறப்பணிந்து தீயர்செயுஞ் செயனினைந்தே
யரசியரு மமைச்சருமிக் ககம்வருந்திச் சோர்வடைந்தார். (௬௬)

பிள்ளையார் திருக்கரத்தா லிருவரையும் பிடித்தெடுத்தா
ருள்ளமிகு மன்புடையீ ருங்கள்பாற் றீங்குளதோ
வின்னுமெனச் சமணர்செயல் வெப்புநோ யாயரசன்
கொள்ளவமண் டீர்ப்பதற்குக் கூடாம லோங்கியதால். (௬௭)

அடிகளவ ணெழுந்தருளி யரசன்முன மச்சமணக்
கொடியவரை வென்றரசன் கொண்டநோய் தனைத்தீர்த்துப்
படிபுகழ வவனுயிரு மெம்முயிரும் பாலிப்பீர்
பொடியணியுந் திருமேனிப் புண்ணியரோ யெனமொழிந்தார். ()

அந்தமொழி கேட்டெம்மா னஞ்சலீ ரமணர்மனம்
வெந்தழிய வாதில்வென்று வேந்தனையும் பூதியணி
சுந்தரனுச் செய்குவல்யான் றுயரகற்று மென்றுபுகன்
றந்தமிலா னருள்கருதி யாலயத்தை யடைந்தனரால். (௬௯)

கருணைபெற வாளுடையார் காட்டுமா வுரித்தென்னும்
பொருணிறையுந் திருப்பதிகம் புகன்றீச னுளமறிந்து
தெருணிறைந்தார் திகழ்வேத வேள்வியெனுந் திருப்பதிகத்
தருணிறைந்த வகமகிழ்வுற் ருந்தோளி மேற்சென்றார். (ருo)

ஆண்டருள்வார் வரவமைச்ச ரரசன்பாற் சென்றுரைக்கப்
பாண்டியனுந் துயர்நீங்கிப் பன்மணியா சனமிடுவித்
தீண்டுவரற் கெதிர்கொளுமென் றேவினு னமைச்சர்செல
மூண்டமண ராங்கொடியர் முடிமன்னன் றனைநோக்கி. (ருக)

இருவரு மிந்நோய்தீர்க்க வியம்புவீ ரெம்மாலிப்
பொருவரு நோய்தீராதேற் புகல்கவன்றான் றீர்த்ததெனமே
யொருவுறுமிச் சிறுவன்று னேவிந்நோய் மாற்றுபவ
னருகமத மந்திரங்க ளாற்றலைக்காண் பேரமென்றார். (ருஉ)

மன்னனவர் மொழிகேட்டு வஞ்சகம்பே சிடுநீவிர்
பன்னுகட வுளர்சார்பாற் படர்செய்நோய் தீருமென்று
னன்னவுரை கேட்டமண ரக்கவலை கொண்டிருந்தார்
துன்னினரச் சம்பந்தர் தொழுமரசன் முடியருகே. (ருங)

இட்டமணி யாசனத்தி லிருந்தருளி னார்பெருமான்
துட்டவம ணச்சமுற்றார் தோன்றல்திரு வருணோக்கம்
பட்டவுடன் வெப்புநோய் பாண்டியற்குச் சிறிதகன்ற
துட்டமையி னரசனவ ரூர்யாதென் றுசாவினனால். (ருச)

பிரமனூர் வேணுபுர மென்றெடுத்துப் பிள்ளையார்
பரவுமூர் கழுமலமென் பாவினால் விடையளித்தார்
கரவினகச் சமணர்பொறார் கனன்றவர்கள் வாதில்வெல
விரவியதஞ் சமயநூல் விளம்பியே குரைத்தார்கள். (ருரு)

உஞ்சமய நூற்றுணிவைப் பிள்ளையார்க் குரையுமென
வஞ்சகர்க ளெழுந்துமிக வாய்பதறிக் கதறினார்
பஞ்சவனைப் பார்த்தரசி பலரமணர் பாலரிவர்
நஞ்சனைய நோய்தீர்த்து நவிலவருள் வாதமென்றார். (ருசு)

தேவியார் முகநோக்கிச் சிந்தைவருந் தாயென்று
பாவியாஞ் சமணர்களைப் பார்த்திருவர் பரவுகின்ற
தேவர்திற மிந்நோயைத் தீர்பதினாற் காட்டுமென்றான்
பாவலரு மரசியரோ பாலனென வஞ்சலென்று. (ருஎ)

மானினேர் விழியென்ன வள்ளலார் திருப்பதிகந்
தேனினேர் மொழிகளினாற் செப்பினா ரதுகேட்டுக்
கூனுறுபாண் டியனென்றன் கொடுநோயைத் தீர்ப்பார்பா
லானவன்யா னெனவிடப்பால் நாந்தீர்ப்போ மென்றமணர். (௫௮)

வலப்பாக மவர்தீர்க்க வருகவென்று பீலியுடல்
கலப்பாக நீவினர்நோய் கனன்றெழுந்த தப்பால்முன்
முலைப்பாலை யருந்தியவர் முகநோக்கி னானரசன்
வலப்பாகந் தடவினர்பா மந்திரமாவ தென்றுரைத்து. (௫௯)

அப்பாகம் வெப்புநோ யகன்றதாற் பாண்டியனுக்
கப்பாரும் பொய்கைபோ லானதிடப் பாகமிக
வெப்பாரச் சமணரெலா மிகநடுங்கப் பீலிகரியக்
தப்பாத கச்செயலா ரங்கத்துந் தாவியதால். (௬௦)

செருக்கழிந்து தூரத்திற் சென்றசம ணரையரசன்
திருக்குடையீர் தோற்றீர்நீர் செல்லுமெனை நீங்கியென்றவ்
விருக்கறிவார் முகநோக்கி யிடப்பாக வெப்பெனைக்
கருக்கலுந்தீர்த் தருளுமெனக் கருத்தாடி வணங்கினனால். (௬௧)

தென்னனிடப் பாலதையுந் திருநீற்றாற் றடவினரம்
மன்னவனு நோய்தீர்ந்து மகிழ்வுற்றான் மந்திரியு
மன்னனுடை யரசியரு மாளுடையார் தாள்வணங்கப்
பன்னுதுதி செய்தரசன் படுக்கையெழுந் தடிதொழுதான். (௬௨)

இங்கிவரைத் தருக்கத்தா லிகல்வெல்ல வொண்ணாதா
லங்கியினா லப்பதினா லாகுமெனச் சமணர்சொலப்
புங்கவர்நும் மதத்துணிவைப் புகலுமென விருவோருந்
தங்கடங்கண் மதத்திறனோர் காட்டுதலே தகுதியென்றார். (௬௩)

என்னதுநோய் தீர்க்காதார்க் கென்வாதென் றிறைவிளம்ப
அன்னதுவே துணிவாக வறைகுவா ரெங்களெங்கள்
மன்னுமதக் கருத்தேட்டில் வரைந்தழலி லிடவேவா
தன்னதுவே வெற்றியென்றா ராரியரு மிசைந்தனரே. (௬௪)

வழுதியெழி லவைமுன்னர் வன்னியையும் வளர்த்தார்க
ளெழுதியநற் போகமார் பூண்முலையா ளெனும்பதிகம்
பழுதிலிதென் றெடுத்துப்பின் றளிரிளவென் பாமொழிந்து
தொழுதேட்டைத் தீயிலிட்டார் தோன்றியநாற் பச்சென்றே. ()

தீயர்தா மெழுதேட்டைத் தீயிலிடத் தீய்ந்ததுமா
தூயர்தா மிடுமேட்டைத்தொட்டெடுத்தார் பச்சென்றே
மேயதா லவையோர்முன் விளங்கவே காட்டியதை
நேயமுடன் றிருமுறையி னில்லையாகக் கோத்தனரே. (சுசு)

அதிசயமுற் றரசனுமம் மமணர்களைப் பார்த்துநீர்
புதியதுவா யெழுதேட்டைப் புக்கெடுமி னெனவணுகிக்
கதுவுமனல் சுவாலிக்கக் கண்டமணர் திரும்பினா
ரதுதணிவித் துப்பார்க்க வனற்குணவா யழிந்ததுவே. (சுஎ)

ஆற்றிலிடு மேடெதிர்ப்பி னவர்பக்கம் வெற்றியெனச்
சாற்றினரப் பொய்ச்சமணர் சம்பந்தர் சம்மதித்தார்
தூற்றினர்வை கையிற்றங்கள் சொல்லத்தி நாத்தியென்றே
டாற்றினிற்கிட் டிசையோடிற் றதையோடிக் கண்டிலரே. (சுஅ)

வாழ்கவந் தணரென்னும் வண்பதிகம் வரையேட்டைத்
வீழ்விலா றாற்றிலிட மேற்கெதிர்ந்து சென்றதனால்
மூழ்கினா னம்பின்மன்னன் முன்கூனு நிமிர்ந்ததந்தப்
போழ்தமைச்சர் பரியூர்ந்து போயினா ரேடெடுக்க. (சுகூ)

வன்னியுமத் தமுமென்னும் வளப்பதிகஞ் சேய்புகல
வன்னபொழு தேடுவில்லு வாரணியத் தணித்தாய்நீர்
மன்னுமதித் தங்கியதை மகிழ்ச்சியுட னெடுத்தேறித்
துன்னியவே டகத்தீசன் றுணைமலர்த்தாள் தொழுதேத்தி. (எ0)

கழுமலக்கோ முன்வந்து காட்டினர் சகலருக்கும்
வழுதியுள மகிழ்வடைந்து வாதிலே தோல்வியுற்ற
பழுதுடைய பொய்ச்சமணப் பாதகர்க டம்மையின்று
கழுவினிலேற் றுகவென்னக் கடிதேற்றி மகிழ்வுற்றார். (எக)

திருஞான சம்பந்தர் செழியனுக்கு நீறளித்தார்
பொருவில்லா வெண்ணீற்றைப் போற்றியணிந் தானரசன்
பெருநாட்டுள் ளாரெல்லாம் பேணியணிந் தார்நீற்றை
யொருவாத சைவநெறி யோங்கியதே தழைத்தெங்கும். (எஉ)

மருவேட கங்கொண்டு மலர்வில்வா ரணியதலங்
கருவேட கங்கொள்ளாக் கழுமலத்தா ரிட்டதெய்வத்
திருவேட கங்கொண்ட சீர்மருவு காரணத்தால்
திருவேட கமெனுமோர் திருநாம நண்ணியதே. (எங)

ஏடெதிர்ந்த படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௩௱கூ.

# பிரமதீர்த்தப் படலம்.

எந்தை சம்பந்த ரிட்டவே டேயெதிர்ந்
துந்தி வந்த துறைத்தனம் பங்கயன்
நந்த மேடக நாதனைப் பூசிப்பான்
றந்த தீர்த்தத்தின் சால்புக ழோதுவாம். (௧)

(வேறு.)

பங்கயத் துதித்தவேதன் பாரெலாம் படைக்குமாதித்
துங்கமாந் தொழிலைக்கொள்ளத் துவில்வா ரணியத்துற்றச்
சங்கரன் றன்னைப்பூசை தகுதியாற் புரியமுன்னே
யங்கவன் சந்நிதானத் தாக்கினா னோர்தடாகம். (௨)

பேசுமத் தடத்திற்குத்தன் பேரிட்டான் பூசைக்கான
தூசிலாப் பொருள்கள்யாவுந் தொகுதியிற் சேரக்கொண்டு
வீசுவெண் கதிர்மிலைந்த வில்லுவ வனேசன் றன்னைப்
பூசனை விதியினாற்றத் தொடங்கினன் போதில்வந்தோன். (௩)

முன்புதா னாக்கித்தன்பேர் மொழிதடத் தில்லாள்வாணி
தன்புடை மருவமூழ்கித் தண்கலை சேர்ந்துதூய்மைப்
பொன்புனை யெழில்கூராடை பூண்டுவெண் பூதிமெய்யி
னின்புற வவ்வவ்வங்கத் தினில்விதிப் படித்தரித்து. (௪)

கண்மணி யவ்வவ்வங்கங் களிற்கணி தப்படிப்பூண்
டொண்மறை யநுட்டானங்க ளுஞற்றிப்பின் மந்திரங்க
ளுண்மணி யாகியுள்ள வுயர்பஞ்சாக் கரஞ்செபித்து
ளெண்மகிழ் வில்வாரண்யத் தீசன்பொற் கோயில்புக்கு. (௫)

நல்லபொற் கடங்கள்வைத்து நவிற்றுதன் தடத்துநீரைப்
புல்லுற விரப்பியந்தப் புனற்கிறை வருணன்றன்னை
யொல்லவாவாகனஞ்செய் துருத்திர சமகமுன்னா
மெல்லையில் புருடசூத்த மேனைய செபித்தானன்றே, (௬)

அந்நளிர் நீராலவ்வில் வாரணி யத்திலிங்கந்
தன்னைமுன் னாட்டிப்பஞ்ச கவ்விய மமுதமைந்து
மன்னிய கீரஞ்சந்த மந்திரத் தபிடேகித்து
முன்னிய பூசைமுற்றி முதற்றொழில் வரம்பெற்றானால். (௭)

பிரமனா லாக்குமந்தப் பிரமதீர்த் தத்தின்மாண்பவ்
வரவிறை யறையத்தானு வாயிரம் பெற்றுமுற்றா
வரமதா மத்தடத்து மான்மிய முணராரேனும்
பரவதில் மூழ்கினெல்லாப் பவங்களும் பாறுமன்றே. (௮)

வெங்கதிர்க் கலையோர்ந்து விரவினாற் றீண்டினாலு
மங்கதை யோராமற்றொட் டாலுமே சுடுதறிண்ணம்
பங்கய னாக்கத்தீர்த்தம் பயனுணர்ந் தாடினாலு
மங்கது தேரா தாடி னாலுமற் பாவமாய்க்கும். (௯)

சீரமை வில்வாரண்யத் திப்பிய பிரமதீர்த்த
நீரதி லாடினார்க்கு நிகழறம் பொருளின்பம்வீ
டார்தர வளித்தலாலே யதற்குமே லோர்களாய்ந்து
பேர்புரு டார்த்ததீர்த்த மென்னவே பேசினரால். (௧௦)

விதியினா லத்தீர்த்தத்தில் மேவிநீ ராடினோர்விண்
பதியிலா காயகங்கைப் பனிநீரி லாடுவார்கள்
துதிமிகு மத்தீர்த்தத்தைத் தோய்ந்துலாங் காற்றுமெய்மேல்
வதிதரப் பட்டோர்கற்ப வனநிழற் காற்றுக்கொள்வார். (௧௧)

கண்ணினோய் நாசிதன்னோய் காதினோய் மெய்யுளாழ்ந்த
புண்ணினோய் பல்லினீறு புழுத்தநோய் வயிற்றினோயென்
றெண்ணிடு நோய்கள்தீர்க்கு மென்னலோர் மாண்பதாமோ
திண்ணிய பிறவிநோயைத் தீர்க்குமத் தீர்த்தத்திற்கே. (௧௨)

அம்புயா தனன்முன்னாக்கு மத்தட மாடினார்தம்
வம்புலாஞ் சிகைமயிர்க்கால் மருவுநீர்த் துளிதானொன்று
தம்புலான் மெய்யிற்பட்டார் தமைப்பற்றும் பேய்பூதங்கள்
பம்பிய பிரமகத்திப் பாவங்க ளோடுமன்றே. (௧௩)

கமழ்தரு பிரமதீர்த்தக் கரையினிற் றென்புலத்தார்
தமையவர் சருமஞ்சாற்றித் தருப்பண மியற்றிப்பிண்ட
மமைதர விட்டாலன்னா ரடைந்துறை நிலையநீத்தவ்
வமரர்தம் மானமேறி யமர்ந்துவாழ் வுறுவர்விண்ணில். (௧௪)

ஆண்டுதிப் பயனத்தோற்ற மாறிரு மதிப்பிறப்புப்
பூண்டிடு மமாபௌவங்கள் புகரரா விரவிதிங்கள்
தீண்டிடு காலஞ்சோமன் றினமர்த்தோ தயத்தினோடு
நீண்டிடு மகோதயத்தந் நீர்தோய்ந்தார் கைலைதோய்வார். (௧௫)

ஒருவனிப் புவியைநீத்தவ் வுயர்பொன்னூர் வேண்டினும்பூ
மருவுநான் முகத்தனூரை மருவுற வவாவுற்றானுந்
திருமரு மத்தனூரைச் சேர்தர வேட்புற்றானும்
பருமகா பிரமதீர்த்தம் படிதரல் வேண்டுமாதோ. (கசு)

அந்தமா பிரமதீர்த்தத் தமர்ந்துறை மீனமாமை
நந்துமண் டூகமாதி நசித்தபின் கைலைமேவி
நந்துபன் னூற்றாப்பின் னுள்மீட்டு மத்தலத்தே
வந்தொரு பிறப்பில்வில்வ வனேசன்றா ளதிலொடுங்கும். (கள)

சாற்றுமத் தீர்த்தத்துள்ளே சார்ந்தோர்புண் ணியகாலத்தில்
போற்றுற மூழ்கிவில்வ புரேசன்றாட் பூசையன்பி
னாற்றதொண் டர்க்குத்தான மளித்திடி லக்காசொன்றிற்
கேற்றவோர் யுகம்வேதண்டத் திருந்துவாழ்ந் திடுவர்மாதோ. ()

மதிக்குமா னிடராயிந்த மண்மிசைச் சனித்தோரொந்த
விதத்தினு லேனுமந்த வியன்புன லாடல்வேண்டு
மதற்கியலாததாயி னத்தீர்த்தங் குடமொன்றேனுந்
துதிப்புற வரவழைத்துத் தொக்கினைக் கழுவல்வேண்டும். (கக)

அதுவுமே யியலாதாயி னத்தீர்த்த மூழ்கினோரை
முதியுறக் கண்டன்னார்தம் வடிவினைத் தழுவவேண்டும்
அதுவுமே யியலாதாயி னந்நீரிற் றோய்ந்துலாவி
யெதிர்வரு காற்றுமெய்யி னிற்படச் செய்தல்வேண்டும். (உ௦)

தூயதா மான்மியங்கள் தொக்கவப் பிரமதீர்த்த
மேயசீர் முற்றுந்தேர்ந்து விளம்புதற் கரிதேயாகு
மேயவத் தலத்தின்சீரு மியன்றவா றுரைப்பாமுள்ளத்
தாய்வொடு கேண்மினென்ன வறைந்திட லூற்றுன்குதன். (உக)

பிரமதீர்த்தப் படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் சுாகச.

## தலவிசேடப் படலம்.

பிரம தீர்த்தத்தின் பெற்றியைச் சொற்றன
மரனு வந்தவில் வாரணி யத்துளே
சிரம தாந்திரு வேடகச் சீர்த்தல
மருவு புண்ணிய மான்மியஞ் செப்புவாம். (க)

(வேறு)

ஆகியிற் பிரமனெல்லா மாக்குமுற் றொழிலைவெற்பின்
மாதொரு பாகனுரை மாபூசை புரிந்துபெற்றா
னாகலி னந்தவில்லு வாரணி யத்தலந்தா
னேதுமெத் தலத்துமுன்னு முவரிசூ ழுலகினுள்ளே. (௨)

வில்லுவ வனேசன்றன்னை மெய்யன்பி னொடுசிந்தித்துச்
சொல்லுமத் தலத்திலோர்நாள் தூயராய் வாசஞ்செய்தோர்
மல்லல்கூர் வாரணாசி மாதலத் தாயுண்முற்றும்
புல்லியே வாசஞ்செய்தோர் புண்ணியஞ் சார்வாரன்றே (௩)

மன்னுமம் மாதலத்தோர் வறியவன் றனக்கன்போடு
துன்னுமோர் கைப்பிடிக்கொள் சோறிட்டார் கங்கோற்பத்தி
யென்னும்புண் ணியதலத்தி லெதிகளெண் ணிலார்க்குப்பிச்சை
யன்னமிட் டவர்பெறும்பே றடைந்திட லுண்மையம்மா. (௪)

மற்றைய தலத்திற்கோபூ வத்திரஞ் சுவணங்கன்னி
முற்றறு சுவையவன்ன முதலிரண் டெட்டுத்தானங்
குற்றமில் லறவோர்கையிற் கொடுத்திட வரும்பலன்மா
வற்றவர் தமக்குக்காசொன் றளித்திடில் வந்துசேரும். (௫)

சனித்திடி லாரூராகித் தரிசிக்கிற் றில்லையாகி
நினைத்திடி லருணையாகி நிரியாணஞ் செய்யிற்காசி
யெனத்திகழ் தலமதாகி யிலங்குறு மவ்வில்வக்கா
னனைத்தையு முன்னியொன்றா வதுகொள்ளி னெய்தும்வீடே (௬)

அத்தல மனநினைந்தார்க் கறமெலாங் கொடுக்குந்தானம்
அத்தலம் புகழ்ந்திட்டாருக் காமபொரு ளீயுந்தானம்
அத்தலம் பணிந்தெழுந்தார்க் கானவின் பளிக்குந்தானம்
அத்தல மென்றும்வாசத் தார்க்குவீ டருளுந்தானம். (௭)

இரும்புகழ் வில்வக்கானத் தேடகநாதற்காட்ட
நிரம்புகன் றுடையகோக்க ணிரைவைத்து நிலையமாக்கி
வரம்பெறு முணவருத்தி வளர்த்துநோ யுறுதுகாப்போர்
சிரந்தனிற் றண்ணீர்க்கங்கை திங்களைத் தாங்கிக்காப்பார் (௮)

ஏடக நாதற்காட்ட வேற்றபொற் கலசம்வெண்பொற்
சேடமை கடங்கபே தீபக்கால் நிலைவிளக்குச்
சோடசோ பசாரஞ்செய்யுஞ் சுடருறு கருவியாவும்
மாடுறச் செய்துவைத்தார் வானமாடங்கள் வாழ்வார். (௯)

அந்நவே டகநாதற்கின் னறுசுவை வருக்கான்னங்கள்
நிந்தையில் நெய்பெய்தாக்கி நித்தலு முண்பிப்போர்தாம்
அந்தர நாடடைந்தவ் வரமாதர் சூழ்ந்துவாழ்த்த
விந்திர பதத்தில்மேவி யிருந்தமு துண்பார்நீணாள். (௧௦)

நித்தனேடகநாதற்கு நித்தநை மித்தபூசை
நத்தியவிழாச்சிறப்பு நன்குற வியற்றுவிப்போர்
உத்தமராயுயர்ந்த வொளிகெழு தேகம்பெற்று
நித்தியன்கைலைமேவி நிரந்தரம் வாழ்வார்மன்னோ. (௧௧)

வெண்ணிறத் திடபம்பாய்மா வேழமோ டிரதமுன்னு
வெண்ணிடு வாகனங்க ளேற்றமார் செம்பொன்வேய்ந்து
பண்ணியே டகத்தான்றன்னைப் பாங்குற வேற்றினோர்பின்
வண்ணமார் வெள்ளையானை வாகன மேறுவாரால். (௧௨)

கந்தமார் மலர்மொய்வில்வக் கானத்தே டகநாதற்குச்
சிந்தையன் பினராய்க்கோயிற் றிருப்பணி புரியுஞ்செல்வ
ரிந்தமா நிலத்துநீணா ளிருந்துவாழ் வுற்றுப்பின்னாள்
சந்ததஞ் சிவலோகத்தைச் சார்ந்துவாழ்ந் திருப்பர்மன்னோ. (௧௩)

பூாலூர வனத்திலென்றும் வாழுமே டகநாதன்றன்
சீலமார் நித்தநைமித் தியபூசை சிறப்பினோற்ற
மூலமாந் தனங்கள்பூமி முதற்பொருட் காணியாட்சி
மேலதா யுறச்செய்வித்தோர் மேவுவார் சிவலோகத்தே. (௧௪)

(வேறு)

பண்டையிலோர் தூர்த்தனங்குப் பரத்தையிற்குப்
  பறந்தோடுங் காற்பாகு வாயடக்கி
மண்டுகர வெற்றிலையிற் சுண்ணந்தீட்டி
  வாய்ப்பெய்தெஞ் சியவிரலின் சுண்ணந்தன்னை
யண்டர்தொழு மேடகத்தா னாலயத்தி
  னணிமதிலின் புறந்தடவிச் சென்றனஃதோர்
துண்டுசிறு விரிவொன்றை யடைத்ததாலே
  சூழுமவ னந்தியத்திற் கைலைசார்ந்தான்.

தலவிசேடப் படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௯௱௨௧.

# முனிவர்பூசனைப் படலம்.

சூதமாதவனிவ்வண்ணந் தூயவில் லுவகானத்தின்
மாதகுமேடகத்து மாண்பும்வில் லுவவனேசன்
மீதுறுமாண்புந்தீர்த்த மேன்மையும் புகலவந்த
மாதவச்சௌநகாதி மாதவ ரன்பிற்கேட்டார். (௧)

கேட்டலுமுளமகிழ்ந்து கேள்விசால்புராணமெல்லாம்
வேட்டவர்தமக்கையங்கள் மேவுறாதோதுஞ்செல்வத்
தேட்டமைதருமெய்ச்சூதத் தெய்வமாதவசிரேட்டன்
தாட்டுணைபணிந்துநின்று சாற்றுவாரோர்விண்ணப்பம். (௨)

எத்தலத்தினுமேலென்ன வெடுத்துரைத்திட்டவந்த
மெய்த்தலத்தினையடைந்து வில்லுவவனேசன்றன்னைக்
கொத்தலரேலவார்பூங் குழலம்மைதன்னைக்கண்டு
சித்தியாமன்பிற்பூசை செய்திடவேட்டோமென்றார். (௩)

அன்னமாதவரைநோக்கி யன்புடன்சூதனீவி
ரின்னமாதினமேசென்றவ் வேடகவில்வக்கானந்
தன்னைநேரடைந்தத்தேவைத் தரிசித்துப்பூசைசெய்மி
னென்னவேவிடைகொடுக்க வேற்றெழுந்தனரத்தூயோர். (௪)

தூயநைமிசத்தினின்று சொற்றதென்றிசையைநோக்கிப்
போயெதிருற்றபல்ல புனல்மிகுநதிகள்வெற்பு
மேயபற்பலதேயங்கள் வெங்கரியோடுசிங்கம்
பாயுமாவனங்கள்தாண்டிப் படர்ந்தனரப்பால்மாதோ. (௫)

சோழநாட்டினைக்கடந்து தோயநீர்வெள்ளம்பொங்கிச்
சூழுமாவைகைத்தீரத் தூயநெற்பழனமெங்குங்
கேழுறுவெண்ணிறத்துக் கிளர்சிறையன்னமொய்த்து
வாழுறச்செழித்தபாண்டி வளநாட்டினெல்லைசார்ந்தார். (௬)

குணகடலினுக்குமேற்கிற் குமரியாற்றினுக்குதக்கில்
திணைவளக்குடகிற்குக்கீழ்த் திசையில்வேங்கடத்தின்றெற்கி
லிணைதருந்தமிழ்நாட்டிற்கு ளிலங்குவில்லுவவனத்தைத்
துணைவிழிகளிக்கக்கண்டு தொழுதனராய்ப்புகுந்தார். (௭)

புகுந்துகோபுரம்விமானம் பொன்மதில்மண்டபங்கள்
திகழ்ந்தவேடகநாதன்றன் றிருக்கோயில்நுழைந்தன்புள்ள
முகந்துமுன்பிரமதீர்த்தத் துள்மூழ்கிப்பூதிகண்டி
புகழ்ந்திடப்புனைந்துபூசை புரிந்திடத்தொடங்கினாரால். (௮)

ஏற்றசீர்வில்வக்கானத் தேடகநாதனென்னச்
சாற்றிடுமிலிங்கந்தன்னைத் தண்புனற்கடந்தாபித்துப்
போற்றுருத்திரஞ்செபித்தப் புண்ணியதீர்த்தமாட்டித்
தேற்றுகௌவியங்களைந்துஞ் சீருறவபிடேகித்தார். (௯)

ஆவினின்பாலுமைந்தா மமுதமுங்கரும்பின்சாறு
மேவுபல்கனியின்சாறு மேதகவபிடேகித்துத்
தாவில்வாசனைகமழ்ந்த சந்தனத்தோயமாட்டித்
தேவுறச்செபித்தகும்ப தீர்த்தத்தாலாட்டினாரால். (௧௦)

பின்னர்வெண்வத்திரத்தால் மேனிமெல்லத்துடைத்துப்
பன்னுநேத்திரநற்பீதாம் பரம்புனைந்தணிகள்சாத்தி
மின்னுறு நுதலின்மீது விபூதிபுண்டரமுமிட்டு
மன்னியகந்தசந்த மருவுறச்சாத்தியிட்டார். (௧௧)

செஞ்சடைவேணியின்மேற் செழியபூங்கொன்றையாதிப்
புஞ்சமாமலர்கடூர்வை புனைந்துவில்லுவதளத்தா
லஞ்சிருபானெட்டா மபிதானமுற்றுஞ்சாற்றி
விஞ்சருச்சனைபுரிந்து விரைத்தீபதூபங்காட்டி. (௧௨)

அறுசுவைக்கருணைநெய்பெய் யன்னங்கள்மாடாபூப
மறுவிலாக்குளாபூபங்கள் மணத்தபாயசங்களாதி
நறுநிவேதனங்களெல்லா நண்ணமுன்னம்படைத்து
நிறுவுமந்திரம்புகன்று நிவேதித்தார்நைமிசத்தார். (௧௩)

ஈரெட்டாமுபசாரஞ்செய் தின்கனிநாளிகேரஞ்
சேரத்தாம்பூலநைவேத் தியஞ்செய்துபின்னர்வெண்கற்
பூரத்தாந்தீபங்காட்டிப் போற்றிக்கீழ்ப்பணிந்தெழுந்து
சாரக்கைதலைமேற்கூப்பிச் சரண்மலர்துதித்தலுற்றார். (௧௪)

செழியபூங்கொன்றைவேய்ந்த செஞ்சடையுடையாய்போற்றி
தொழுதவேதன்படைப்புத் தொழில்செயவளித்தாய்போற்றி
யழிவிலாயுள்மார்க்கண்டர்க் கருளியவள்ளால்போற்றி
யெழின்மிகுவில்வக்கானத் தேடகநாதபோற்றி. (௧௫)

மாலயனுதித்தேவர் வணங்குசேவடியாய்போற்றி
மேலுறவியாதன்வேண்டு மெய்வரந்தாய்போற்றி
சீலமார்பராசரன்றான் செய்பூசைகொண்டாய்போற்றி
யேலவார்குழலிவாமத் தேடகநாதபேற்றி. (கசு)

கோடிலாதுலகுகாத்த குசகேதுவென் னும்வேந்தன்
நாடுவற்கடந்தீர்ந்துய்ய நல்மழைபொழிந்தாய்போற்றி
யோடமண்கழுவிலேற வோதுசம்பந்தன்பாட்டின்
ஏடெதிரேறக்கொண்ட ஏடகநாதபோற்றி. (கஎ)

என்னவேதுதித்திறைஞ்சி யியலமுவ்வலங்கள்சூழ்ந்து
பின்னுமேடகநாதன்றாள் பெட்பொடுமுனம்வணங்கி
யின்னருள்பெற்றவ்வாறே யேலவார்குழலிதன்னைத்
தென்னுறுபரிவாரச்சூழ் தேவரையும்பூசித்தார். (கஅ)

அத்தவமுனிவர்பின்ன ரடைபிறப்பிலாமையைப்பெற்
றுத்தமராயினுமென் றுளமகிழ்ந்தேடகத்தான்
கொத்தலரேலவார்பூங் குழலிதாள்மலருட்கொண்டு
நித்தியவருள்பெற்றங்கு நின்றுலகநீசெஞ்சார்ந்தாரால். (ககூ)

வாழ்த்து.

உலகெலாஞ்சைவம்வாழ்க வுயர்பாண்டிநாடுவாழ்க
இலகுசம்பந்தர்பாவே டெதிர்ந்துசெல்வைகைவாழ்க
ஏலவார்குழலிசேய்க ளேடகநாதன்வாழ்க
சீராமவர்தங்கோயிற் றிருப்பணித்தொண்டர்வாழ்க. (உ0)

முனிவர்பூசனைப் படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் சுாசகூ.

திருவேடகப் புராணம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

வில்வாரணியமென்னும்,

# திருவேடகப்புராண வசனம்.

## நைமிசப் படலம்.

சிறப்புற்றோங்கிய கைலாசகிரியின் றென்கிழக்கில் பிரமதேவனால் சக்கரமாக்கி விடப்பட்ட தருப்பைப்புல் நின்ற இடமாகியதும், பலதவர்களும் முனிவர்களும் மகிழ்வுடன் வசிக்கும் பெருமையுடையதும், வானுலகையளாவி ஓங்கியுள்ள கற்பகத்தருக்களையுங் குளிரச்செய்யும் விருக்ஷங்க ளடர்ந்ததும், பெருமைபொருந்திய புலவர்பலரால் போற்றப்பெற்றதும், பிறப்பு இறப்புக்களைப் போக்குவதும், தன்னிடத்தி லடைந்தவரைச் சிவசொரூபமாகச் செய்வதும், அளவற்ற செல்வத்தை யளிப்பதும், கிரகங்கள் முறைமைதவிர்ந்து மழைதன்றிய காலத்திலும் பஞ்சதருக்களையொத்துச் சகலவளங்களையுந்தந்து உமாபதியின் திருவடிகளைக் காட்டுந் தன்மையுடையதும், சகல பழிபாவங்களு நசிக்க முனிவர்களாற் செய்யப்படும் யாகப்புகை மேகமண்டலத்தை யளாவுஞ் சிறப்புடையதும், எழுவகைப் பிறவிகளையுமோட்டி இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் அட்டாங்க யோகங்களைப் பூண்டிருக்கின்ற அந்தணர் குழாங்களுடையதும், வேதாத்தியயனஞ் செய்கின்றவர்கள் ஆகமநெறிகளை யாராய்கின்றவர்கள் சாத்திரவிசாரணை செய்கின்றவர்கள் உயர்ந்தநியமங் கடைப்பிடித்து அந்நியமத்தினெறியே நிற்கின்றவர்கள் பலவிதமாகிய தவங்களைச் செய்கின்றவர்களாகிய கூட்டங்களை மிகுந்திருப்பதும், பிரமசரியமுதலிய நான்கு ஆசிரமத்திலும் வழாதுநின்றவர்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களை யளிப்பதும் சகல சீவசெந்துக்களுந் தம்முள் பகையின்றிக்கலந்து வாழ்ந்திருத்தற்கிடமாகியதும், ஆல் அகில் மூங்கில் கடம்பு புன்னை அரசு வெண்ணாவல் நருந்து திருவாத்தி வில்வம் வேம்பு பலா கொன்றை வன்னி பாதிரி கடா மா பனை மந்தாரம் முதலியமரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலவிருக்ஷமென்று காட்டுவதற்கு உதாரணமாய் விளங்கப்பெற்றதுமாகிய நைமிசாரணியத்தில் நாரதர் மார்க்கண்டர் கண்ணுவர்

வசிட்டர் வாமதேவர் துருவாசர் சீவற்சர்முதலிய முனிவர்களெல்லொருங் கூட்டமாகக்கூடிச் சௌநகமுனியோடு "துவாதசவாருடிகம்" என்னும் பெயரிய ஓர்யாகத்தைச் செய்துகொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் பிரகாசிக்குஞ் சடாபாரத்தையும் தீவினைகளை அதஞ்செய்யத்தக்க வெண்ணீறு துலங்குந் திருமேனியையுடையவரும் வேதாகமங்களையும் ஸ்மிருதிகளையும் பதினெண்புராணங்களையுங் கற்றவரும், காலகாலரும் அழகிய கொன்றைப்பூமாலையைத் தரித்தவருமாகிய பரமசிவத்தின் திருவடிகளில் நீங்காத பத்தியுடையவரும், ஸ்ரீவேதவியாசரின் மாணாக்கருமாகிய சூதமகாமுனிவர் ஆங்கு எழுந்தருளினர், அம்முனிவரை நைமிசாரணியத்திலுள்ள முனிவர்களும் வேள்வியைக் காணும்பொருட்டு அயலிடங்களினின்றும் வந்திருக்கின்ற முனிவர்களும் கண்டவுடன் மேகத்தைக்கண்ட மயில்போல அளவற்ற களிப்படைந்து உள்ளம்பூரித்துச் சிறந்த ஆதனத்தி லிருக்கச்செய்து பற்பல உபசாரங்களோடு பூசித்து மந்திரமலர்களா லருச்சித்துச் சந்தனம் அட்சதை சாத்தி அமுதளித்து இளைப்பாற்றி இதனை விண்ணப்பஞ் செய்வதாயினர்.

ஓ சுவாமி, மூன்று நேத்திரங்களையுடைய லோகநாயகன் விருப்புடன்வாழும் க்ஷேத்திரங்கள் ஆயிரத்துள் எந்தக்ஷேத்திரத்தின் மான்மியம் மிகுந்த சிறப்பினையுடையது? அத்தகைய தலத்தின் மான்மியத்தை நாங்களுணரும்படிச் சாற்றியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

அதனைக்கேட்ட சூதமுனிவர் அவர்களை நோக்கி ஓ தவசிரேஷ்டர்களே! கரும்பு தினபார்க்குக் கைக்கூலி கொடுப்பதுபோலப் புண்ணியப்பயனைச் சொல்ல விழைவுற்றிருக்கிற எனக்குப் பின்னும் அதிகவிழைவினை விருத்திசெய்தீர்கள். உங்களுடைய விருப்பம் நிறைவேறத்தக்கதாக ஒரு தலபுராணமுள்ளது. அதனைச் சொல்வதன்முன் அப்புராணம் வந்தவரலாற்றினைச் சொல்லுவோங் கேட்பீராக வென்று கூறுவாராயினர்.

வியாசமுனிவரால் வேதங்களினின்று தொகுத்துரைக்கப்பட்ட புராணங்கள் பதினெட்டு, அவற்றுள் சிவபுராணங்கள்பத்தாகும். அச்சிவபுராணங்கள் பத்தினுள் சைவபுராண மென்பதொன்று. அப்புராணத்துள் வாயுசம்மிதையில் சொல்லப்பட்டதும் பாண்டிநாட்டின்கண் மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் முச்சிறப்பினையுடையதும், மதுரைக்கு வாயுதிக்கில் ஒன்றரையோசனை

தூரத்திலுள்ளதும், இடபகிரிக்குத் தென்மேற்கில் ஒருயோசனை தூரத்திலுள்ளதும், தேவர்கள் முனிவர்கள் முதலியோர் நாடோறும் வணங்கியேத்துங் கானப்பேரெனுங் காளையார்கோவிலுக்கு மேற்கில் ஐந்து யோசனை தூரத்திலுள்ளதும், தக்ஷிணவாகினியாய்ப் பிரவாகிக்கின்ற வைகைக்குக் கீழ்க்கரையிலுள்ளதும், சிறப்புப்பொருந்திய திருஞானசம்பந்தர் சமணர்களோடு வாது புரிந்த காலத்துத் திருஞானசம்பந்தரால் வைகையிலிடப்பட்ட தேவாரவேடு வெகுதூரமெதிர்ந்துவந்து தன்னிடத்திற் றங்கிய காரணத்தால் திருவேடகமென்னும் பெயருள்ளதுமாகிய வில்வாரணியமென்னும் க்ஷேத்திரத்தினுடைய புராணத்தைச் செப்புகிறேன் கேளுங்களென்று சாற்ற, அதைக்கேட்ட சவுனகாதிமுனிவர்கள் அச்சூதமுனிவரின் திருவடிகளை வணங்கி ஓ தவசிரேஷ்டரே அப்படிப்பட்ட சிறப்பினையுடைய அந்த வில்வாரணியமென்னுந் தலத்தின் மான்மியத்தை விரிவாகச் சாற்றியருள்கவென வேண்ட அந்தச்சூதமுனிவ ரவ்வண்ணமே சொல்லத் தொடங்கினர்.

நைமிசப் படலம் முற்றிற்று.

# பிரமன் சிருட்டிபெறு படலம்.

முத்தர்களும் முனிவர்களும் நெருங்கிச் சூழ்வதும், நித்தமும் புட்பிக்கின்ற மரங்கள் மிகுந்திருப்பதும், சித்தர் சாத்தியர் தேவர் சாரணர் வித்தியாதரர் முதலானவர்கள் மோக்ஷத்தைவேண்டும் மாட்சிமையுடையதும், பரிசுத்தம்பொருந்திய வாசனை பரிமளிக்குந் தூபப்புகை நிறைந்ததும், இந்திராதிதேவர்கள் நித்தமும் கிருபாமூர்த்தியாகிய சங்கரனே! சந்திரசேகரனே! சாம்பமூர்த்தியே! எங்கள் தலைவனாகிய முதற்கடவுளே! எனப் பற்பலவாகிய தோத்திரங்களாற் புகழ்ந்து சூழ்ந்திருப்பதும், நந்தி பிருங்கிமுதலியோர்களின் நாவினின்று எழுகின்ற தோத்திரப்பாக்களின் ஒலியும் பற்பல வாத்தியவொலியும் மலையினின்று அருவிவீழ்கின்றவொலியும் சங்கங்களின் ஒலியும் பலவழகிய பறவைகள் இனிமையாகப் பாடுமொலியும் எக்காலத்தினுமொழுகுவதும், நவமணிகளைப்பதித்து நிருமாணிக்கப்பட்டுள்ள மாடங்களும் மாளிகைகளும் அழகிய கோபுரங்களும் படிகளும் மேடைகளும் ஆயிரக்கால் மண்டபங்களும் மதில்களுமாகிய இவைகளால நெருங்கிப்

பிரகாசிக்குஞ் சிறப்பினையுடையதும், திருவாயிலில் பொன்னுலாகிய தகடுகள் பதித்திருப்பதும், பூதகணங்களால் காக்கப்படுவதும், எண்ணிலாத ஊழிகாலங்கோறும் ஓங்கிவளரும் பெருமையையுடையதுமாகிய கைலையங்கிரியை முன்னொரு கற்பத்தின்முதலில் பிரமதேவன் அன்னவாகனத்தின்மேல் கலைமகள்சமேதனு யடைந்து அன்னத்தை விட்டிழிந்து திருக்கோயிலையணுகி யவ்விடத்தில் கோபுரவாயிற்காவலரை விளித்து அவர்களாற் றனதுவரவைச் சிவபெருமானுக்கு அறிவிக்கும்படிச் செய்வித்தனன். அன்ன காலையில் எம்பெருமான் அவனை உள்ளேவிடும்படி குறிப்பினால் ஆஞ்ஞாபித்தருளியவாறு, வாயிற்காப்போர அவனைச் சந்நிதானத்திற்குச் செல்லும்படி உள்ளேவிடுத்தனர். அவன்சென்று சமுகத்தையடைந்து பூமியில்வீழ்ந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து (எட்டுறுப்புகளுந் தரையிற்பொருந்தும்படி வணங்கல் சாஷ்டாங்கம்) எழுந்து இருக்குவேதமந்திரங்களால் தோத்திரஞ்செய்து இதனைவிண்ணப்பஞ் செய்வானாயினன்.

நீக்கமற எங்குநிறைந்த நின்மலசுவரூபியாகிய எங்கோவே! அடியேனுக்கு இவ்வுலகங்கள் யாவையும் படைக்குந் தொழிலினை யனுக்கிரகித் தருளல்வேண்டுமென வேண்டச் சதுர்முகன் கருத்தினையுள்ளுணர்ந்த பரமன் தண்ணருள்சுரந்து அவன் முகத்தினை நோக்கி ஓ பிரமனே! நீ விரும்பிய சிருட்டித்தொழிலைப் பெறவேண்டுமாயின் எமக்கு விருப்பத்தைத் தருவதாய் ஓர் தலம் உள்ளது, அதன்பெயர் வில்வாரணியமாகும். அது தீவினைகளைப் போக்குவதும், விரும்பிய சகல இஷ்டகாம்யார்த்தங்களை முற்றுவிப்பதும், புண்ணியத்தைக் கொடுப்பதும், தன்னையே தனக்கு நிகராயுள்ளதும் ஆகிய மாகூழிமையுடையது, நீ அத்தலத்தையடைந்து மிக்க பயபத்தியுடன் எம்மையும் ஏலவார்குழலியென்னும் அம்மையையும் ஆகமவிதிப்படிப் பூசித்துப் போற்றுவையாகில் யாம் அத்தொழிலினை உனக்குக் கொடுத்தருளுவமென்று திருவாய்மலர்ந்தனன். அதனைச் செவிக்கமுதாகக்கேட்ட பிரமன் கர்த்தன் திருவடி பணிந்து விடைபெற்றுக்கொண்டு அவணின்றுநீங்கி உடனே வில்வாரணியமென்னுந் தலத்தையடைந்து சந்நிதிக்கெதிரில் ஓர் பெரிய தடாகத்தையுண்டாக்கி அதில்மூழ்கி விபூதிமுதலிய சிவசின்னங்களை விதிப்படி யணிந்து, சுவாமிக்கு அபிஷேகத்திற்குரிய கௌவியம் தேன்முதலியவைகளையும், அர்ச்சித்தற்குரிய நல்ல பரிமளமிகுந்த புட்பங்களையும், நிவேதனத்திற்குரிய பதார்த்தங்களையும், தூபதீபங்களையுங் குறைவறச் சேகரித்துக்கொண்டு

கோயிலுட்புகுந்து, வில்வாரண்ணியத் திருவேடகநாதனைத் தன்னாலாக்கப்பட்ட தடாகநீரினாலாட்டி மெல்லியபட்டாடையாற் சாம்புலர்த்திப் பீதாம்பரம் சந்தனம் முதலியவைகளை யணிந்து பூமாலைகளைச் சூட்டித் தூபதீபங்காட்டி வேதங்களிற் சொல்லப்பட்ட ஆயிரந் திருநாமங்களாற் றிருவடிகளி லருச்சித்து இனிய தேவாமிர்தம் போன்ற பலவகையான திவ்யான்னங்களை யூட்டிச் சோடசோபசாரங்களைச் செய்து கற்பூரச் சுண்ணந்தீற்றிய தாம்பூலமளித்துப் பூமியில்விழுந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்துநின்று தோத்திரஞ் செய்வானாயினன்.

இவ்வண்ணம் பிரமன் தினந்தோறுந் தவறாது பூசனைபுரிந்து வருநாளையி லோர்நாள் அவனது இட்டபத்திக்கு வியந்து நமதுகர்த்தனாகிய திருவேடகநாதன் பூரணமதியை நிகர்த்த முகமண்டலத்திலிலங்கும் புன்சிரிப்பையும் கொவ்வைக்கனிபோன்ற அழகிய இதழையுமுடைய நமதன்னையாகிய ஏலவார்குழலியுடன் இடபாரூடனா யவனுக்குக் காட்சி கொடுத்தனன். அப்பொழுது நான்முகன் தினமும் பசியினால்வாடி ஒருநாள் உண்டவரைப்போல் பெருங்களிப்படைந்து தனது எட்டுக்கண்களாலும் ஈசனது திருக்கோலத்தைப் பார்த்து ஆனந்தக்கூத்தாடி எட்டுக்கரங்களையுஞ் சிரமேற் குவித்தவனாய் அட்டமூர்த்தியாகிய தேவதேவனை நோக்கி ஓ கங்கையைச் சடாபாரத்தில் தரித்திருக்குங் கர்த்தனே போற்றி ஓ சந்திரசேகரனே போற்றி! ஓ எங்கணுநிறைந்துள்ள ஒப்பிலாதவனே போற்றி! ஆதியந்தமற்ற ஈசனே போற்றி! ஓ சர்ப்பாபரண மணிந்த தேவே போற்றி! ஓ திரிபுராந்தகனே போற்றி! இங்கெனை வலியவந்து தடுத்தாட்கொண்ட ஏடகநாதனே போற்றி என அளவற்ற தோத்திரங்களைச்செய்து நின்றான். அதனைத் திருச்செவியில் சாத்தியருளிய தனிமுதற்கடவுள் தண்ணருள்சுரந்து அப்பிரமனது முகத்தினைப் பார்த்து ஓ விண்டுபுதல்வனே! நினது தோத்திரங்களுக்கு நாம் மனமுவந்தோம். அன்றியும் உனக்கு உலகனைத்தையுஞ் சிருட்டிக்கும் வரத்தினையுங் கொடுத்தோமெனக் கூறியருளலும் பிரமன் அவ்வண்ணலின் திருவடி பணிந்து சம்புவே! நினக்கு இத்தலத்தில் பத்துநாட்கள் திருவிழாவியற்ற வேண்டுமென்று விருப்புற்றனன், அதனைப்புரிய விடையளித்தல் வேண்டுமென்றிரக்கப் பரமசிவன் அவ்வாறே செய்வாயாக வெனச் செப்பித் திருவுருக் கரந்தருளினார்.

பின்பு பிரமன் ஆகமவிதிப்படி சிவபெருமானுக்கு உச்சவஞ் செய்யத்தொடங்கித் தொண்டர்களின் சகலதுன்பத்தையுமொழிக் கும் பெருமையுடைய் தனது நாமம்பூண்ட தடாகத்தில் ஸ்நா நஞ்செய்து வெண்ணீற்றைத் தேகமுழுதும்பூசி உருத்திராட்ச மணிகளைச் சாத்திரவிதிப்படித் தரிக்கவேண்டும்உருப்புகளிற் குறைவறவணிந்து ஒன்றுபட்ட மனத்தையுடையவனாய்ப் பஞ்சாக் கரத்தைப் பலஆவர்த்தி செபித்தனன். பின்னர் விசுவகர்மனைக் கூப்பிட்டு " எம்பிரானுக்குத் திருவிழாவியற்றலுக் காகவேண்டிய பண்டங்களோடு சிறந்த ஆபரணங்களையுஞ் செய்தளித்துவிட்டு எத்தகைய சிறப்பினும் மேம்பட்டதாக நகரை யலங்காரஞ்செய் யென்று ஆஞ்ஞாபித்தான். விசுவகர்மன் அப்படியே தேவரீ ரது உத்திரவுப்படிச் செய்கிறேனென்று விரைந்து தங்கத்தினால் ஐந்து தேர்கள், வாகனங்கள், முத்துச்சிவிகைகள், கொடிகள், குடைகள்,சாமரங்கள், பாத்திரங்கள் முதலாகியவைகளை நவமணி கள் பதித்தாக்கியதுமன்றி ஆதார சத்திபீட முதலியவைகளையும், வானத்தை யளாவிய கோபுரங்கள், மண்டபங்கள், சபைகள் சக்கர தண்டம்,பிரமதண்டம்,சத்திபீடம்,தக்கணாக்கினிக்குமுன் மூன்று அக்கினிகுண்டங்கள் முதலியவைகளையும் பின்னும்வேண்டியமற்ற வைகளையும் இமைப் பொழுதிலுண்டாக்கியும்; தெருவெங்கும் மகரதோரணங்களையும் வாழை கமுகுமுதலிய மரங்களையுங்கட்டிப் பூரணகும்பங்கள்வைத்துப்பூமாலைகளைத்தொங்கவிட்டுக்கண்டோர் வியப்புறும்படியாய்த் திருநகரை யலங்கரித்து முடித்துப் பிரமனுக் குக்காட்டி யவனிடம் விடைபெற்றுத் தேவலோகம்போய்ச்சேர்ந் தான். பின்பு பிரமதேவன் நித்தியானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பவுத்திரம்பூண்டு அறுகு வில்வங் கைக்கொண்டு சங்கற் பஞ்செய்து சகலவாத்தியங்களும் கடலொலிபோலார்க்கத் தேவர் களோடு மிருத்துசங்கிரணம் புரிந்து அங்குரார்ப்பண மியற்றி அடுத்தநாள் வேதவோசை பொங்க வாத்தியங் கோஷிக்கப் பொற்றம்பத்தின்மேல் கொடியேற்றி யன்றுதொடங்கி ஒவ்வொரு தினமும் முன்பு அத்திதேவனை வீதியில் சூழ்வலம் நடத்தி இவ் வண்ணமாக இரவும்பகலுமாய் எட்டுநாள் விழாக்கொண்டாடி ஒன் பதாம்நாள் திவ்வியமாகிய ஐந்துதேர்களில் பஞ்சமூர்த்தமாகிய தேவர்களை ஆரோகணஞ்செய்வித்து மங்களவாத்தியங்க ளார்ப்ப நகர்வலஞ் செய்வித்தான். அன்றிரவு தேர்களினின்று அப்பஞ்ச மூர்த்திகளை அவரோகணஞ்செய்து சித்திரமண்டபத்தில் அழகிய வாகனத்தில் வீற்றிருக்கும்படிச் செய்து பத்தாம்நாள் மகத்தில்

பிரகாசிக்கும் இடபத்தின்மேல் திருவேடகநாதனையும் ஏலவார் குழலியம்மையையும் ஆரோகணஞ்செய்வித்து சுத்தமாய் விளங்கும் நீரையுடைய தன்பேர்பூண்ட பரிசுத்தத் தடாகக்கரையி லெழுந் தருளச்செய்து முதலிற் செய்யவேண்டியவைகளை விதிப்படிச் செய்து பின்பு அத்திதேவனைத் தடாகத்தி லாட்டுவித்து அவபிருதஞ் செய்வித்தான். அன்றியும் வேதியர்கள் அளவற்ற பெயர்களுக்கு அறுசுவையோடுகூடிய வுண்டியை மிருந்த அன்புடன் உண்பித்து பல உபசாரமொழிகளைப் புகன்று கந்தம் புட்பம் தாம்பூலாதிகளை அவர்கள்மனம் பேரானந்தமடையக்கொடுத்து உபசரித்தான். அல்லாமலும் நித்தியோற்சவங்கள் பக்ஷோற்சவங்கள் மாதோற்சவங்கள் ஆறுகாலபூசை முதலியவைகள் குறைவற நடத்தற்காகவேண்டிய சாதனங்களைச்செய்து நந்தவனங்களையும் உண்டாக்கினன். இவ்விதமாக நான்முகன் பூசனைபுரிந்து திருவேடகநாதன் மலரடிகளை வணங்கியேத்தி விடைபெற்று நீங்கித் தன்னுலகடைந்து சிருட்டித்தொழிலைச் செய்யலுற்றான்.

பிரமன் சிருட்டிபெறு படலம் முற்றிற்று.

## வியாசர் வரம்பெறு படலம்.

ஐம்புலாதிகளை நிக்கிரகித்து அரிய தவங்களைச்செய்து சிறப்பெய்திய சவுனகாதிமுனிவர்களே! திருவேடகத்தில் பிரமன் இறைவனைப்பூசித்து முதற்றொழிலாகிய சிருட்டிசெயுந் தொழிலினைப்பெற்ற சரித்திரத்தைச்சொன்னோம். இனி வேதவியாசர் பூசித்துவரம்பெற்ற வரலாற்றினைச் சொல்வோமென்று சூதமுனிவர் சொல்வாராயினர்.

பெருமைபொருந்திய நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்திநான்குகலைஞானம் பதினெண்புராணம் உபநிஷத்துமுப்பத்திரண்டு உபவேதம் நான்கு உபசாஸ்திரம் ஆறு உபகலைஞானம் அறுபத்திநான்கு உபபுராணம் பதினெட்டு நீதிசாஸ்திரங்கள் ஸ்மிருதிகள்முதலிய சகலகலைகளையுங் குறைவற வோதியுணர்ந்தவரும், யோகக்காட்சியிற் சிறந்தவரும் விபூதி ருத்திராட்சங்களையே தனக்குச்சாதனமாகக்கொண்டவரும், சந்திரனைத்தரித்த சடாபாரத்தையுடைய சிவபெருமானின் உபய திருவடிகளைத் தனது சிரத்தின்மீதும் உளத்தின்மீதும் நீங்காது வைத்திருக்கும் பெருந்

தவத்தினை யுடையவரும் சகல பாபங்களையும் எரிவீழ்பஞ்சென மாய்க்கும் பஞ்சாக்கிரத்தை விதிப்படி யுச்சரிப்பதினின்றும் நீங்காத நாவையுடையவரும், வேதத்திற்கூறப்பட்டுள்ள ஐந்துவகை வேள்விகளில் முதன்மையாகிய பசுபந்தமென்னும் வேள்வியைப் பலமுறை செய்தவரும், கடினமாக வருந்தி நோற்குஞ் சிவவிரதங்களனைத்தையுந் தவறாது நோற்கும் மாண்பையுடையவரும், பரிசுத்தம்பொருந்திய ரிஷிகளனைவர்க்குந் தலைமைத்தன்மை வாய்ந்தவரும், மெய்யன்புபூண்ட சீலருமாகிய பராசரமுனிவர் ஒருகாலத்தில் தெய்வத்தன்மையுடையதும் பரமசிவத்தின் சடாபாரத்தினின்றும் பெருகிவருவதுமாகிய கங்காநதியில் ஸ்நாநஞ்செய்யக் கருதிச் செல்லுகையில் வழியில் யமுனையென்னும் நதியானது குறுக்கிட்டது. அவ்வாற்றின் தோற்றமானது தாமரை, மா, அசோகம், முல்லை, நீலமென்னும் பஞ்சபுட்ப பாணங்களையுங் கருப்புவில்லைவளைத்து அதனிற்பூட்டிச் சங்கதொனியோடு காமுகர்களைவாட்டி வெற்றிபெற வெதிர்ந்தவரும் மன்மதனை யொத்திருந்தது. அன்றியும் வாழை பலா மா வென்னும் முக்கனிகளையும் தக்கோலம் ஏலம் இலவங்கம் பாளிதம் சாதிக்கா யென்னும் பஞ்சவாசத்தையும் இரத்தினங்களிழைத்த ஆபரணங்களையும் பொற்றட்டில்வைத்து ஏந்திக்கொண்டு தனது நாயகனைக் காணப் போந்த மங்கையையொத்திருந்தது. அப்படிப்பட்ட சிறப்பினை வாய்ந்த யமுனையாற்றங்கரையில அதனைக் கடந்துசெல்ல விரும்புவோர்களை ஏற்றிக்கொண்டுபோகு மழகிய தட்டையுடையதும் தேவர்விமானத்தை யொத்ததும் பண்டைநாள் தொடங்கி யிருப்பதுமான ஒரு மரக்கலமிருந்தது. அம்மரக்கலத்தினை, மாலுமியும் பரவர்க்கரசனும் தனது தந்தையுமாகிய தாசராசனது கட்டளைப்படிச் செலுத்துந் தொழிலைப்பூண்டவளும் அழகில் இரதியையும் இந்திராணியையும் வென்ற மாட்சிமையுடையவளும், மச்சகந்தியென்னும் பெயரினளுமாகிய கன்னிகையொருத்தி அம்மரக்கலத்தினருகில் அன்னப்பேடுபோல் நின்றுகொண்டிருந்தனள். அவளிடத்திற் பராசரமுனிவர்சென்று சில வார்த்தைகளைச் சொல்லுகின்றார்.

ஓ தோகைமயிலே! துன்பத்தை யொழிக்கும் மிக்க செல்வத்தினை யுடையவராயினும் ஏழைகளாயினும் யாவராயினும் அவர்களை ஓடத்தேற்றி நதியைக் கடத்துவித்து அக்கரையிற் சேர்ப்பவர்கள் உமாபதியின் திருவருளாற் றமதுமனத்துள்ளினைத்த இஷ்ட

காமியார்த்தங்க ளனைத்தையு மடைவார்கள். அவர்களை வானமும் வையமுமேவணங்கும். அல்லாமலும் தலயாத்திரை தீர்த்தயாத்திரைகட்குச் செல்பவர்களைத் தடுப்பவரும் நீரில்வீழ்ந்து தத்தளிப்பவரைக் கண்டு மனமிரங்கி யக்கலியைப் போக்காது பார்த்திருப்பவரும் நெற்றிக்கண்ணுடைய எம்பெருமானின் கோபத்திற்காளாகி யவர்கள் குலங்கள்நசித்து விலங்கு புள்ளாதி சனனங்களெடுத்திறந்து நரகிலழுந்துவார்களென்று வேதாகமங்கள் பலவாறு மியம்பாநிற்கும். ஆதலால் எனது சொல்லைத்தடுக்காது என்னை மரக்கலத்திலேற்றி அக்கரை சேர்ப்பையாகில் நீ சகலநன்மையையும் இனிதுபெறுவதன்றி அழகுள்ள கணவனையுமடைவை. உனக்கு ஓர்குறையும் நேராதுபெரும்புகழு முனக்குண்டாகும் எனச்சொல்லிய முனிவரின் மொழிகளை அவ்விலக்குமிபோல்பவள் கேட்டு அவர்தம் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி சுவாமி! தங்கள் மனத்திலுள்ள வெண்ணமெதுவோ வதனை யான் முடிப்பதற்கு யாதொரு தடையுமின்று. ஆனாலும் உங்களிடத்தி லடியேன் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டுவ தொன்றுளது. அஃதென்னையெனின் இம்மரக்கலத்தினைச் செலுத்துதற்கு ஐயாயிரம் பாரங் கனமிருத்தல் வேண்டும். அப்படிக் கனஞ்சேராவிடிற் செலுத்தேன். இது உண்மையாகும். எல்லாமறிந்த மகாநுபாவராகிய உங்கள் மனதிலுள்ளபடிச் செய்கவென்றனள்.

இவ்வாறு அக்கன்னிகை கனிவாய்மலர்ந்து சாற்றியதைக் கிருபையோடுகேட்ட பராசரமுனிவர் மகிழ்ச்சியடைந்து அரிய இரத்தினத்தைப்போல்பவளே! கிளிமொழியே! அழகுமிகுந்த பெண்ணரசியே! அமிர்தவருஷம் பொழிந்ததைப்போல் நினது மலர்வாய்புகன்ற மொழிகளைக்கேட்டு யாம் மிக மகிழ்ச்சியடைந்தனம். சிறக்க இம்மரக்கலத்தைச் செலுத்தும் விதமெப்படியென்னிற் கூறுதுங் கேட்பாயாக.

எல்லாவுலகத்திலுள்ள அறுபத்தினான்குகோடி புண்ணிய தீர்த்தமனைத்தையுந் தொகுத்துள்ளதோர் கமண்டலம் நம்மிடத்துள்ளது. அதை இம்மரக்கலத்தி லேற்றினால் நீசொல்லிய ஐயாயிரம்பாரக் கனமும் பொருந்தப்பெற்று நொடிப்பொழுதில் செல்லத்தொடங்கும். இது உண்மையாகும். அப்புறம் நீ உனது கைக்கோலைக்கொண்டு ஓடத்தைச்செலுத்தி என்னை யக்கரை சேர்த்த லரிதன்று. ஆதலால் இன்சொற்பாவாய்! தவறாது என்னை இதிலேற்றி அக்கரைசேர்ப்பாயானால் மிகவுந் தளர்வெய்திய

வயோதிகனுகியயான் மெல்லநடந்து யாவராலும் போற்றப்படுங் கங்காநதிபோய்ச் சேர்வேனென்று முனிவர்பெருமான் கூறினர். அதற்கு அப்பூங்கொடி சம்மதித்தவளாய்ப் புன்னகையுடன் அவர் தம் அடிகளைவணங்கி எனது முன்னோர்செய்த தவப்பயனு லீண்டெழுந்தருளியநீர் உயர்ந்த வேதியர்குலத்தி லுதித்தவர். மிகுந்த விருத்தாப்பிய தசையுடையவர். சகல சாஸ்திரங்களையும ஐயந்திரிபறக்கற்றவர். அருந்தவ நிலைமை யுடையவர் நீர் இட்ட கட்டளையை மறுப்பது எளியாளுக் கழகாமா? நான்காம் வருணத்திற்பிறந்தவளும் ஓடமோட்டியாகிய தாசராசனது மகளுமாகிய சிறியேன் உங்கள் காலாலிட்ட வேலையைக் கையாலேறறுச்செய்தல் கடமையன்றோ? ஆதலின் உங்களின் கருணைவிரும்பி ஓடத்தை யோட்டுதற்குச சம்மதித்தேன். இதன்றி மற்றுயாதொன்றுமில்லையெனப் புகலலும், முனிவர்பிரான் பரிசுத்தம்பொருந்திய தமது கமண்டலத்தை மெல்லவெடுத்து ஓடத்தின்மேல் வைத்துத் தாமும் ஏறியவுடன் பாரஞ்சரியாயிருந்தாலன்றி யசைதற்கரியவது கரையினின்று மூர்ந்துசெல்லத் தொடங்கிற்று. அதைகண்ட மச்சகந்தியென்னும் அம்மாதரசி நதிக்கரையை விட்டுக்கிளம்பி நீரைக் கிழித்துக்கொண்டேரும் அந்நாவாய்த்தலையினின்று பற்றுக்கோலைக கொண்டேன்றி நேரான வழியில்திருப்பி நீர்க்கடவுளைப் பராவியதைச்செலுத்துவாளாயினள்.

தவசிரேட்டராகிய அப் பராசரமுனிவரின் கமண்டலத்தினது வலிமையாற்செல்லும் மரக்கலமானது அலைகளால் வாரிவீசும் திவலைகளையெறிந்து நாற்புறமுஞ் சுழன்று மலைபோன்ற யானைகளையு மெடுத்துவிழுங்கும் வலிமையுடைய திமிங்கிலமென்னும் மச்சங்களு மஞ்சிவிரைந்தோட நீரைப்பிளந்து கொண்டு செல்லும்போது கண்ணுதற்கடவுளாகிய சிவபெருமான் உலகதில் வேதாகம புராணங்களின் பொருள்கள் நன்குவிளங்கிப் பரவுதல் வேண்டுமெனக் கருணையுடன் திருவுளம்பற்றிய காரணத்தால் அந்த யமுனாநதியினடுவில்ஒரு பூஞ்சோலையானது தோன்றியது. அச்சோலையின்கணுள்ள பலவகையாகிய சிங்காரங்களைத் தனது துணை விழிகள் களிக்கக்கண்ட முனிவர்கோமான் விதிப்பயனுல் விரகத்தையடைந்து அதினுற் கலங்கிய மனத்தையுடையவராய் மச்சகந்தியின் வதனத்தைநோக்கிக் கீழ்வருமாறு மொழிகின்ருர்.

ஓ கன்னிகையே! சகலவளமுஞ்செறிந்து புதுமைகள் பலவுடன் விளங்குஞ் சோலையையுடைய இத்தீவில் நாமிருவரு மிறந்

கிச் சிறிதினைப்பாற்றிப் பின்புசெல்லலாம். மரக்கலத்தை மெதுவாக விடக்கடவை. சிவபெருமானின் திருவுளக்குறிப்பின்படி ஐம்புலாதிகளையடக்கி முற்றுந்துறந்த மாதவமுனிவனை உன்னிடத்தில் தோற்றுவித்து அவனால் உலகில் மறைந்துகிடக்கும் வேதாகமங்களை விளங்கிடச் செய்தல்வேண்டுமென்று மனத்துள் நினைந்தே தன் மாரனுஞ் சிறிதேனுந்தயவின்றித் தனது பூங்கணைகளை எனமேற் செலுத்தி வருத்துகின்றனன் ஆதலின் எனதுளத்தை நலிவுபடுத்தாமல் இப்பூம்பொழிலினிடத்து என்னைப் புருடனாகப்பெற்று மதனநூல் விதிப்படிச் சுகத்தைத் தருவையாகில் நீ விரும்பிய நன்மைகளனைத்தையும் தவறாதுபெறுவை. அன்றியும் உலகெலாம் புகழும் புத்திரப்பேறு முனக்குண்டாகும்.' எனது உயிர்க்குத் துணையுமாவாய் என்னை இச்சமயத்துக் கைவிடாதுகாத்தல் நினது கடனாகும் எனப்பலவாறாய்ச் செப்பிய முனிவரின் சொற்களையும், மரக்கலம் ஓடாது நின்றுவிட்டமையும் நினைத்து அப்பெண்கள் சிகாமணி முனிவர்தம் முகநோக்கிச் சிலநயமொழிகளைக் குயிலு நாணச்சொல்லுகின்றாள்.

சுவாமி! பற்பல நூற்களை யறிந்திருப்பவரும் துறவறத்தில் வழாத குற்றமற்ற பெருந்தவத்தினை யுடையவருமாகிய நீர் அறியாதது யாதுமின்று. உமது இச்சையின்வண்ண மிசையலாமென்றாலதற்குரிய பக்குவத்தை யடைந்தவளல்லேன். கன்னிகழியாக் குடியிற்சிறியளாகியயான் உமக்கு என்னசொல்லக் கிடக்கின்றது? அன்றியும் நீரோ பெருமைபொருந்திய முதல் வருணத்தவராகிய வேதியர்பெருமான்*யானோ பழியில்மிகுந்த விழிகுலப்பெண். பருவத்தையடையாத சிறியை என்னைக் கூடநினைத்தல் முதன்மையாகிய இழிவென்பதை நீருணரவில்லையோ? ஆதலால் மரக்கலத்தை ஓடாது நிறுத்துதல் தருமமன்று கிருபையுடன் விடுவீராக சீக்கிரமாய்க் கரையினிடத்துக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றேன் நீர் உத்தேசித்துவந்தவாறு கங்கையைநோக்கிச் செல்லுமெனச்சாற்றினள்.

அவற்றைக்கேட்ட முனிவரர், ஓ தேன்மொழியே! யானுற்ற விரகமானது நின்னோடு கூடினன்றித் தீராது தவசிகளுக்கெல்லாந் தலைவனாகிய என்னையடைந்த நீயும் பெருந்தவத்தினை யுடையவளாவாய். பூருவ புண்ணியவசத்தா லுன்னையீன்ற பிதாவும் என்னைநன்கறிவான். அன்றியும் நீயறியாத விஷயமொன்றுளது அதனை உனக்கறிவிக்கின்றேன் மனமகிழ்ச்சியுடன் கேட்கக்கடவை

அதாவது உன்னைப்பெற்ற இத்தாசராசனாகிய தந்தையையன்றி முன்னாகிய மற்றொருதந்தையு முனக்குண்டு. அவன் முனிவர்களுக்கும் வேதியர்களுக்கும் மிகவினிமையாகியவன். அருந்தவத்தினை யுடையவன் உலகமெலாம் ஒரு குடையிலாண்ட வசுவென்னும் பெயரையுடைய மன்னன், தற்சமயம் சுவர்க்கத்தின்கண் வசித்துக்கொண்டிருப்பவன். அப்படிப்பட்ட மேம்பாடுள்ள உன் தந்தையை ஈண்டு தேவர்களோடும் நீ காணும்படியாக வருவிப்பேன். அதுவல்லாமல் உனக்குள்ள மச்சகந்தம் நீங்கிப் பரிமளகந்தம் யோசனைதூரம் வீசும்படியாகவுஞ் செய்வேன். இவ்வமயம் என்மொழியைத்தட்டாது இப்பூஞ்சோலையினிடத்து என்னைமணந்திடுக. இல்லையெனின் உனக்குப் புத்திரசந்தானமென்பதில்லாமற் போய்விடும் என்சொற்படி நடப்பையேல் தேவலோகத்திலுள்ளவர்களாலும் இப்பூலோகத்திலுள்ளவர்களாலும் பெரும்புகழினை யடைவாய். நான் உன்னையேதலைவியாக வரித்தனன் என்று கழறினர்.

கவனமாய் அவைகளைக்கேட்ட அச்சுந்தரவனிதை தனக்கு மங்கைப்பருவமும் மேன்மையும் நன்மகப்பேறும் உண்டாவதை மனத்தினுள் கருதியவளாய்ப் புன்னகைகொண்டு நாணத்துடன் யான் இனிச்செய்வதுயாது? தேவரீர் திருவுள்ளப்படி நடக்கட்டுமென்று உரைத்தனள். அதைச்செவிக் கமுதாய்க் கேட்ட அம்முனிவர் தேவேந்திரபோகத்தை யடைந்தவர்போற் களித்து உடனே தனதுகமண்டலத்திலுள்ள தீர்த்தத்தைக் கையிலெடுத்து அபிமந்திரித்து அப்பெண்கொடிமேல் புரோக்ஷித்தவுடன், அவள் சரீரத்திலிருந்த யாவராலும் வெறுக்கத்தக்க துற்கந்தமானது கங்காநதியில் ஸ்நானஞ்செய்தவனின் பாவங்கள் விலகியோடுமாறுபோல் நீங்கிப்பரிமளமானது வீசத்தொடங்கிற்று. பின்பு பராசரர் தேவர்களும் வசுவென்னும் மன்னனும்வருகவென்று நினைத்துக்கொண்டு மங்கையுடன் மரக்கலத்தைவிட்டிழிந்து பொழிலையடைதலும், அவர் தம்மனத்திலெண்ணியவாறு முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் இந்திரனும் வசுமகாராசனும் வந்து சேர்ந்தனர். பரிமளகந்தி இந்திராதிதேவர்களையும் முந்தியதந்தையாகிய வசுவென்னுமுந்தமனையுஞ் சிந்தையால் நன்குவணங்கினள் முனிவரும் ஆனந்தபரவசமடைந்தார்.

அவ்விதமாக யாவருமொருங்குகூடிக் குதூகலித்திருக்குஞ் சமயத்தில் சுவர்க்கதிபனாகிய இந்திரன் வசுவென்னும்மன்னனைக்

கண்குளிரநோக்கி ஓ சார்வபௌமனே! நீ உள்ளன்போடு முன்னை நாட்செய்துவைத்த அரியதவப்பயனன்றோ இப்பொழுது இருடியர்க்குத்தலைவராகிய இப்பராசரமுனிவரை நினக்குமருமகனாகும்படிச்செய்தது? இவ்வுலகில் அழகியகன்னிகையர்களை சத்துவ குணத்திலுயர்ந்து நான் மறைகளை விதிப்படியோதுஞ்சற்பாத்திரர்களுக்குத் தானஞ்செய்யிற் சலத்தின்மேல் விட்டதைலத்தைப் போல் மேம்பட்டுப்பரவும் பானங்களுட்சிறந்தது துங்கபானமெனவும், கானங்களுட்சிறந்தது சாமவேதகானமெனவும், ஸ்நானங்களிற்சிறந்தது கங்காஸ்நானமெனவும், முப்பத்திரண்டு தானத்திலுஞ்சிறந்தது கன்னிகாதானமெனவுங் கூறுவர்மேலோர். அன்றியும் பரசிவலிங்கம், சாளக்கிராமம், உருத்திராக்கம், திரவியம், மனை, நெய், பால் அறுசுவையோடுகூடியவன்னம் முதலியவைகளை அன்புடன் பெரியோர்க்குத் தானஞ்செய்யில், அவற்றால் தங்கள் மூவேழுதலைமுறையும் ஈடேறுவதோடு மேலாகிய சுவர்க்கத்தையுமடைவார்கள். அரும்பொருள் செறிந்தயாதேனுமொரு நூலைப் புத்தகமாக்கியேனும் நற்குலத்தோர்பெற்ற கன்னிகையையேனும் தவத்தின்மிகுந்த முனிவர்களுக்களிப்பவர்கள், மிகச்சிரமப்பட்டுப் பலயாகங்கள்செய்து பெறும்பலனையடைந்தவராவர். தன் புத்திரியைச் சற்பாத்திரனுக்குத் தானஞ்செய்பவன் இம்மையில் அளவற்றசெல்வத்தையனுபவித்து மறுமையில் கற்பகோடி காலங் கற்பகத்தருக்களின் நீழலிலமர்ந்து தேவபோகத்தையனுபவித்தபின்னர் எமதுபெருமான் எழுந்தருளியிருக்குங் கைலாய வாழ்வையடைவனெனவும், அப்படித் தானமாகக்கொடுக்கப்பட்ட கன்னிகையின்வயிற்றில் ஒரு சற்புத்திரன் தோன்றுவானாகில் அக்கன்னிகையைப்பெற்றோன் எழுபிறப்பையுங் கடப்பதன்றித்தனது பிதுர்க்களின்குலங்கள் நூறுதலைமுறையும் உய்யுமெனவும், சற்பாத்திரரல்லாதார்க்குக் கன்னியைத்தானஞ்செய்யின் உவர்நிலத்தில் விதைத்துழல்வதையொக்குமெனவும், சற்பாத்திரர்கிடைத்தவன்றே தனது புத்திரியை நாள் நக்ஷத்திரங்களைநோக்காது உடனே தானஞ்செய்திடல் வேண்டுமெனவும் உண்மைநூல் செப்புகின்றது. ஆதலின் நீ முன்புரிந்த பெருந்தவப்பயனாய் உனக்குக்கிட்டிய சற்பாத்திரராகிய இம்முனிவர்பிரானுக்கு நினது புத்திரியை இன்று கன்னிகாதானஞ்செய்தல் நலமாகுமெனப்புகன்றனன்.

அவ்வாறாய் விண்ணவர் பெருமான்கூறிய வாசகத்தைக்கேட்ட வேந்தனானவன் உடனே எழுந்து பராசரமுனிவரின் திருவடிகளிற்

பணிந்து பலமுகமன் மொழிகளைப்பணித்து, தனது புத்திரியாகிய பரிமளகந்தியைச் சகலவித ஆடையாபரணங்களாலும் புட்பங்களாலுமலங்கரித்து அவ்விதமே மணமகனாகிய முனிவரையுமலங்கரிக்கச்செய்து இருவரையுங் கடிமணப்பந்தரிலிருத்தி வேதவிதிப்படிச் செய்யவேண்டிய சடங்குகள்யாவையுங் குறைவறச்செய்வித்து, அளவுகடந்த மகிழ்ச்சியுடன் கன்னிகையை முனிவருக்குத் தாரைவார்த்துத் தந்தனன். அன்னகாலையில் ஆகாயத்தினிடத்தில் துந்துபிமுழங்கின. தேவர்கள் புட்பவருடம் பொழிந்தார்கள். பின்பு தம்பதிகள் அங்கு விவாகத்தைக்காண வந்திருந்த தேவர்களையும் முனிவர்களையும் முறைப்படிவணங்கவும் உங்களுக்குத் தூய்மைத்தாகிய மகவுண்டாகக்கடவதென ஆசீர்வதித்து வசுவென்னும் மன்னனுடன் தேவலோகம்போய்ச் சேர்ந்தனர். அப்பால் முனிவர் பரிமளகந்தியைக் கூட யத்தனித்தலும் அம்மெல்லியல் அவர் தம் அடிவணங்கித் தேவரீர் என்னை நண்பகலிற்கூட நினைத்தல் தருமமன்றெனப் பலபலநியாயங்கூறித் தடுத்தனள். அவைகளைச் செவியுற்றமுனிவர் எனதுயிர்த்தலைவியே! யான் சகல குற்றங்களையுங் குணங்களையு நன்கறிவேன். இத்தருணம் என்னை வருத்தாநிற்கும் விரகநோயைத் தீர்க்கச் சிறிதுந்தாமதித்தல் வேண்டாம். இதோ உனதெண்ணப்படி எனது தவவலியால் இரவை வருவிக்கிறேன் பாரெனமொழிந்து தனது கமண்டலத்திலுள்ள நீரையள்ளி வானத்தில் வீசியவுடன் சூரியன் மறைந்து பேரிருள்சூழ்ந்தது. உடனே இருவரும் அப்பூம்பொழிலில் இரதியுமதனும் போற்கூடி இன்பந்துய்த்தனர். அச்சமயத்தில் முனிவரின் வீரிய விருத்தியால் பரிமளகந்திக்குக் கருப்பந்தரித்து ரிஷிபிண்டம் இராத்தங்காதென்னும் உலகவழக்கத்திற்கு உதாரணமாய், எல்லாவுலகுமுய்யும் வண்ணங் கோடி சூரியப்பிரகாசமாய் ஓர் ஆண்மகவு உதித்தது. அன்னைபிதாவாகிய இருவரும் அக்குழவியின் அழகனைத்தையும் நன்றாகப் பார்த்து உள்ளநெக்குருகி வியாசரென்னுந் திருநாமஞ் சூட்டினர். உடனே அப்புதல்வன் இருமுதுகுரவர்களையும் வணங்கித் தவத்திற்குச் செல்லவிடை கேட்க அன்னையாகிய பரிமளகந்திமட்டுஞ்சம்மதிக்கவில்லை. அதற்கு வியாசன், அரியதவத்தினால் என்னைப்பெற்ற அன்னையே! நான் வேதாகமங்களையும், ஆறு சாத்திரங்களையும், பதினெண் புராணங்களையும், இதிகாசங்களையும் சிக்கறுத்து உலகில் பிரகாசிக்கும்படி செய்வதற்காகத் தவத்திற்குச்செல்லுகின்றேன். நீயென்னை நினைத்தசமயம் உன்முன்வந்து நிற்பேன். இச்சமயம் என்னைத்

தடுத்தல் வேண்டாம் வருந்தாது விடைதாவெனச்செப்பிப் பிதாவுக்கு மவ்விதமே மொழிந்து விடைபெற்று இமயமலையை நோக்கிச் சென்றனன்.

கேளுங்கள் சவுனகாதிமுனிவர்களே! நீலகண்டத்தையுடையவரும் வேதாகமங்களை யருளியவருமாகிய சிவபெருமான் தன்னை மணக்குநிமித்தம் உமாதேவி யுற்பவித்தவிடமும், புலிகளின்கூட்டமும் மான்களின்கூட்டமும் அருவியாற்றில் ஒருதுறையில் நீர்பருகுவதும், வீரமிகுந்த சிங்கங்கள் வசிக்குங்குகைக்குள் பெட்டையானைகள் கன்றுகளீன்றிட அவைகளை விரோதமின்றி யச்சிங்கங்கள் பாதுகாப்பதும், நெருப்பின்மேல் நீறுபூத்தன்ன வெண்பனி மூடியிருத்தலால் வெள்ளிமலைபோல் தோற்றத்தையுடையதும், கங்கையையும் கடுக்கையையும் சந்திரனையுந் தனதுசிகரத்திற்பெற்றிருத்தலால் திரிபுரதகனனையொத்த மாட்சிமையுடையதும், தேவதாரம் மூங்கில் செங்கடம்பு விளா அகில் வெண்தேக்குமுதலிய விருக்ஷங்களடர்ந்திருப்பதும், காட்டுப்பன்றிகள் சிங்கங்கள் மதயானைகள் புலிகள் யாளிகளாதி விலங்குகளின் ஒலி மலையருவியின் ஒலியையடக்கும் பெருமையினையுடையதுமாகிய இமயமலையை நண்ணி ஆங்குப் பரிசுத்தம்பொருந்திய பதரிகாச்சிரமத்தையடைந்தனன். பின்பு கங்கைக்கரையி லோர் பர்ணசாலைவகுத்து அதில் தன்னிருகால்களையுமடக்கிப் பஞ்சேந்திரியங்களையும் மனத்தையும் வெளிச்செல்லாதடக்கி, ஐந்தாதாரங்களையுங்கடந் தப்பாலுள்ள ஆஞ்ஞாசக்கரமென்னும் ஆயிரமிதழ்க்கமலத்தின்மேல் யாவராலுங் காணுதற்கரிய எம்பெருமானைச் சோதிவடிவாய்த் தரிசிக்கப்பெருந் தவத்தினைப் புரியலாயினன்.

இவ்வாறு நெடுநாள் தவம்புரிந்துஞ் சோதிதரிசனங்கிட்டிலது அதனாலவ்வியாசன் மனம்வருந்துஞ்சமயம் ஆகாயத்தில் அசரீரியென்னுந் தெய்வீகவாக்கு ஒன்று உண்டாயது. அஃதென்னையெனின், "ஓ வியாசனே! உயர்ந்ததவயோகத்தால் தாதான்மியப் பேறெதுவும் இங்குனக்குக்கிட்டாது. வில்வாரணியத்திலுள்ள திருவேடகத்திற்குச் செல்க" என்றதாம். அதைச் செவியுற்ற வியாசன் உடனே இமயமலையைவிட்டுப் புறப்பட்டு வளம்பொருந்திய பாண்டிநாட்டில் மிகுந்த பெருமையுடையதலமென யாவராலும் புகழப்பட்ட வில்வவனக்ஷேத்திரமென்னுந் திருவேடகக் [illegible]யடைந்து, கர்த்தனைப் பூசிப்பதற்காகப் பிரமனால் உண்டாக்கப் [illegible]ள்ள பொற்றடாகத்தில் ஸ்நானஞ்செய்து விபூதிருத்திராக்

கங்களைத்தரித்து, பஞ்சாக்கரசெபத்துடன் கோயிலுட்புகுந்து சோதிவடிவாகிய திருவேடகநாதனின் இணையடிகளில்வீழ்ந்து நமஸ்கரித்துப் பின்னர் விதிப்படி பூசனைபுரியத்தொடங்கினன்.

பொற்கடத்தைத் தாபித்து சமக நமகத்தைச்செபித்து அத் தீர்த்தத்தினாலும், பஞ்சகவ்வியத்தினாலும், பஞ்சாமிர்தத்தினாலும், நறுமணமுள்ள சந்தனத்தாலும் அம்மூலலிங்கத்தை முறையே யபிடேகித்து மெல்லிய ஆடையாலீரந்துடைத்து உயர்ந்தபீதாம் பரத்தை யிடையிற்றரித்துப் பூதிவெண்புண்டரங்களை அழகு பொருந்த நெற்றியிற்சாத்திச் சந்தனமணிந்து நல்ல வில்வதளத் தால் ஆயிரந்திருநாமங்களையு முச்சரித்து அருச்சித்தபின் தூப தீபங்களைக்காட்டி அறுசுவையோடு கூடிய பலசித்திரான்னங்களை யும் பாயசத்துடன் நிவேதித்துச் சோடசோபசாரங்களையுஞ்செய் து நமஸ்கரித்து, மும்முறைவலம்வந்து மும்முறை தனது எட்டுறுப் புக்களும் நிலத்தில் நன்குபொருந்தச் சாஷ்டாங்க தண்டனிட் டிறைஞ்சி எழுந்துநின்று அளவிலாத் தோத்திரங்களைச்செய்து தியானித்துநிற்கையில் எவைக்குங்கர்த்தாவாகிய திருவேடகநாதன் கிருபைகூர்ந்து அம்மையுடன் பிரசன்னமாகி ஓ வியாசனே! நீ வேதாகமபுராண இதிகாசங்களை நன்குதேர்ந்து அவற்றைச் சிக் கறுத்து உலகமெல்லாமுய்யும்படியாய் உரைத்துப் பின்னர் நிட் டைகூடி தாதான்மியப்பேற்றை யெய்தக்கடவை எனத் திருவாய் மலர்ந்தருளலும், அவன் பேருவப்பெய்தியவனாய் உள்ளநெக்குரு கிப் பன்முறை நிலத்தில்வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து சாமவேதத் தால் தோத்திரமியற்றி விடைபெற்று வடதிசையைநோக்கிச் சென்றனன். ஒப்பற்ற கடவுளும் மறைந்தருளினர்.

வியாசர் வரம்பெறுபடலம் முற்றிற்று.

## பாராசரப் படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே! ஸ்ரீ வேதவியாசரின் திவ்ய சரித்திரத்தைத் தெளிவாகக்கூறினோம் இனி அவர் தந்தையாகிய பரா சரமுனிவர் திருவேடகநாதனைப் பூசனையாற்றிச் சித்தசுத்தியடைந் த வரலாற்றினைச் சொல்வோங்கேட்பீராக.

தனது புத்திரனாகிய வியாசன் தன்னைவிட்டுப் பிரிந்துசென்ற மையை யெண்ணியெண்ணி வருந்தாநிற்கும் பரிமளகந்தியின் மதி

யனையமுகத்தினைப் பராசரமுனிவர் கிருபையோடு பார்த்துப் பல தேறுதல்மொழிகளைப் புகன்று பின்னுங்கூறுவார். எனது உயிர்த் துணையே! இனி நீ வருந்துதலை யொழிப்பாயாக உன் புத்திரன் எங்குற்றானோவென்ற கவலையுமுனக்கு வேண்டாம் அவன் நம்மிடத்திற்செப்பியவாறு வேதாகமபுராணாதிகளின் அரும்பொருளை இவ்வுலகத்தவரறிந்து உய்யும்படி அவைகளைச்சிக்கறுத்து வெளியிடக்கருதியவனாய்த் தவத்திற்குச்சென்றிருக்கின்றனன். நிற்க நீ பேதைமதியால் புத்திரன்புத்திரனென்று புலம்புகின்றனை. இம் மாயவாழ்க்கையாகிய பிரபஞ்சத்தில் புத்திரன்யாவன்? அவனைப் பெற்ற தாய்தந்தைகள்யாவர்? சகோதரர்யாவர்? சுற்றத்தினர் யாவர்? அயலார்யாவர்? நண்பர்கள்யாவர்? மனைவியாவள்? இவைகளையெல்லாம் உற்றுநோக்குகையில் வீண்மயக்கமேயாகும். கனவுபோன்ற இவ்வுலகவாழ்க்கையில் பொன், நிலம், மாதர், மக்கள் முதலியவைகளைச் சதமென்றெண்ணி இறைவன் திருவடியை மறந்து இன்பம்வந்தகாலை மகிழ்வடைந்தும், துன்பம்வந்தகாலைத் துக்கப்பட்டும் அலைந்துழலும் பொறிபுலிகளைப் பகுத்தறியுஞ் சத்தியற்ற கொடியவிலங்குகளுக்கு ஒப்பிட்டுச் சொல்லுவர்மேலோர். சகலவுயிர்களுக்குந் தலைவனாய் எங்கணும் எள்ளுக்குள் எண்ணெய் போல் நீக்கமற நிறைந்துநிற்கும் முழுமுதற்கடவுளது திருக்கருணையால் சீவர்களுக்கு வேண்டுவன வேண்டியபடி கிடைக்கும். இவ்விடயங்கள் யாவையும் உய்த்துணர்ந்தபெரியோர் இவைகளைக் கருதி ஒருக்காலும் வருந்தார்கள். ஆதலால் நீ துன்பப்படாதே யான் அறிந்திடத்தக்கவனைத்தும் நன்கு அறிந்துள்ளேன். நானுங் காமத்தினால் தூவக்குண்டு இப்புண்ணியநதியின் நடுவில் தவத்திற்கு ஓவ்வாத கொடுஞ்செய்கையைச் சிறிதும் யோசனையின்றிச் செய்துவிட்டேன். இஃதனைத்தும் ஈசன்கட்டளையின்றி வேறுவதில்லை. இதுநிற்க இனி உனதுகழுத்தில் என்னால் அணியப்பட்ட மாங்கல்யமானது கனவேபோல் யாருக்குந்தோன்றாது மறையக்கடவது. நீயும் முன்போல் கன்னிகையாகி வலைஞன்வீட்டில் யதாப்பிரகாரம்பெருந்தி வசித்திருக்கக்கடவை அன்றியும் இக்கடல் சூழ்ந்தவுலகத்தை ஒரு வெண்கொற்றக்குடைநிழலி லமர்ந்து அரசளிக்குஞ் சந்திரகுலத்தோன்றலாகிய சந்தனுமகாராசனுக்கு மனைவியாகுவை, அம்மன்னன் உன்னையடையுங்காலத்து, இன்று இப்பூம்பொழிலில் எய்திய யௌவனபருவ மறுபடியுமுனக்கெய்தும், நீ யாதொன்றுக்குமஞ்சேல் என இசைத்து முனிவர்செல்ல வெழுதலும். பரிமளகந்தியானவள் அவர் முகத்தைநப்பார்த்து என்னு

தாய்தந்தைகளை நீக்கி யவர்களனுமதியில்லாமல் பகலிலே என்னை இப்பூஞ்சோலையினிடத்துக் கூடினீர். நானும் ஓர் அழகிய புத்திரனையீன்றேன். அவனே தவத்தைநாடிச்சென்றான். அவன்சென்ற வருத்தத்தையும் உம்மையும் மறந்து நீரே கதியெனநம்பியிருக்கு மென்னைக் கைவிட்டுச்செல்லத் துணிந்த காரணம்யாது? எனக் கூறி அவரடியில்வீழ்ந்தழுதனள். அவ்விதமாய் ஆற்றாத்துயருடன்நின்ற அப்பூங்கொடியை முனிவர்பிரான் கருணையோடு தனது கைகளால் தூக்கிக் கண்ணீரைத்துடைத்துப் பல இனியமொழிகளால் மனதைத்தேற்றிப் பின்னர் அவளைப்பார்த்து ஓ மாதுசிரோமணி!- நீ வருத்தப்படாதே உலகமெல்லாம் வணங்கும் மன்னர் மன்னன் உன்னைத் தனக்குத் தலைவியாகக்கொள்ளுவன் நீ யாதொருகுறைவின்றிச் சுற்றத்தாரோடு சகலபோகபாக்கியங்களை யனுபவித்து வாழப்போகிறாய், இவ்வுண்மையான விஷயத்தை யுனக்கு ஒளியாமற் செப்பிவிட்டேன் சத்தியமாய் நம்பக்கடவை. அல்லாமலும் நாமிருவருங்கூடி இன்பந்துய்த்த விஷயம் யாருக்குந் தெரிவித்தல்கூடாது. உனது மேனியிலிருந்த புலால்நாற்றம் மாறி நறுமணந் தோன்றிய காரணமென்னவென்று கேட்பாருக்குப் பராசரரென்னும் ஓர் முனிவரை எனது ஓடத்தேற்றி யக்கரை விடுத்தேன் அவர் எனது பயபக்தி விசுவாசத்திற்குமகிழ்ந்து இம்மணம் எனது மேனியிலுண்டாகுகவென ஆசீர்வதித்தனர் என்று சொல்லி இம்மறைவுப்பொருளை என்றைக்கும் வெளிவிடாதேயெனக்கூறினர். அதனைக்கேட்ட அம்மின்னிடையாள் யாதுந் தடை சொல்லாது அம்முனிவரின் உத்திரவுப்படி அவரை மரக்கலத்திலேற்றிக்கொண்டுபோய் அக்கரைவிடுத்து, அவ்விடத்தில் நடந்தவைகளெல்லாங் கனவிற்கண்ட பெருநிதியென மறந்திருந்தாள்.

பரிமளகந்தியானவள் இந்தப்பிரகாரம் யமுனைத்துறையிலிருக்கக் கங்காநதியை நோக்கிச்செல்லும் பராசரமுனிவர் குற்றமற்ற தவத்தான்மிக்க எனது மனதில் எண்ணத்தகாத காமவிச்சையை யடைந்து என்னகாரியஞ்செய்தேன் எனக் கலங்கியமனதையுடையவராய், அந்தோ! இழிகுலத்திற்பிறந்த பெண்ணினது இன்பத்தை மனதில்நினைத்தலே பெரும்பாவம் அப்படியிருக்க இழிகுலத்திற் பிறந்தவளும் அதிக துர்க்கந்தமுடையவளுமாகிய அக்கன்னிகையை இச்சையான்மயங்கி, ஒப்பற்ற புண்ணியநதியாகிய யமுனையின்நடுவிற் பகலென்றும் பாராது கூடியவெனது பத்திஞான

வைராக்கியங்களின் முறைமையானது வெகுநன்று. பல கொடிய விலங்குகள் நிறைந்தகானகத்தில் சருகோடு தோயத்தையுண்டும், நீர்மேல் படுத்தும், ஊசிமுனையில் தலைகீழாய் நின்றுங் கடுந் தவத்தைப் புரியவல்ல பெருந்தவசிகளாயினும்) அனங்கன் கணைக்குள்ளாகி நலியாதவர் அரியரினுமரியரேயாகும் திடமாகிய பத்தி, ஞானம், வைராக்கியம், நல்லொழுக்கம், தருமம், தெய்வம் போற்றல், தவம்புரிதல் முதலிய இவைகளெல்லாம் மங்கையர்தங் காதலுட்பட்டஞான்றே சூரைக்காற்றி விலவம்பஞ்செனப் பறந் தோடுதல் உண்மை. எல்லாக் கலைகளையும் ஐயந்திரிபறக்கற்ற மேலான அறிவையுடையவர்களும், நரைதிரைகளாலும் பலபிணி களாலும் வருந்துபவர்களும் தமது சுற்றத்தினரெல்லாம் அலர் தூற்ற மடந்தையரின் மையலிற்பட்டுழல்வரெனின் மற்றியார்தான் அதனைக்கடந்து உய்யவல்லவர்கள்? ஊரைவளைத்தெழுந்து தகிக் கும் அக்கினிக்கு மலையினுச்சியி லொளித்தேனும் நீரினுண்மூழ்கி யேனு முயிர்தப்பலாம்பெண்களின் காமாக்கினிக்கோ மேற்கூறிய விரண்டிடங்களிலு மொளித்தாலுந் தப்பமுடியாது. இஃதுண்மை யுண்மையெனப் பலபலவாறுய்ச்சிந்தித்து வருந்திக்கொண்டிரா நிற்கும் அச்சமயம் சாம்பமூர்த்தியின் திருவருளால் ஆகாயத்தில் ஓர் அசரீரியுண்டாயது. அஃதென்னையெனின் ஓ பராசரமுனி வனே! சிவபெருமான் கிருபாகடாக்ஷத்தால் நீ இன்றுசெய்த காரியத்தையுன்னி மனந்தளராதே சுகதுக்கமிரண்டும் விதிப்படிக் கிட்டும், அதனைக்கடத்தற்குப் பிரமவிஷ்ணுக்களாலும் ஞானிகளா லுங் கூடுமோ? நிற்க கறைமிடற்றண்ணல் இவ்வுலகமுய்யும் பொருட்டுத் திருவுளத்தில் கருதியவண்ணம் திருமாலே இங்கு வியாசனென்னும் பெயருடன் உனக்குத் தோன்றினன். அதனால் உனது பத்தி ஞானங்கள் தவறுதலடைந்தன இனி நீ சித்தசுத்தி யடைதற்கு உபாயம் என்னவெனின், கிழக்கடற்கு மேற்பாலுள்ள தென்பாண்டிநாட்டினுள் வைகையாற்றுக்குக் கீழ்த்திசையில் மது ரைக்கு வாயுதிக்கில் மிகச்சிறப்புப்பொருந்திய வில்வாரணியமென் னும் ஓர் சிவஸ்தலமுள்ளது. அவ்விடத்திற்கு நீ சென்று ஆங்கு திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் திருவேடகநாதனை யும் ஏலவார்குழலியம்மையையும் திரிகரணசுத்தியோடு பூசனை புரிந்து பணிவையாகில் சித்தசுத்தி தவஞானம் யாவும் பெறுவை. விரைந்து செல்க வென்றதாம்.

இவ்விதமாக அசரீரி புகன்றதைக்கேட்ட பராசரமுனிவர் இதுவுஞ் சந்திரசடாதரமூர்த்தியின் திருவருளென்றெண்ணி அவ

ணின்றும் நீங்கித் தென்றிசையைநோக்கிப் பிரயாணமாகி, நவமணிகளையுங் கொழிக்கு மலைகளையுடைய வைகையாற் பிரகாசிக்கும் பாண்டியநாட்டையடைந்து, ஆங்கு வில்வாரணியத்திலிருக்குந் திருவேடகமென்னுந் தலத்தைக்கண்டு மிகமகிழ்ச்சியுடையவராய் மும்மூர்த்திகளாயும், வேதத்தின் சூக்ஷமப்பொருளாயும், சகல வஸ்துவுமாயும் விளங்கி அடியார்ப்பொருட்டு அவணெழுந்தருளியிருக்குந் திருவேடகநாதனைத் தரிசித்தனர். அப்படித் தரிசித்தவளவில் உள்ளம்நெக்குருகி யானந்தபாஷ்பஞ்சொரிந்து சரீர புளகாங்கிதராய் நான்முகனா லுண்டாக்கப்பட்ட தடாகத்தில் ஸ்நானஞ்செய்து, நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு, பூதிசாதனங்களைப்பூண்டு, திருவேடகநாதனைத் தீர்த்தத்தால் விதிப்படி யபிஷேகஞ்செய்து, ஈரம்புலர்த்திப், பட்டாடைசாத்திச், சந்தனமணிந்து, பின்பு வன்னிவில்வம்முதலிய பத்திரங்களாலும் திவ்யபுஷ்பங்களாலுஞ் சகஸ்ரநாமார்ச்சனைசெய்து, தூபதீபங்காட்டி, இனிய பால்பழம் அறுசுவையுண்டியாதிகளை நிவேதித்துத், தாம்பூலமீந்து, வேதத்திற்கூறிய முறைப்படி சோடசோபசாரமும்புரிந்து, மலரடியில் வீழ்ந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்தார்.

இவ்வண்ணமாய்ப் பராசரர் மூன்றுகாலமு மன்புடனே யாயிர வருடவரை பூசனை யியற்றிவந்தனர். ஒருநாள் நமது கர்த்தனாகிய திருவேடகநாதன் றண்ணருள் சுரந்து பிரத்தியக்ஷமாக, முனிவர் சந்திரனைக் கண்ட சமுத்திரம்போ லானந்தமுற்றுப் பல பல தோத்திரஞ்செய்து நிற்றலும் மங்கையோர் பாகன் அவர் தம் முகத்தைக் கருணையோடு பார்த்து அன்பனே, நீ யாதொன்றுக்கு மஞ்சற்க! நீ யன்புடன் புரிந்த பூசனைக்கு யாமுள மிக மகிழ்ந்தனம். நமதன்பர்கள் வியப்புறும்படிக் கீடற்ற சித்த சுத்தியையும் பெருந் தவத்தினையும் நீ பெறுவை. அன்றியும் நீ எம்மையொத்தனை எமது சாரூபத்தையும் நினக்களித்தனம். இத்தலத்திற் சண்டிகேசுரனுடன் வசித்திரு. மிகுந்த தவப்பேறனைத்துஞ் சித்திப்பதன்றி மூவுலகிற்கும் முதல்வனாயிருக்குக எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினன். அவைகளைத் தனது இருசெவிக் கமுதாய்க் கேட்ட பராசர் கர்த்தனின் கட்டளைப்படி அன்றுதொட்டு நெடுநாள் இறைவன் பூசனையை வழுவறச் செய்துகொண்டாங்கணிருக்கின்றகாலத்தில் ஒருநாள் தனக்குத் திருவேடகநாதர் தரிசனங்கொடுத் தருளிய வரங்களையும் அவர் பேரருட் கருணையின் பெற்றியையும் மனத்தில் நினைத்து ஆனந்த பரவசமுற்றவராய்க் கோயிலுட்புகுந்து அம்மையப்பரிருவரையும் வலம்வந்து பணிந்

தெழுந்து இருகைகளையுஞ் சிரமேற்கூப்பி நின்று தோத்திரம் புரியத் தொடங்கினர்.

மகாதேவனே நினது திருமுகமண்டலம் போற்றி! பிறைச் சந்திரனைத் தரித்த சடாபாரம் போற்றி! மான்மழு விளங்கும் மலர்க்கரம் போற்றி! விண்டுவும் பிரமனுந் தேடுதற்கரிய திருவடிகள் போற்றி! யாகத்தின் உருவாயும், அவற்றைச் செய்பவனாயும், அவற்றின் பலனனைத்துந் தருபவனாயும், வேத சுரூபியாகியும், அதனுட்பொருளாயும், முடிவாயும், தெரிவரிதாயும் வீற்றிருந்தருளும் பெருமானே நினது பொன்னடிகள் போற்றி! ஞாதுருவாகியும், ஞேயமாகியும், ஞானமாகியும், மறைகளுரைக்கும் பேதமாகியும், அபேதமாகியும், பரசுகமாகியும், ஆசிரியனாகியும், மாணவகனாகியும், மெய்ப்பொருளாகிய நாதனாகியும் நிற்கும் பழம்பொருளே நினது மலரடிகள் போற்றி! சீதேவி கொழுநனுஞ் சதுர்முகனுந் தொழுது போற்ற அவர்கட்கு வேண்டும் வரங்கள் அளிக்குந் தரமுடையவனே! கொடிய நமனை யுதைத்து மார்க்கண்டனைக் காத்தருளியவனே! எனதன்னையாகிய ஏலவார் பூங்குழலியைப் பாகங்கொண்டிருப்பவனே! திருவேடகத்திற் றோன்றிய முதல்வனே நினது இணையடிகள் போற்றி! உருக்கமுடன் மனங்கரைந்து திருமுடியின்மேல் ஒருகை நீரும் பத்திரமும் இட்டு இருகை குவித்துத் தொழுமவர்களுக்கு அழிவற்ற கைலாய வாழ்க்கையை யளிப்பவனே! இனிய கனிவர்க்கங்களையும் அறுசுவையுண்டிகளையும் நிவேதிப்பவர்கட்குக் கைம்மாறாகப் பஞ்சதருக்களை யளிக்குங் கண்ணுதலே நினது நற்றிருவடிகள் போற்றி! சம்போ சங்கரா கங்காதரா சாம்பசிவா பரமேசுவரா! பிரமன் சிரத்தினையும், ஆமையோட்டினையும், பன்றியின் கொம்பினையுமணிந்த மார்பை யுடையவனே! காதிற் சங்கக்குண்டலங்களை யணிந்தவனே! தம் போதமற்ற பத்தர்கள் மனத்தில் சார்பவனே! நினது பங்கயத்தாட்கள் போற்றி! எனப் பல தோத்திரத்தாற் றுதித்துப் பேரானந்தக்கடலின் மூழ்கிக் கரைகாணாத பேரன்பை யுடையவராய்ச் சிவபெருமானைப் பார்த்துச் சில வரங்களைக் கேட்கின்றார்.

எந்த க்ஷேத்திரங்களிலும் இந்த க்ஷேத்திரமானது மேன்மையுறல்வேண்டும், இந்த க்ஷேத்திரத்தின்கண் நீ யென்றும் வதிந்திடல்வேண்டும், எனதுபேரால் இந்த க்ஷேத்திரமானது சிறப்புற்று விளங்குதல்வேண்டும், எனது சித்தமுஞ் சுத்தியாதல்வேண்டும், எக்காலத்தும் உன்னைமறவாது துதிக்கின்ற இவ்வடியேன் பெயர்

நினக்கும் உமையவளுக்கும் வழங்குதல்வேண்டும். அன்றியும்
சித்திராபௌர்ணமியில் நின்னை நல்ல புண்ணியதீர்த்தங்களாலபிஷே
கித்து அழகுற வெண்பட்டாடையுடுத்தித் தகுந்த முத்து, கோமே
தகம், வைடூரியம் முதலிய நவரத்தினங்களாலாகிய ஆபரணங்களையும்
நறுமலர்மாலைகளையுஞ்சாத்தி, சந்தனமணிந்து, வில்வதளத்தால் சக
த்திரநாமார்ச்சனைபுரிந்து, தூபதீபங்காட்டி, திவ்வியான்னங்களை
நிவேதித்து, சோடசோபசாரத்தையுங் குறைவறச்செய்து, தேர்
மேலேற்றித் திருவிழாநடத்தித் கண்ணாரக்கண்டு வழிபட்டுச் சந்
தோஷமடையவாயினை இவ்வுலகத்தவரெல்லாம் வணங்கும்படி
வைத்திருக்கச்செய்து, அவர் மனதில் நீயும் ஏலவார்குழலியம்
மையும் நீங்காதுநின்று அவர்களின் சகல இடர்களையுந் தீங்குகளை
யுந் தீர்த்திடல்வேண்டும். இவையே யான் வேண்டுவனவாகும்
என்பதாம். அச்சமயம் திருவேடகநாதர் அம்மையோடு பிரத்தியக்ஷ
மாகி நீ எம்மிடங் கேட்டவரமனைத்துந் தந்தோமெனக்கூறித் தன்
திருவுருவைக்கரந்தருளினர். பின்பு பராசரர் எம்பெருமான் திரு
வருளால் நின்மலராகிப் பிரமதேவனும் அடைதற்கரிய பெரும்
புகழையடைந்தவராய் ஆனந்தபரவசமடைந்து திருவேடகநாதர்
கோயிலுக்கு அழகுறும்படியாகத் திருப்பணி செய்தல்வேண்டு
மென அவாவுற்றுத் தெய்வத்தச்சனைத் தனது தவவலியால் வரவ
ழைத்து, அவனைக்கொண்டு மாடப்பந்திகள், மண்டபங்கள், மதில்
கள், பொன்மயமாகிய கோபுரங்கள் ஆகிய இவைகள் நாற்புறமும்
பொருந்தவும், ஏழுசுற்றுப்பிரகாரங்களையும் பெருஞ்சபைகளையும்
ஆக்கி. சொர்ணவிமானங்களையும் தேர்களையும் யானைகுதிரை முத
லிய பலவாகனங்களையுங் கொடிகளையும் உண்டாக்கினர், துந்துமி
சங்கம் தாளம் முதலிய வாத்தியங்கள் கடலொலிபோலொலிக்க
வும், ஆகாயத்தில் தேவர்கள் புட்பவருடம்பொழியவும், திவ்விய
தோத்திரகீதங்கள் பலபாடவும் விழாவை நடாத்திக்கண்டு மிக
மகிழ்ந்தனர். நமது பெருமானுக்குத் திரிகாலமும் பூசனை தவ
றாது நடந்துவருதற்கான சாதனங்களையும் நந்தவனங்களையு முண்
டாக்கிப் பொன்னாபரணங்களையுஞ் செய்து அணிந்தனர். பிறகு
பராசரமுனிவர் திருவேடகநாதரிடம் விடைபெற்று பலதலங்களை
யும் புண்ணிய தீர்த்தங்களையுந் தரிசித்துக்கொண்டேபோய்ப் பதரி
காச்சிரமத்தில் தனது புத்திரனாகிய வேதவியாசன் தவஞ்செய்வ
தைக்கண்டு ஆங்குச் சிலநாளமர்ந்து, மீட்டும் வில்வாரணியத்தை
யடைந்து சித்திராபௌர்ணமிதோறும் பூசனையை யன்போடுபுரிந்து

வந்தார். அதனால் சகலவினைகளும் நசிப்பப் புண்ணியமேலீட்டால் சிவபெருமான் திருவடிநீழலெய்தினர்.

இவைகளைத் தெளிவாய் எடுத்துச்சொன்ன சூதமுனிவரைச் சவுனகாதிமுனிவர்கள் வணங்கி ஐய! இன்னும் அத்தலத்தைக் குறித்த சரிதங்களேதேனுமிருப்பின் அதனையும் விபரமாகச் செப்பியருள்க'' என வேண்டிக்கொண்டனர்.

பராசரப் படலம் முற்றிற்று.

# குசகேதுப் படலம்.

ஒப்பற்ற அரிய தவங்களைச்செய்து தீவினைகள் யாவையும் ஒழித்து விளங்குஞ் சவுனகாதி முனிவர்களே! பராசர முனிவர் திருவேடகநாதனைப் பூசனை புரிந்து தாம இழிகுல மடந்தையைக் கூடியதாலுண்டாகிய தோஷமனைத்தும் நீங்கிச் சித்தசுத்தியடைந்த கதையினை விபரமாகக் கூறினோம். இனிக் குசகேது என்னும் ஓர் வேந்தன் பத்தியுடன் பூசித்துப் பஞ்சத்தைப்போக்கிய வரலாற்றினையுந் தெளிவாகப் புகல்வோம் கேட்பீராக.

முன்னொருகாலத்தில், எமது கடவுளின் திருவடியில் நீங்காத அன்பையுடைய பத்தசிரோமணியும், மனுநீதி கோடாத செங்கோலையுடையவனும், திறைகொடுக்கும் மன்னர்களின் கிரீடங்கள் தாக்கும்படி வணங்குதலினால் வடுவணிந்த வீரகண்டாமணியைத் தரித்தகால்களை யுடையவனும், நெருப்பைக் கக்குகின்ற நெடிய வேலாயுதத்தை யுடையவனும், தன்னுயிர்போல் மன்னுயிரைக் காத்து ரட்சிப்பவனுமான குசகேது என்னும் நாமத்தைப் பூண்ட ஓர் வேந்தன் வைகைநாட்டில் வில்வாரணியமாகிய திருவேடக நகரத்தில் இருந்தனன். அவன் பிரசைகளுக்கு யாதொரு குறைவும் நேராவண்ணம் உலகத்தை ஒற்றைக்குடை நிழலில் அரசாட்சி புரிந்து வருநாளில் மழைக்குரிய கிரகங்கள் தம்முள் மாறுபட்டுப் போதலும் மாதம் மும்முறைவழங்கும் மாரியானது அந்நாட்டிலில்லாது போயிற்று. அதனால் நீர்வளங்குன்றி விளைவுகள் மாறிக் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. மழையில்லாததினால் பிரசைகள் பஞ்சததால் கஷ்டப்படுவதையுணர்ந்த அம்மன்னன், அக்குறையை நீக்கும்பொருட்டு வேதியர்கட்கு அளவற்ற அன்னதானஞ் செய்தும் பலயாகங்களை வேதவிதிப்படிப் புரிந்தும் மழையில்லை.

மறுபடியுஞ் சிவபெருமானிடத்து அதிக பத்தியையுஞற்றியும் அவன் தோத்திரப்பாக்களைப் பாடியும் அவன் தொண்டர்களைப் பூசித்தும் கொடிய உபவாசமிருந்தும் திருநீறு உருத்திராக்கங்களையடியார்க்குத் தானஞ்செய்தும் மழைபெய்யவில்லை. அதனால் கமமியர்முதலிய தொழிலாளர்கள் தம் வயிற்றுக்குணவின்மையால் தமிரியமிழந்து வருந்துவதானார்கள். இவைகள்யாவும் ஆய்ந்தறிந்த மன்னன் மிக வருத்தமடைந்து நாட்டிற் பஞ்சத்தைப்போக்கிப் பிரசைகளைக் காத்தற்குத் தன்னால் இம்மியளவும் முடியாமலேங்கித் திருவேடகநாதன் திருவடிகளையுன்னித் திடபத்தியுடன் தலோபவாசமுற்றவனாய்க் கிடந்தான். அஞ்ஞான்று தம் அடியாரைப் பலவாறுச் சோதித்து அவர்தந் திடமாகிய பத்திவைராக்கியங்களைக் கண்டு பின்புவந்து அருள்செயும் எமதுபெருமான் அவ்வரசனின் செயலைத் திருவுளத்தில் நினைத்து இதைச் செய்வதானான்.

பெருமைபொருந்திய வெள்ளியங்கிரியினின்றும் இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதனாய் விநாயகர் சுப்பிரமணியர் முதலானவர்களும் ஏனைய பரிவாரங்களுஞ் சூழ்ந்துவரவும் தேவர்கள் முனிவர்கள் பணிந்துபோற்றவும் துந்துமியைந்தும் முழங்கவும் நான்மறைகளு மேத்திவாழ்த்தவும் மதுரைக்கு வடமேற்கு ஒன்றரையோசனை யெல்லையில் வைகைக்குக் கீழ்பாற் பிரகாசித்துக் வில்வாரணியத்திற்கு எழுந்தருளிவந்து வைகாசிமாதம், பூரணை, விசாகநக்ஷத்திரம் மங்களவாரம் நடுப்பகலில் இடபலக்கினத்தில் அந்நாட்டைச்சுற்றி நாற்புறத்தும் பத்து யோசனைதூரத்திற்குச் சிதறும்படியாகத் தனது சடையிலுள்ள மேகத்தினால் சீவர்களெல்லாஞ் சீவிக்கும்படியாய்ப் பெருமழையைப் பெய்வித்தருளினன். அதனைக் குசகேதுமன்னன் ஆவலுடன்கண்டு அளவற்ற ஆனந்தமுற்று எம்பிரானே! நாயேன் வேண்டியபடி, உயிர்கள் பசிப்பிணியினின்றும் நீங்கி உயிர்வாழும்வண்ணம் மழையை வருஷிக்கச் செய்தனை, இப்பெருங் கருணைக்கு யான்செய்யத்தகுங் கைம்மாறு என்னிருக்கின்றது? எனக்கூறித் தனதிருகைகளையுஞ் சிரமேற் கூப்பிநின்று சயபுவேபோற்றி! நீக்கமற எங்கும் நிறைந்துள்ள பரமதயாளுவேபோற்றி! உலகைச் சிருட்டித்துக் காத்து, அழிக்கும் அகிலகாரணனேபோற்றி! தன்னையடைந்த அன்பர்களின் கொடும்பாவங்களைப்போக்கி மோக்ஷமளிக்கும் விமலனேபோற்றி! சகல காரணங்களுக்கும் முதற் காரணமாயிருக்கும் பரம்பொருளேபோற்றி! பிறவிக்கடலைக் கடத்தற்கு மரக்கலமாயுள்ள தேவ

தேவனேபோற்றி! சோதிரூபமாகிய சின்மயப்பொருளே போற்றி! தவம்புரியும் யோகிகளின் இருதயகமலத்தில் மலர்பவனே போற்றி! குற்றமற்ற வடியார்கள் வேண்டு மனைத்தையு மளிக்கும் புராந்தகனேபோற்றி! வித்தியாரூப, அகோர, விஸ்வமூர்த்தியாய் விளங்கும் தனி முதலேபோற்றி! ஏகனுகியும் அநேகனுகியுமிலங் குங் கர்த்தனேபோற்றி! சோமசூரியாக்கினியாகிய திரிநேத்திரங் களை யுடையவனேபோற்றி! என்னையாளுடைய கோவேபோற்றி! எனத்துதித்தனன். அத்தோத்திரங்கட்கு மனமகிழ்ந்தருளிக் கர்த்தன், அவன்முன் பிரசன்னமாகி, ஓ புண்ணியவரசனே! நீ சாற்றிய தோத்திரங்களைக்கேட்டு யாம் மனம்பூரித்தோம். எம்மை யடைந்த மெய்த்தொண்டர்க ளனைவருக்கும் நீயே தலைவன் நீ விரும்பியவற்றைக் கேட்கக்கடவையெனத் திருவாய்மலர்ந்தனன்.

அவ்வருண்மொழியைத் தேவாமிர்தமெனச் செவியாகிய வா யாலுட்கொண்ட மன்னன் தரையில்வீழ்ந்து வணங்கியெழுந்து நின்று பரமதயாளனே! எத்தேவர்க்குங் கிடைக்கப்பெறுத நின் தரிசனையைவிட எனக்குவேண்டுவது யாதிருக்கின்றது? சத் தியலோகவாழ்வும் அற்பமேயாகும் என்றாலும் எனது உளத்தில் மூன்று ஆசையுள்ளன, என்னவெனில் சந்திரசூரியர்க ளுள்ள வரை யித்தலமானது வில்வாரணியமென்னும் பேரையடைதல் ஒன்று கைலையைபபோலிதுவுஞ் சிறப்புற்றோங்கலொன்று; நீ எக் காலத்தும் இங்கு வசித்திருத்தலொன்று; ஆகிய இம்மூன்று வரங் களையும் வேண்டினனெனலும், கருணைவள்ளல் அப்படியே தந் தோமென்று கூறியருளினன். அத்திருவேடகத்தில் எப்பொழு தும் வாசஞ்செய்யும் புல், பூண்டு, செடி, கொடி முதலியவற்றிற் கெல்லாம் முத்தியளிப்பனெனில் மனிதரைப்பற்றிப் புகலவும் வேண்டுமோ? இதுநிற்க) சிவபெருமான் குசகேதுமன்னனுக்கு வரமீந்த நாண்முதல், தென்கைலாயமென்று உலகினரால் போற் றப்படுஞ் சிறப்பினையுடைய அவ்வில்வாரணியத்துள் உமாதேவி புத்திரர்கள் சகிதமாய்த் திருவேடகாதனென்னும் பெயருடனே எழுந்தருளியிருக்கின்றனன். பின்னர் அம்மன்னன் கண்ணுதற் கடவுளுக்கு வசந்தோற்சவஞ் செய்யக்கருதியவனுய் அதனை ஒன் பதுநாள்வரை விதிப்படிநடாத்திப்பத்தாம்நாள் இடபவாகனத்தின் மேல் சுவாமியை உமாதேவிசமேதனுய் எழுந்தருளிவித்துப் பரி வாரங்கள் சூழ்ந்துவரவும் சகல வாத்தியங்களுங் கடல்போலொலி க்கவும் நான்முகனு லுண்டாக்கப்பட்ட தடாகத்துக்குக் கொண்டு

சென்று ஆகமவிதிப்படி மூழ்குவித்து அவபிருதாட்டிக் கோயிலையடைவித்தனன். பின்பு எம்பிரான் திருக்கோயிற்றிருப்பணி செய்தற்குத்தேசித்து மண்டபங்களும், மதில்களும், கோபுரங்களும், ஆயிரக்கால் மண்டபங்களும், யாகசாலைகளும், புண்ணியதீர்த்தக் கரையிற் படித்துறைகளும் அதனடுவில் நீராழிமண்டபமும் உண்டாக்கி, வெள்ளை இடபமும் பெரிய இரதமும் வெண்பொன் செம்பொன்னினால் செய்வித்தனன். நித்திய நைமித்திய பூசைகளோடு உற்சவாதிகளுங் குறைவற நிறைவேறுதற்பொருட்டுத் தன்னாட்டிற்பாதியுபயன்போடு மானியமாகவிட்டுப் பூசைக்குவேண்டிய புட்பங்கள் நிறைந்த பல நந்தவனங்களைக் கோயிலைச்சுற்றி யுண்டாக்கினன். பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்குவருணத்தவரும் ஏதமின்றி வசிக்கற்குரிய பெருவீதிகளையும், கடைவீதிகளையும், பசுமடங்களையும், யானைக்கூடம், குதிரையிலாயம், தேர்ச்சாலையும் பாசறையுமுண்டாக்கினன். இத்தகைய சகல செல்வங்களும்பொருந்தி எந்நகரும் இந்நகருக்கு ஒப்பில்லையென்று கூறும்படியாகப் புதுக்கி: நித்தியோற்சவம், பக்ஷோற்சவம், பிரதோஷமகோற்சவம், சிவராத்திரியுற்சவம், சோமவாரவுற்சவம், திருவாதிரைத்திருவிழா, மாதத்திருவிழா, வருடத்திருவிழா, ரத்தினகண்டிகைத்திருவிழா முதலியனவைகளை விதிப்படிச்செய்து; திருவேடகநாதனையும் ஏலவார்குழலியம்மையையும் நாடோறும் பூசித்துக்கொண்டு அந்நகர்க்கண் அறுபதினாயிரவருடம்வரை வசித்திருந்து ஏடகநாதன் திருவருளால் ஒரு புத்திரனையீன்றனன் அவனுக்குச் சோடனென்றும் பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமா வளர்த்துவந்து ஐந்துவயதில் பள்ளியிலமைத்துச் சகல கலாவல்லபனுக்கித் தக்க வயதுவந்தவுடன் தன்முடியை அவனுக்குச் சூட்டிப் பின்பு சில நாளிருந்து குசகேதுமன்னன் வில்வவனேசனாகிய திருவேடகநாதன் திருவடியடைந்தனன்.

குசகேதுப் படலம் முற்றிற்று.

## திருஞான சம்பந்தப் படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே! கொடிய பஞ்சத்தினால் வருந்திய குசகேது மன்னவன் திருவேடகநாதனைப் பூசித்துப் பஞ்சத்தைப் போக்கிய வரலாற்றினைச் சொன்னோம். இனிச் சமணசமயம்

தோன்றிட அவதரித்தருளிய திருஞானசம்பந்தரின் திவ்வியசரித்தைச் சுருக்கமாகக் கூறுவோம் கேட்பீராக.

சகலவளமுஞ் சிறந்த சோழநாட்டிலே சீர்காழி யென்கின்ற நகரத்திலே வைதிககுல சிரேஷ்டராகிய சிவபாதவிருதையர் என்னும் வேதியருக்கு அவர் முன்செய்துவிட்ட தவக்குறைவை நிறைவேற்ற வந்தவரென்று சொல்லும்படி ஒருபுத்திரர் அவதரித்தார். அதனால் சிவபாதவிருதையர் மனமகிழ்ச்சிகொண்டு சகல சடங்குகளையுந் தமது குலாசாரப்படிச் சிறக்கச்செய்து அநேக தானதருமங்களிபற்றி அன்போடு வளர்த்துவர அப்புத்திரர் நாளுக்குநாள்வளர்பிறைபோல் வளர்ந்துமூவாண்டுடையவரானார். அப்போது ஓர்நாள் நியமமாய் நீராடச்செல்லுந் தமது பிதாவின் பின்னே தாமுஞ்செல்லப் பிள்ளையார் யத்தனிக்கத் தந்தையார் தடுத்துங் கூடாமையால் அவரைத் தம்முட னழைத்துச்சென்று ஆங்குள்ள தோணியப்பர் ஆலயத்திலுள்ள தடாகத்தின்கரையில் நிறுத்திவைத்துவிட்டு, நீராடிக்கொண்டிருக்குந் தருணத்தில், பிள்ளையாருக்கு அதிகப் பசியுண்டானமையால் தோணியப்பரின் ஆலயக் கோபுரத்தைப் பார்த்தவண்ணம் அம்மா! அப்பா! என அழத் தொடங்கினர். அதைச் செவிமடுத்தருளிய தோணியப்பர் கிருபைகூர்ந்து அம்மையைநோக்கி நீசென்று அக்குழந்தையின் பசிதீரத் தனது முலைப்பாலைப் பொற்கிண்ணத்திற் கறந்து ஊட்டுவாயாகவெனக் கட்டளையிடலும் அம்மை அவ்விதமே கிண்ணத்திற்பாலைக் கறந்து அத்துடன் ஞானத்தையுஞ் சேர்த்து ஊட்டியருளப் பிள்ளையார் உண்டு பசிதீர்ந்து நின்றுகொண்டிருக்கையில், ஸ்நானத்தை முடித்துக் கரையேறிய தந்தையார் குழந்தையின் கடைவாயில் பாலொழுகி யிருப்பதைக்கண்டு கோபமடைந்தவராய்க் கையிலொரு சிறுகோலை ஓங்கிக்கொண்டு "யாவர் கொடுத்தபாலை அச்சமின்றி யுண்டாய்" என்று அதட்டிக் கேட்டலும் பிள்ளையா ரழுதுகொண்டு தமக்கு ஆகாயத்தில் பார்வதிசமேதராய் இடபவாகனத்தின்மேல் தோன்றிய தோணியப்பரைச் சுட்டி "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்து காட்டியருளினர். கிடைத்தற்கரிய அத்திவ்விய காட்சியைக்கண்ட தந்தையார் கையிலிருந்த கோலை எறிந்துவிட்டு ஆனந்தக்கூத்தாடி அச்சிவபெருமானைப் பலதோத்திரங்களாற் றுதித்தலும் அவர் மறைந்தருளினர். பின்பு தந்தையார் பிள்ளையாருக்குத் திருஞானசம்பந்தர் என்னுந் திருநாமஞ்சூட்டி யவரைத் தமது தோண்மேற்

கொண்டு கோயிலுட்புகுஞ் சமயத்தில் தடாகக்கரையினிடத்து நடந்த விஷயங்களனைத்தையுங் கேள்வியுற்ற அவ்வூராரும் மற்றைச்சுற்றத்தினருந் திரண்டுவந்து திருஞானசம்பந்தரின் திருவடிகளைப் பணிந்தார்கள். திருஞானசம்பந்தர் தமது தந்தையின் தோண்மேலிருந்தபடியே சுவாமியை வலம்போந்து ஜனங்கள்சூழத் தமது மாளிகையடைந்தனர். மறுநாள் திருக்கோலக்காவுக்குச் சென்று இறைவனைப் பணிந்து பதிகம்பாடலும் அண்ணல் திருவைந்தெழுத்து பொற்றாளம் அவருக்களிக்க அதனைப்பெற்றுப் புறப்பட்டுப் பலதலங்களைத் தரிசித்துப் பதிகங்கள்பாடிப் பற்பலவாகிய அற்புதச்செயல்களை நிகழ்த்திக்கொண்டு திருநாவுக்கரசு சுவாமிகளுடன் திருமறைக்காடென்னும் க்ஷேத்திரத்தை யடைந்தருளினார்.

திருஞானசம்பந்தப்படலம் முற்றிற்று.

# ஏடெதிர்ந்த படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே! ஒப்பற்ற பெருமையினையுடைய திருஞானசம்பந்தரின் பிறப்பையும் அவர்தஞ் சிவதலயாத்திரையையும் சுருக்கமாகச் சொன்னோம். இனிச் சமணர்கள் கழுவேறவும் சைவசமயஞ் செழித்தோங்கவும் அவரால் வைகையிலிடப்பட்ட ஏடு எதிர்ந்தேறிவந்த வரலாற்றையுங் கூறுவோங் கேட்பீராக.

திருமறைக்காட்டின்கண் திருஞானசம்பந்தர் அப்பர்சுவாமிகளோடு வசித்துவருநாளையில், சமணசமயமாம் படுகுழியில்வீழ்ந்து உழன்றுகொண்டிருக்கின்ற பாண்டியனின் பட்டத்தரசியும் சிவநேசச்செல்வியுமாகிய மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டி லெழுந்தருளியிருப்பதை ஒற்றர்களாற் கேள்வியுற்று ஆனந்தபரவச மடைந்தவராய்ப் பாண்டியனுக்குச் சமணசமயத்திலுள்ள பற்றை அவரைக்கொண்டு நீக்கி யுய்விக்கக்கருதி, அவரை மதுரைக்கு அழைத்துவருமாறு சிலபெரியோர்களை அவ்வூருக்கு அனுப்பினர். அவர்கள் திருமறைக்காட்டை யடைந்து ஆங்கு சம்பந்தர் எழுந்தருளியிருக்கும் மடத்தையணுகி, அம்மடக்காவலரைக்கொண்டு சம்பந்தரின் உத்திரவுபெற்றுஉட்சென்று அவர் திருவடிகளிற் பணிந்து நின்றனர். சம்பந்தர் அவர்களை மங்கை

யர்க்கரசியார் க்ஷேமத்தையுங் குலச்சிறையார் க்ஷேமத்தையும் விணுவிய நளிவந்தவர்கள் சுவாமி! மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் நீங்கலாக அந்நாட்டிலுள்ளபாவரும் பாண்டியனும் சமண சமயத்தைக் கைப்பற்றினர். உங்கள் கீர்த்தியைக் கேட்டறிந்த அரசியார் பாண்டியன் முதலியோரை அப்படுஞ்சமயத்தினின்றும் கரையேற்ற வெண்ணிபவராய் மேற்படி விஷயங்களை உங்களுக்குத் தெரிவித்து உங்களை மதுரைக்கு அழைத்துவருமாறு எங்களை யேவனுப்பினார்கள். நீங்கள் யாதுந் தடைசொல்லாது கிருபை கூர்ந்து எழுந்தருளிவந்து அத்துன்பத்தை நீக்கியருளவேண்டுமென்றனர். அதைச்செவியுற்ற ஞானசம்பந்தர் அவ்வாறே மதுரைக்குச் செல்லத் திருவுளங்கொண்டு சிவபிரான் கோயிலுக்குச் சென்று பணிந்து திரும்பித் தாம் மதுரைக்குச் செல்ல உத்தேசித்திருப்பதைத் திருநாவுக்கரசருக்கு உரைத்து விடைகேட்க அவர் சமணர்களின் கொடுஞ்செய்கைகளனைத்தையுந் தெளிவாய் விரித்துக்கூறி அங்குச் செல்வது உசிதமன்றெனத்தடுத்தனர். சம்பந்தர் அதைக்கேட்டு எல்லாம்வல்ல இறைவன் நமதுளத்திலிருக்கும் போது இடையூறு நமக்குண்டாவதுமுண்டோவென்ற பொருளுக்கிடனாப் "வேயுறுதோளிபங்கன்" என்னுந் திருப்பதிகத்தைத் திருவாய்மலராலும் திருநாவுக்கரசர் ஆம் என்றுகூறித் தாமும் அவருடன் மதுரைக்குச் செல்லப் புறப்பட அவர் அவரைத்தடுத்து இப்போது நீங்கள் சோணாட்டிலேயே யிருங்கள் நான்மட்டும் மதுரைக்குப் போய்வருகிறேன் என்று செப்பலும் சம்மதித்து நின்றுவிட்டார். பின்பு சம்பந்தர் அரசியாரா லனுப்பப்பட்டவர்கள் கொண்டுவந்திருந்த முத்துச்சிவிகையிலேறிப் பிரயாணமாகி நடுவிலுள்ள அகத்தியான்பள்ளி உசாத்தானம் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு பாண்டியநாட்டின் தலைநகராகிய மதுரையைக் குறுகலும், சமணர்கள் பலவித துர்நிமித்தங்களையுங் கெட்டகனாக்களையுங் கண்டு அகம் வருந்தியவர்களாய்ப் பாண்டியனுக் கறிவித்து யாது இடையூறு நேரப்போகிறதோவென்ற கவலையுடன் றுணையில்லாதிருந்தார்கள். அச்சமயத்தில் சம்பந்தர் மதுரைக்குள் பிரவேசித்தாரென்று சிலஒற்றர்களால் கேள்வியுற்ற மங்கையர்க்கரசியார் அங்களிகூர்ந்து முதன் மந்திரியாராகிய குலச்சிறையாரைப் பார்த்து நீர் சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்துவாரும் என்று கட்டளையிட்டனர். அவரப்படியே சகல மரியாதைகளுடன் எதிர்கொண்டுவணங்கி யவரையழைத்துச்சென்று ஆங்கணுள்ள ஓர் திருமடத்தில் வீற்றிருக்கும்படிச்செய்தார்.

மங்கையர்க்கரசியாரும் அவர்தம் பாதப்போதைவணங்கிச் சமணர்களால் தங்களுக்கு நேர்ந்துள்ள இடுக்கண்யாவையுங் கூறினர். சம்பந்தர் அவைகளைப்போக்கிச் சைவத்தைத் தழைத்தோங்கச் செய்வோம் நீர் யாதொன்றுக்குங் கவலையடைதல்வேண்டாமெனப் பகர்ந்து விடையளிக்க அரசியார் அரண்மனைசேர்ந்தார். பின்பு அரசியாரின் உத்திரவுப்படி யமைச்சர் சம்பந்தருக்கும் அவருடன் வந்திருந்த திருக்கூட்டத்திற்கும் விருந்தளித்தார்.

இவ்வண்ணமாகச் சிலநாள் நடந்துவராநிற்கையில் சம்பந்தரைக்கண்டும் அவரடியார்களோதும் தேவாரப்பாக்களைக் கேட்டும் மனங்கலங்கிய சமணர்கள் மிகப்பொறாமை யுடையவர்களாய்ப் பாண்டியனிடஞ்சென்று அரசே! சோழநாட்டிலுள்ள சீர்காழிப் பார்ப்பனச்சிறுவனொருவன் அம்பிகாபதியால் ஞான மளிக்கப் பட்டவனென்று கர்வித்து எங்களை வாதில்வெல்லுவதற்காக வந்திருக்கிறான். மதுரையில் சைவர்களாகிய மறையவர்க ளடிக்கடி வருதலினால் அது நமக்கோர் பெரும் இடராகும் எனக்கூறினர். அதைக்கேட்ட பாண்டியன் மிகக்கோபங்கொண்டு அவர்களைப் பார்த்து இப்பொழுது செயக்கடவது என்னையெனக்கேட்க அவர்கள் பார்ப்பன னிருந்துவரும் மடத்திற்கு நாம் தீயிட்டுவிட்டால் அவன் பயந்து ஊரைவிட்டு ஓடிப்போவான். இது நல்லபுத்தியாகுமெனச் செப்பப் பாண்டியனும் அவ்வாறேசெய்கவென அவர்களை யனுப்பிவிட்டு அந்தப்புரஞ்சென்று அதிகக் கவலையுடனிருந்தான்.

திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருக்குந் திருமடத்திற்குத் தீயிட அரசனிடத்திலுத்திரவுபெற்றுச் சென்ற சமணர்கள் மந்திரவலியினால் அக்கினியுண்டாக்க முயற்சித்தனர். அது வந்தும் பயன்படாமற் போனமையால் அம்மடத்தின் நாற்புறமுந் தீயைக் கொளுத்தலும் அவணிருந்த அடியார்கள் அதையவித்து அப்படித் தீயிட்டவர்கள் சமணரெனவறிந்து அதனைச் சம்பந்தருக்கறிவித்தனர். அவர் அடியார்களுக்கிடராகிய இத்துட்டர் செய்கை என்னிமித்தமாய்ப் பாண்டியனுடைய ஆஞ்ஞையால் நடந்ததெனச் செப்பி அரசியாரின் நலத்தினைக்கருதி அந்நெருப்பானது அரசனிடத்து மூளுகவெனநினைத்து "செய்யனே திருவாலவாய்" என்றசீர்[illegible]ங்கி விரைந்துசென்று பாண்டியனையடைகவெனப் பதிகம்புகலலும் அவ்வாறே அவ்வனல் சுரநோயாக அரசனைச் சென்றுபற்றியது. இது நிற்க இரவிலே சமணர்கள் செய்த

கொடுஞ்செயலனைத்தையும் அதனால் மடத்திற்கு யாதொரு தீங்கும் நேரவில்லையென்பதையுங் காலையிலே கேள்வியுற்ற மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாரும் மிகவருந்தி அப்படி நமது சுவாமிக்கு ஏதேனுந் தீங்கு நேருமானால் அவரை இப்பாதகர்கள் வாழும் இந்நகருக்கு வரவழைத்த நாமிருவரும் இறத்தலே சரியெனப் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் அரசன் சுரநோயாலதிகத்துன்பப்படுகிறானெனத் தனது தோழிகளால் சொல்லக்கேட்ட மங்கையர்க்கரசியார் இடிமுழக்கங்கேட்ட நாகசர்ப்பம்போல் மனங்கலங்கி உடனே பாண்டியனிடஞ் செல்லக் குலச்சிறையாரும் அங்கடைந்தார். பிரபல ஆஸ்தான வைத்தியர்கள் பலவாகிய திவ்ய அவுஷதங்களால் சிகிச்சைசெய்தும் நோயடங்காது வருந்த அரசன் பேச்சுமூச்சின்றிக்கிடக்க அதைக்கேட்ட சமணர்கள் அரசன்பால் விரைந்துவந்து நோய்வந்த வரலாற்றினையறியாது தங்கள் மசமந்திரங்களால் சிகிச்சைசெய்யத் தொடங்கவும் நெருப்பில் நெய்விட்டதுபோல் நோயானது மிகுந்ததேயன்றிச் சிறிதுங் குறையவில்லை. அதனால் அரசன் ஒருவரு மிங்கில்லாதொழியுங்களெனக் கூறி அந்நோயின் கொடுமையைச் சகிக்காமல் அறிவிழந்தவனானான்.

இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற மங்கையர்க்கரசியார் மந்திரியாராகிய குலச்சிறையாரின் முகத்தைப்பார்த்து நேற்றிரவு சமணர்கள் செய்ததீங்கு இந்தநோயாய் வந்ததோ வெனக்கேட்க அவர் வணங்கி ஆம் சிவனடியாருக்குத் தீயர்களாற் செய்யப்பட்ட தீங்கேயாகும், இவர்களால் இப்பிணியைப்போக்க வியலாதென்று சாற்றி இருவருமாய் மன்னனை வணங்கி அரசே! சமணர்கள் அடியாருக்கு இன்ன விழைத்தார்கள் அதனால் இத்துன்பம் வந்தெய்தியது. தீயர்கள் செய்யும் உபாயத்தால் இந்நோய்தீராது தூயவர்தலைவராகிய சம்பந்தரால்தான் தீருமெனக்கூற, மன்னன் அப்படியானால் அவரை இங்கு அழையுங்கள்! யாவர் எனதுநோயைத் தீர்த்துவென்றவராவர் அவர்கள்பாற் சேர்வேன் என்றான். அம்மொழிகேட்ட இருவரும் மனமகிழ்வுடன் புறப்பட்டுச்சென்று மடத்தையணுகிச் சம்பந்தரின் திருவடிகளை வணங்கி நடந்த வரலாற்றினை விவரமாகவுரைத்து அவரை யெழுந்தருளுமாறு வேண்டலும் அவர் நீங்கள் யாதொன்றுக்கு மஞ்சற்க. நாம் சமணர்களை வாதில்வென்று அரசனையும் விபூதியணியும்படிச் செய்கின்றோம் உங்கள் துயரத்தை நீக்குங்களெனக் கூறி ஆலயத்துக்குச்சென்று மீனாட்சிசுந்தரேசரை வணங்கிப் பதிகமோதி விடைபெற்றுச் சிவிகையிலேறி அரண்மனையை நாடிச்சென்றனர். இவர் வரவை மந்திரியார் அரசனுக்கு அறிவிக்க அவன் ஆசனமிடச் செய்து அவரை எதிர்கொண்டழைத்து வாருமென, அமைச்சரை யேவினன். அச்சமயத்தில் சமணர்கள் பாண்டியனைக் குறுகி

வேந்தே! எங்களிருதரத்தாரையும் இந்நோய்தீர்க்கும்படிச் சொல்லுவீராக, எங்களால் நோய்தீராவிடினும் எங்களால் தீர்ந்ததென்று சொல்ல நாங்கள் ஆருகதமத மந்திரங்களின் வலிமையறிவோம் இச்சிறுவன்தானோ இந்நோயைத் தீர்ப்பவன் என்று புகன்றனர். அதனைச் செவியுற்ற மன்னன் நான் பொய்யுரைக்கேன் வஞ்சகம் பேசுகின்ற நீங்கள் சொல்லுங் கடவுளின்சார்பால் இந்நோயைத் தீருங்களெனச் சமணர்கள் அதிகக் கவலைகொண்டிருந்தார்கள். சம்பந்தரும் பரிசனங்கள்சூழச் சிவிகையினின்றுமிழிந்து பாண்டியனையடைந்து அவன்முடிக்கருகி லிட்டிருந்த ஆதனத்தில் வீற்றிருந்தருளினார். பாண்டியன் உமது ஊர்யாதெனவினவப் பிள்ளையார் "பிரமனூர் வேணுபுரமென்னும்" பதிகத்தினால் விடையளித்தார். சமணர்கள் மனம்பொறாது அவரை வாதில்வெல்ல நினைத்துப் பொங்கித் தங்கள் மதநூலின் பொருள்களைச்செப்பிக் குரைத்தலும் பாண்டியன் உங்கள் சமயநூற்றுணிபைப் பிள்ளையாருக்குச் சாற்றுமெனச்செப்ப அவர்களெழுந்து மிகவும் வாய்பதறிக் கதறிநின்றார்கள். அரசியார் மன்னனைநோக்கி சமணர்களோ பலர் இவரோசிறுவர் ஆதலால் இந்நோயைத் தீர்த்தமேல் இருதரத்தாரும் வாதுசெய்தற்கு உத்திரவுசெய்தலே நலமாகுமென்றனர். மன்னன் அப்படியே இருதரத்தாரையும் பார்த்து என் நோயைத்தீர்ப்பவர் யாவரோ அவர்பக்கத்தில் சேர்ந்தவன் யானென்றான். சமணர்கள் நாங்கள் இடப்பாகநோயைத் தீர்க்கிறோம் அவரை வலப்பாகநோயைத் தீர்க்கவிடுக வெனக்கூறிப் பீலியினால் தடவி மந்திரித்தலும் நோய் அதிகரித்தது, சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்னும்பதிகத்தைச் செப்பித் திருநீற்றால் வலப்பாகத்தைத் தடவியவளவில் தடாகசலம்போற்குளிர்ந்து நோயகன்றது. இடப்பாகமானது காலாக்கினிபோல் அதிக வெப்புண்டாகவே தங்கள் பீலிகள்தீய்ந்து மிகநடுங்கி அப்பாற்சென்ற சமணர்களை அரசன் பார்த்து வஞ்சகர்களே! நீங்கள் தோற்றீர்கள் என்னை நீங்கிச் செல்லுங்களென்று மொழிந்து சம்பந்தரைச் சிந்தையால் வணங்கி வலப்பாக நோயையுந் தீர்க்கும்படியாய் வேண்டிக்கொண்டனன், அதனையும் திருநீற்றால் பிள்ளையார்தடவ நோய்தீர்ந்தது. அரசன் படுக்கையைவிட் டெழுந்து மனைவி மந்திரியோடு அவர்தம் திருவடிகளை வணங்கினான். சமணர்கள் அரசனைப்பார்த்து இவரை வாதினால்வெல்ல வியலாதாகையால் நெருப்பினாலும் நீரினாலும் ஆகுமெனக்கூறப் பிள்ளையாரும் உங்கள் மதத்துணிபைச் சொல்லுமென, இருவரும் தங்கள்தங்கள் மதத்திறத்தை நெறியிற்காட்டுதலே தகுதியென்றனர். அரசன் எனது நோயைத்தீர்க்க முடியாதவருக்கு என்னவாதென்று வினவ, அதுவே யோர்களவியாக எங்கள் எங்கள் மதக்கருத்தை ஏட்டில்வரைந்து அக்கினி குண்டத்திலிட எது வேகாதிருக்கின்றதோ அதுவே வெற்றி

பெற்ற, மதமாகுமெனப் பிள்ளையாரும் அவர்தங் கருத்துக்கிசைய உடனே அரசனாஞ்ஞையால் சபைமுன்னர் ஏவலாளர் தீயைவளர்த்தார்கள் பிள்ளையார் "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் பதிகத்தை எழுதியிருக்கின்ற ஏட்டை "தளிரிள" என்னும் பதிகத்தைச்செப்பித் தீயிலிட்டும் வேகாது பச்சென்றிருந்தது. தீயராகிய சமணர்களிட்டவேடோ தீய்ந்தது சம்பந்தரிட்டவேட்டை எடுத்துச் சபைமுன்பு சகலருக்கும் விளங்கக்காட்டிப் பின் திருமுறையிற்கோத்தனர். அரசன் வியப்புற்றுச் சமணர்களைப்பார்த்து நீங்களிட்ட ஏட்டை எடுங்களென அவர்கள் தீயையணுகச் சுவாலைவீசியதால் திரும்பலுற்றனர் பின்பு நீரிலுலங்கினியை யளித்துப்பார்க்க ஏடு தீங்கிறையாகியதெனத் தெரிந்தது, மறுபடியுஞ் சமணர்கள் மதக்கருத்தை ஏட்டிலெழுதி ஆற்றிலிட்டால் எந்தவேடு எதிரேறிச் செல்கின்றதோ அவர் பக்கம் வெற்றியெனச் சம்பந்தருஞ் சம்மதித்தார், சமணர்கள் "அத்திநாத்தி" என்னும் பாவை எழுதி வைகையிலிட அது கீழ்த்திசையைநோக்கி யோடிற்று அதன்பின்னுல் அவர்கள் ஓடியுங் காணுதற்குக் கிட்டவில்லை, சம்பந்தர் "வாழ்க வந்தணர்" என்னுந் திருப்பதிகத்தை எழுதிய ஏட்டை ஆற்றிலிட அது மேற்றிசையைநோக்கி எதிரேறிச்சென்றதனுல் அரசன் சைவபத்தியில் மூழ்கினன், அவன் கூனும் நிமிர்ந்தது, அப்பொழுது மந்திரி குலச்சிறையார் ஏட்டை எடுத்துவருவதற்காகக் குதிரைஏறி மேற்றிசையை நாடிச்சென்றனர். ஆளுடையார் "வன்னியும் மத்தமும்" என்னும் பதிகத்தைத் திருவாய்மலராலும் திருவேடு வில்வாரணியத்திற்குச் சமீபமாய் வைகையிற் றங்கிநிற்க அதைப் பணிந்தெடுத்துக் கரையேறி வில்வாரணியத்தீசன் திருவடியைப் போற்றிச் சம்பந்தர்முன்பு கொண்டுவந்து சகலருக்குங்காட்டினர். பாண்டியன் மகிழ்வடைந்து வாதிலே தோல்வியடைந்த சமணராம் பாதகர்களைக் கழுவேற்றுகவென்னக் கட்டளையிட அவ்வாறே அவர்களைக் கழுவேற்றி மகிழ்வடைந்தார்கள். பின்பு சம்பந்தர் பாண்டியனுக்கு நீறளித்தலும் அவன் வணங்கிப் பத்தியுடன் வாங்கித் தரித்துக்கொண்டனன். அந்நாட்டிலுள்ள யாவரும் ஆருகதத்தைக் கைவிட்டுத் திருநீற்றைப்பூசிப் பழயபடிச் சைவராயினர்கள், சைவநெறி உலகமெங்கணுந் தழைத்தோங்கியது.

கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே! மணம்பொருந்திய பூஞ்சோலையடர்ந்த வில்வாரணியத்தில் பிறவிப்பிணியைக் கட்டறுத்த திருஞானசம்பந்தரால் இடப்பட்ட பதிகத்திருவேடு தங்கியகாரணத்தால் அத்தலமானது திருவேடகமென்னுந் திருநாமம் பெற்றது. அங்கு திருஞானசம்பந்தரும் ஒரு சிவலிங்கம் தாபித்தனர்.

ஏடெதிர்ந்த படலம் முற்றிற்று.

# பிரமதீர்த்தப் படலம்.

அளவற்ற தவங்களைச்செய்து பிறவிப்பிணியை யொழித்து நித்தியானந்தமுற்று விளங்குந் சௌநகாதிமுனிவர்களே! திருஞானசம்பந்தர் சமணர்களை வெல்லுதற்காக அவரால் வைகையில் விடப்பட்ட தேவாரப் பாவேடு எதிர்ந்துவந்த வரலாறும், அதனாற் சமணர்கள் கழுவேறியவரலாறுந் தெளிவாய் உங்கட்குக்கூறினேம், இனி அவ்வில்வாரணியத்தில் பிரமனாலுண்டாக்கப்பட்ட பிரமதீர்த்தத்தின் மான்மியத்தையும் விவரமாச் சொல்லுகிறேம் கேட்பீராக.

பிரமனானவன் உலகம்பாவையும் படைக்கு முதற்றொழிலைப் பெறும்பொருட்டு வில்வாரணியத்தை யடைந்து அவ்விடகதிற் றிருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்குந் திருவேடகநாதனை விதிப்படிப் பூசனைசெய்ய அவன் சந்நிதானத்தின்முன்பாக வோர் தடாகத்தையுண்டாக்கி அதற்குந் தனதுபெயரியிட்டனன். பின்பு பூசைக்கான சகலவஸ்துக்களையுங் குறைவறச் சேர்த்துக்கொண்டு, தன்பேரால் உண்டாக்கப்பட்ட தடாகத்தில் கலைமகள் சமேதனாய் ஸ்நானஞ்செய்து கரையேறிப் பட்டாடைபுனைந்து விபூதி ருத்திராக்கங்களைத் தரிக்கவேண்டிய வங்கங்களிலாகமமுறைப்படி தரித்து அநுட்டானங்களையும் பஞ்சாக்கரசெபத்தினையும் முடித்துக் கர்த்தன்கோயிலுட்புகுந்து, தங்கக்கும்பங்களை ஸ்தாபித்து அவற்றில் தன் தடாகத்து நீரைநிரப்பி அந்தச் சலத்திற்காரசனாகிய வருணனை ஆதிலாவாகனஞ்செய்து, உருத்திரசமகம முன்னைய புருடசூத்தம் முதலியவைகளைச்செபித்து, அக் குளிர்ந்த சலத்தாலும் பஞ்சகவ்வியத்தாலும் பஞ்சாமிர்தத்தாலும், க்ஷீரசந்தனாதிகளாலு மிறைவனை யபிடேகித்துப் பூசையைமுடித்துச் சிருட்டிசெயும் வரத்தினைப்பெற்றான்.

பிரமனாலாக்கப்பட்ட அந்தப் பிரமதீர்த்தத்தின் பெருமையைக்கூற ஆயிர நாவைப்பெற்றாலுமுடியாது. அத்தடாகத்தின் மான்மியத்தை உணராதவர்களானாலும் அதில் ஸ்நானஞ் செய்தால் அவர்களின் பாபங்களனைத்துஞ் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும், நெருப்பை அறிந்து தொட்டபோதிலும் அறியாது தொட்டபோதிலும் அது தவறாது சுடுதல் திண்ணம், அதில் மூழ்குவதினாலுண்டாகும் பயனை யுணர்ந்து ஸ்நானஞ்செய்தாலும் அதனையறியாது ஸ்நானஞ்செய்தாலும் முற்சன்மத்தில்செய்த வினைகளைப்போக்கும் அன்றியும் அவ்வில்வாரணியத்துள்ள அத்தீர்த்தத்தில் மூழ்கினோர்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களை யளித்தலாலே

அதனைப் புருடார்த்த தீர்த்தமென்று கூறுவர் மேலோர். இம்மையில் முறைப்படி ஸ்நாநஞ்செய்தவர்கள் மறுமையில் ஆகாயகங்கையில் முழுகுவார்கள், அதிற்றோய்ந்துலாவுங் காற்றானது தங்கள் சரீரத்திற்படப் பெற்றவர்கள் கற்பகவிருக்ஷத்தின் நிழற் காற்றைப் பெறுவர்கள், பிறவிப்பிணியையறவே தீர்க்குமாண்மையுடையவது கண்ரோகங்களும், நாசிரோகங்களும், காதுரோகங்களும், தந்தரோகங்களும், குன்மரோகங்களும், ரணரோகங்களுமாகிய பலபிணிகளையும் போக்குதல் அருமையோ? அதில் ஸ்நாநஞ்செய்தோர்களின் தலையின் மயிர்க்காலினின்று சிதறிய ஓர் துளிநீர் தமது சரீரத்திற் விழப்பெற்றவர்களைப் பிடித்திருந்த பேய் பூதங்களும் பிரமகத்திபாவங்களும் ஓடுதலுண்மை. அத்தீர்த்தக்கரையில் பிதுர்க்களின் பெயரைச்செப்பித் தருப்பணமியற்றிப் பிண்டம் இட்டால் அவர்களடைந்துள்ள நரகத்தைத் துறந்து தேவவிமானமேறிச் சுவர்க்கலோகத்தையடைந்து வாழ்வார்கள். வருடப்பிறப்பிலும், அயனத்தோற்றத்திலும், பன்னிரண்டு மாதப்பிறப்பிலும், அமாவாசை பூரணைகளிலும், சூரியசந்திர கிரகணங்களிலும், சோமவாரத்தினர்த்தோதயத்திலு மகோதயத்திலு மந்நீரில் ஸ்நாநஞ்செய்தோர்கள் கைலையங்கிரியி லளவற்ற கற்பகோடிகாலஞ் சுகித்திருப்பார்கள். ஒருவனிவ்வுலகத்தை விட்டுநீங்கித் தேவருலகையாயினும், சத்தியலோகத்தையாயினும், வைகுந்தத்தையாயினு மடைந்து வாழவிரும்புவானாகில் இப்பிரமதீர்த்தத்தி றவறாது படிதல் வேண்டும். அதில் வாசஞ்செய்யும் மச்சம், கூர்மம், சங்கு, மண்டூகமுதலிய சந்துக்கள் இறந்தபின் கைலையையடைந்து ஆங்குப் பலநாளமர்ந்து பின்னர் மறுபடியும் அவ்வில்வாரணியத்தில் வந்து ஒருசன்மத்தில் வில்வவனேசன் திருவடியிற் கலக்கும். புண்ணிய காலத்தில் அதில் விதிப்படி முழுகித் திருவேடகநாதனை யன்புடன் பூசனைபுரியுந் தொண்டர்கட்கு ஓர் செப்புக்காசு தானமளித்திடில் அக்காசு ஒன்றினால் சுவர்க்கத்து லோர்யுகமவரை வதிந்து வாழ்ந்திடுவர். இவ்வுலகில் மனிதராய்ப் பிறந்தோர்கள் எவ்விதத்தாலாயினு மப்பெருமையுடைய தீர்த்தத்தில் முழுகுதல்வேண்டும், முடியாதெனின் அதிலோர் குடநீரேனும் வருவித்து அதனாற் சரீரத்தைக் கழுவுதல்வேண்டும் அதுவுங் கூடாதாயின் அத்தீர்த்தத்தில் முழுகிவந்தவர்களைப் பயபத்தியுடன்கண்டு அவர்தம் மேனியைத் தழுவுதல்வேண்டும். அதுவு மியலாதாயி னதற்றோய்ந்து வருங் காற்றேனும் மெய்யிற்படச் செய்தல்வேண்டும், அப்பிரம தீர்த்தத்தின் மான்மியமனைத்துஞ் சொல்லக் கடவுளராலும் முடியாதகாரியமேயாகும். ஆதலின் அவற்றைச் சுருக்கி யுங்களுக்குச் சொன்னேன், இனி அவ்வில்வாரணியத் தலச்சிறப்பையும் என்னாற்கூடியவரைத் தொகுத்துச் சொல்லுகிறேன் கேட்பீராக.

பிரமதீர்த்தப் படலம் முற்றிற்று.

# தலவிசேடப் படலம்.

ஆதியிற் பிரமன் படைப்புத்தொழிலையடைய வில்வாரணியத்தை யடைந்து சிவபெருமானைப் பூசித்து வரம்பெற்றுனதலின், அவ்வில்வாரணியமானது கடல்சூழ்ந்த உலகிலுள்ள எல்லாத்தலங்களினு முதன்மையாகும். அத்தலத்தில் வீற்றிருந்தருளும் வில்வவனேசனைக் காதலோடு மனத்திற்றியானித்துப் பரிசுத்தராய் ஓர்நாளாங்குவசித்தோர்கள் தங்களாயுளுள்வரையுங் காசியில்வதிந்த பெரும்புண்ணியத்தை யடைவார்கள். ஏழை ஒருவனுக்கோர் பிடியன்னத்தை யுள்ளன்போடு இட்டவர்கள் கங்கோற்பத்தியென்னுந்தலத்தில் எண்ணிறந்த வேழைகளுக் கன்னமிட்டோரடையும்பேற்றை யடைவார்கள். மற்றையதலங்களில் கோதானம், பூதானம், வஸ்திரதானம், சுவர்ணதானம், கன்னிகாதானம், அன்னதானமுதலிய சோடசதானங்களைச் செய்வதினால் வரும் பயன் அத்தலத்தில் வறியோர்க்கோர் செம்புக்காசு அளித்தலால் வரும். அன்றியும் பிறந்தவருக்குத் திருவாரூராகியும், தரிசித்தவருக்குச் சிதம்பரமாகியும், நினைத்தவருக்குத் திருவண்ணாமலையாகியும், இறந்தவருக்குக் காசியாகியும் விளங்குகின்றது, அத்தலத்தை நினைத்தவர்களும், புகழ்ந்தவர்களும், தரிசித்துப் பணிந்தவர்களும் வாசஸ்தானமாகக் கொண்டுள்ளவர்களும் அன்புடன் தானமளிப்பவர்களும் வில்வவனேசனுக் கபிடேகித்தற்குரிய பாலைத்தரும் பசுமடங்களை நிர்மாணித்து அவைகளுக்கு வேண்டிய உணவூந்தியொரு நோயும் வராதுகாப்பவர்களும் சிரத்தில் கங்கையையும் சந்திரனையுந் தாங்கிக் காப்போராவர். வில்வவனேசனுக்குத் திருமஞ்சனங் கொண்டுவருதற்காகத் தங்கக்குடங்களையும், வெள்ளிக்குடங்களையும், தூபதீபக்கால்களையும், விளக்குகளையும், சோடசோபசாரத்திற்குரிய கருவிகளையுங் குறைவறச் செய்துவைப்பவர்கள் தேவர்மாளிகையில் வசித்திருக்கை பெறுவார்கள்:

அறுசுவை வருக்கான்னங்களையினிமையா யாக்கி அவ்வீசனுக்கு நிவேதித்தவர்கள் உம்பருலகையுற்றுத் தேவமாதர்சூழ்ந்து வாழ்த்த இந்திரபதவியில் வீற்றிருந்து நெடுநாள் அமுதமுண்பார்கள். நித்தநைமித்த பூசைகளையும், விழாச்சிறப்புகளையும் அழகுறச் செய்விப்போர்கள் அந்தியத்தில் உத்தமர்களாய்த் திவ்வியதேகம்பெற்று கைலாயத்தையடைந்து எக்காலமும் வாழ்ந்திருப்பார்கள். வெள்ளையிடபம், யானை, இரதம் முதலிய அளவற்றவாகனங்களைச் செம்பொன்னாற்செய்து அதில் கர்த்தனை ஏற்றி ஊர்வலஞ் செய்வித்தோர்கள் பின்னர் வெள்ளையானையை வாகனமாகக்கொள்வார்கள். அந்த வில்வவனேசனது கோயிற்றிருப்பணிகளை மெய்யன்போடுசெய்யும் செல்வர்கள் இவ்வுலகிற் சகல போகபாக்கியங்

நனுடன் நீண்டநாள் வாழ்ந்திருந்து பின்பு சிவலோகஞ்சென்று சந்ததம் வாழ்ந்திருப்பார்கள். நித்தியநைமித்திய பூசைகளைச் சிறப்பாகச்செய்ய வேண்டுவதற்காகும் பொருள்கள், பூமிகள், காணிகள், கிராமங்கள் முதலியவற்றைக் கொடுத்தவர்கள் சிவ லோகவாழ்வை யடைவார்கள்.

தலவிசேடப் படலம் முற்றிற்று.

## முனிவர்பூசனைப் படலம்.

இவ்வண்ணமாகச் சூதபுராணிகர் பரிசுத்தம் பொருந்திய வில்வாரணியத்திலுள்ள திருவேடகத்தின் மகிமையையும், வில்வவனேசன் பெருமையையும், பிரமநீர்த்தத்தின் மேன்மையையும் மிகத்தெளிவாய்க்கூறி முடித்தலும், சௌனகாதிமுனிவர்கள் மகழ்ச்சியடைந்து புராணங்களைக்கேட்க விருப்பியவர்களுக்கு ஐயந்திரிபறச் செப்பும் அச்சூதமுனிவரைச் சாஷ்டாங்க தண்டமிட்டு எழுந்து நின்று விண்ணப்பஞ் செய்யலாயினர்.

முனிசிரேஷ்டரே! உம்மால் கூறப்பட்ட வில்வாரணிய மான்மியத்தைக் கேட்டதினால் எங்கள் சன்மம் சாபல்யமடைந்தது சகல பாபங்களும் நசிக்கப்பெற்றோம். ஆனாலும் நீர் கிருபையுடன் எத்தலத்தினுஞ் சிறந்ததென்று செப்பிய அத்தலத்தை யடைந்து வில்வவனேசனையும் ஏலவார்பூங்குழலியம்மையையும் பத்தியுடன் பூசனைபுரிதற்கு யாங்கள் விரும்பினோம், அதற்கு நீர் கட்டளையிட்டருள வேண்டுமென்றார்கள், அவ்விதமாகக்கூறிய முனிவர்களைச் சூதர் அன்புடன்பார்த்து ஓ முனிவர்களே! நீங்கள் விரும்பியவண்ணம் இன்றைத்தினமே புறப்பட்டுச் சென்று வில்வாரணியஞ்சேர்ந்து திருவேடகநாதனைத் தரிசித்துப் பூசை செய்யக்கடவீர்களெனப் பணித்து, விடைபெற்றுத் தன திருக்கையையடைந்தனர்.

பின்பு சௌனகாதி முனிவர்கள் நைமிசாரணியத்தினின்று தென்றிசையைநோக்கிப் புறப்பட்டு நடுவிலுள்ள பற்பல தலங்களையும் நதிகளையும், தேயங்களையும், வனங்களையுந் தாண்டிச் சென்று சோழநாட்டைக்கடந்து வைகைத்தீரத்திலுள்ள நெற்கழனிகளிலெல்லாம் அன்னப்புட்கள் சூழ்ந்துவாழுஞ் செழிப்பையுடைய, குண கடலுக்கு மேற்கும், குமரியாற்றிற்கு வடக்கும், குடகிற்கு கிழக்கும், வேங்கடத்திற்குத் தெற்குமாகியுள்ள பாண்டிநாட்டெல்லையை யடைந்து வில்வாரணியத்தைச்சேர்ந்து ஏடகநாதன் கோயிலுட்புகுந்து கோபுரங்கள், விமானங்கள், மதில்கள்,

சடைகள் முதலியவைகளைத் துணைவிழி களிக்கக்கண்டு ஆனந்த முற்றுப் பின்பு பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திரா க்ஷங்களைத்தரித்து ஆகமவிதிப்படித் திருவேடகநாதன்பூசனைசெய் தொடங்கினர்,

நீர்நிறைந்த பொற்கடங்களைத் தாபித்து ருக்கிரமமக பித்து அந்நீராலும், பஞ்சகௌவியங்களாலும், ஆவின்பாலா பஞ்சாமிர்தத்தாலும், கரும்பின்சாற்றாலும், பலகனிகளின்சா லும், சந்தனநீராலும், குப்பதீர்த்தத்தாலும் திருவேடகநா விதிப்படி யபிஷேகித்து, ஈரமபுலர்த்தி, உயர்ந்த பீதாம்பரம்ட து, அளவற்ற ஆபரணங்கள்சாத்தி, நெற்றியில் விபூதிபுண்ட சந்தனமு மணிந்து சடாபாரத்தின்மேல் கொன்றை, ம வன்னியாதி மலர்களைச்சூட்டி, வில்வபத்திரத்தால் அஷ்டோ திர சதநாமங்களா லர்ச்சித்து, தீபதூபங்காட்டித் திவ்யான் களையும் பலாதிகளையுங் குறைவறநிவேதித்துச் சோட சாரஞ்செய்து, தாம்பூலமீந்து பின்பு கருப்பூராரத்திக பணிந்தெழுந்து இருகைகளையுஞ் சிரமேற்கூப்பிநின்று, செ கொன்றைமாலைபணிந்த சடாபாரத்தையுடையவனே போ சதுமுகன் சிருட்டித்தொழிலைச்செய்ய வல்லமையீந்த வ போற்றி! மார்க்கண்ட மகாரிஷிக்கு என்றுமழியாத ஆயுளை த்தேவேபோற்றி! மாலயன் முதலாய தேவர்கள் வணங்குந் வடியுடையவனே போற்றி! வியாசன் வேண்டிய வரத்தினை கர்த்தனே போற்றி! பராசரனாற் செய்யப்பட்ட பூசனையை யுக்கொண்டருளிய தேவேபோற்றி! மநுநீதிகுன்றச் செ லையுடைய குசகேது என்னும் மன்னன்நாட்டை வருத்திய சந்தீர்ந்து உய்யும்படி நல்ல மழையைப்பொழிவித்த தயா போற்றி! கொடிய சமணர்கள் கழுவிலேறும்படிச் சம்பந் லெசப்பட்ட பாவேடு எதிரேறக்கொண்ட திருவேடகநாதனே றி! எனத்தோத்திரஞ்செய்து, மும்முறைவலம்வந்து மறுப சிவபெருமான் கழல்கள் வணங்கி யருள்பெற்றுப் பின்ன வாறே ஏலவார்பூங்குழலியம்மையையும் மற்றுமுள்ள பரி தேவர்களையும் அன்போடு பூசித்து உளம்பூரித்தவர்களாய் பூவின்கண் பிறவாத்தன்மையையடைந்து திருவேடகநாத ஏலவார் பூங்குழலியிடமும் விடைப்பெற்றுத் தங்களது ய னமாகிய நைமிசாரணியம்போய்ச் சேர்ந்தனர்.

முனிவர் பூசனைப்படலம் முற்றிற்று.

———:C:———

## திருவேடகப்புராண வசனம் முற்றிற்று.